

பொன்னி

மாதம் இருமுறை

ஆசிரியர்:
முருகு சுப்பிரமணியன்

க

பொருளடக்கம்

மலர் 3 இதழ் 20

ஆகியோரின் எழுத்தோவியங்கள்

திருவள்ளுவர் ஆண்டு 1980
கார்த்திகைத் திங்கள் 10-ம் நாள்

விலை அணா 5
25—11—49



உயர்தமிழ்ச் சிதம்பரனார்

அவர் பெயரை மறவாதே—தமிழா
அவர் பெயரை மறவாதே
அயலவர் ஆட்சி அகலவே உழைத்த
உயர்தமிழ்ச் சிதம்பரனார்
(அவர்

உவர்க்கடலைப் போலடிமை
வாழ்வினை நீக்கிட
உழைத்துழைத்து மாண்படைந்த
உயர்தமிழ்ச் சிதம்பரம்
(அவர்

அடிமைப் பிணியும் மடமை நோயும்
அடைந்து நொந்த நமது வாழ்வில்
உரிமை காணும் விழைவை எழுப்ப
உழைத்த வீரர் உயர்சிதம்பரம்
(அவர்

சிறையில் அடைத்துச் செக்கிழுத் திடவே
செய்தனர் வெள்ளைக் கொடியவர்; துன்பம்
மறையத் தமிழ்நூல் இயற்றி மகிழ்ந்தார்
மனத்திலே உறுதி படைத்துக் கொண்டாரே
(அவர்

ஓட்டிய வெள்ளைக் கப்பலுக் கொரு
போட்டிக் கப்பலே ஓட்டிக் காட்டி; நம்
நாட்டு விடுதலைக் கிளர்ச்சி தன்னை
நடத்திக் காட்டிய வீரர் சிதம்பரம்
(அவர்

—அம்மான்



ஆந்திர மாகாணம்!

ஒருவாறு ஆந்திரர்களின் நீண்ட நாள் விருப்பம் நிறைவேறி விட்டது; முபபது ஆண்டுகளாக அவர்கள் கண்ட கனவு இன்று நனவாகி விட்டதென்னலாம். அகில இந்திய காங்கிரஸ் காரியக் கமிட்டி ஆந்திரமாகாணப் பிரிவினைக்குச் சம்மதித்து விட்டது. 1950 ஜனவரி 26க்குள் புது ஆந்திர மாகாணம் பெயரளவிலேனும் உருவாகிவிடும்.

மொழிவாரி மாகாணப் பிரிவினை என்பது நேர்மையான கோரிக்கையேயாகும்; காங்கிரஸ்காரர்கள் தங்கள் தேர்தல் வாக்குறுதிகளின்போது மொழிவழி மாகாணம் அமைப்பது உறுதி என்று கூறியே வந்திருக்கின்றனர். ஆனால் அவர்கள் பதவிக்கு வந்த பிறகு எக்காரணங்களினாலோ, இப் பிரச்சினையைத் தட்டிக் கழித்துக் கொண்டே வந்தனர். தார் கமிட்டி என்ற ஒரு குழு நியமனம் செய்து அது இந்தியா முற்றும் சுற்றுப்பயணம் செய்து, விசாரணைகள் நடத்தித் தம் அறிக்கையைச் சமர்ப்பித்தது. அந்த அறிக்கை மொழிவாரி மாகாணப் பிரிவினை நாட்டின் ஒன்றுபட்ட நிலையைக் குலைப்பதாகும் என்று கருதியது. நேர்மையாளர்கள். அவர்கள் வெளியிட்ட கருத்துக்களை ஒப்பவில்லை எனவே காங்கிரஸ் மேலிடம மீண்டும ஜவஹர், வல்லபாய், பட்டாபி மூவரடங்கிய கமிட்டியொன்றை நியமித்து நிலைமையைப் பரிசிலனை செய்யும்படி கோரியது. அவர்கள் அறிக்கை ஆந்திரமாகாணம் உருவாவதற்கு வழிகாட்டியது; சென்னை நகரக் கோரிக்கையை அவர்கள் கைவிட்டால் தனி மாகாணம் கைமேல் கிடைக்குமென்று அவர்கள் சுட்டிக்காட்டினர்; டாக்டர் பட்டாபி இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளும்படி ஆந்திரர்களை இடைவிடாது தூண்டிக் கொண்டே இருந்தார்; ஆனால் பிரகாசம் குழுவினர் 'சென்னையை விட்டு விடுவதா?' என்ற வீராப்புப் பேச்சில் காலத்தை ஓட்டி வந்தனர். உருவான காரியம் ஒன்றும் நிகழவில்லை. சமயம் பார்த்து

டாக்டர் பட்டாபி ஒரு புது வெடிகுண்டை வீசினார். "சென்னை நமக்கில்லையென்றால் தமிழருக்குச் சொந்தம் என்றல்ல அர்த்தம். சென்னையைத் தனிமாகாணமாக்கி விடுவோம்" என்று விசித்திரமான விளக்கம் தந்தார். ஆந்திரருக்கு உச்சி குளிர்ந்தது. ஆந்திரமாகாணக்காங்கிரஸ் கமிட்டி மூவர் அறிக்கையைஒப்புக்கொண்டு தீர்மானம் செய்தது; சென்னையைத் தனிமாகாணமாக்க வேண்டுமென்று வேண்டுகோளும் விடுத்தது. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியும் மூவர் அறிக்கையை ஒப்புக்கொண்டு. ஆந்திர மாகாணம் அமைவதற்குத் தடையில்லை என்று கூறி விட்டது. ஆனால் சென்னை தமிழருக்கே சொந்தம் என்று தெளிவாகத் தீர்மானித்திருக்கிறது. சென்னை அரசினரும் மூவர் அறிக்கையை ஒப்புக்கொள்ளவே, காங்கிரஸ் மேலிடம, ஆந்திர மாகாணம் உருவாவதை ஏற்றுக்கொண்டுவிட்டது; விரைவில் இந்திய அரசினர் புதுமாகாண அமைப்புக்கு ஆவன செய்வரென்று நம்பலாம்.

இத் தனி மாகாணத்தினால் ஆந்திரர்கள் அடையப்போகும் நன்மை ஏதுமில்லையென நாம் அறிவோம். மாகாணங்கள் முனிசிபாலிட்டிகளுக்குள்ள அதிகாரங்களோடு விளங்கும் புதிய அரசியலில் தனிமாகாணம் பெற்றுவிட்டதாலேயே ஒன்றும் சாதித்துவிட முடியாது. வடவர் ஆதிக்கம் என்ற கடிவாளத்



கடைத்தேங்காய் வழிப் பிள்ளையாருக்குக் காணிக்கை!

தின் கீழ் அகப்பட்டுக்கொண்டிருக்கும் சென்னை மாகாணத்தின் தம்பியாக வேண்டுமானால் விளங்கலாம். ஆனால் குறிப்பிடத் தக்க நன்மை யொன்றுண்டு. தமிழர்கட்கும், ஆந்திரருக்கும இம் மாகாணப்பிரிவினை காரணமாகப் பூசல் வளர்ந்து கொண்டே வந்தது. வீண் ஐயுறவு காரணமாக இருபக்கமும் வாதப் பிரதி வாதங்களும், போர்முரசார்ப்பும் வலுத்து வந்தன. இந்த ஆர்ப்பாட்டங்களுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கப் படுமென்று நம்பலாம்.

ஆனால் ஆந்திரர்கள் சென்னை நகரத்தைப் பற்றிக் கொணடுள்ள கருத்து, இந்தச் சூழ்நிலையையும விரைவில் உருவாக விடாது என்றே நினைக்க வேண்டியிருக்கிறது. புது ஆந்திரமாகாணத்துக்குச் சென்னையைத் தற்காலத் தலைநகராகக் கொள்ளுமபடி டில்லியும் கட்டளையிடலாமெனத் தெரிகிறது; ஆந்திரர்களின் எண்ணமும் அதுதான்! இவ்வாறு நேர்ந்தால் தமிழர்க்குச் சென்னை நகரத்தின் மீதுள்ள உரிமையை டில்லி குறைத்து மதிப்பிடுகிறதென்றுதான் பொருள்கொள்ள வேணடும. மேலும் ஆந்திரர் தமக்குக் கிடைக்காத சென்னை தமிழருக்கும கிடைக்கக்கூடாது என்று எண்ணுவது எத்துணை அழுககாறு அவர்கள் உள்ளத்தில் படிந்திருக்கிறது என்பதையே காட்டுகிறது அவர்கள கண்ணுக்குத் தெரியும உண்மையை ஒப்புககொள்ள மறுக்கிறார்கள். ஆசை அவர்கள் கண்ணை மறைக்கிறது.

எனவே சென்னை நகரப் பிரச்னையைத் திட்டவட்டமாகத் தீர்த்துவிடும பொறுப்பு காங்கிரஸ் மேலிடத்தைச் சேர்ந்ததாகும். அவர்கள் மேற்கொள்ளும் 'வழவழாக்' கொள்கையே, இத்தனை சலசலப்புக்கும் காரணமாகும். மூவர் அறிக்கை சென்னை நகரம் தமிழ்நாட்டைச் சேர்ந்தது என்று தெளிவாக அறிவித்து விட்டிருந்துவிட்டால், இத்தொல்லைகள் எத்தனை நாட்களுக்கு முன்பே தீர்ந்து போயிருக்கும். இங்கு அமைதியான சூழ்நிலை ஏற்படுவதை அவர்களும் விரும்பவில்லை என்பதையே அந்த அறிக்கை காட்டுகிறது.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் சென்னை நகரம் தமிழருக்கே என்று அறிஞர் ஆர். கே. சண்முகம் தலைமையில் கூடிய எல்லை மாநாடு மிக விளக்கமாகத் தெரிவித்து விட்டது; அடுத்துக் கூடிய தமிழர் மாநாடும் தமிழ் நாட்டு எல்லையை வரையறை செய்து தீர்மானம நிறைவேற்றியிருக்கிறது. இந்நிலையில் ஆந்திரர்கள்தாம் அடக்கம் பேண வேண்டியது அவசியமாகும. வளர்ந்து வரும் ஆந்திரர்—தமிழர் பூசலுக்கு முடிவு கட்டும் பொறுப்பு அவர்களையே சாருகிறது. காலம் அவர்கள் போக்கில் மாறுதலை ஏற்படுத்துமென்று நாம் திண்ணமாய் நம்புகிறோம்.

பொன்னி

பொங்கல் மலர்
1950 ஜனவரி

'பொன்னி' அன்பர்கள் எதிர்பார்ப்பது போல வரும் தைப் பொங்கலன்று 'பொன்னி' பொங்கல் மலர் வெளிவர ஏற்பாடுகள் நடைபெறுகின்றன என்பதை — மகிழ்ச்சியுடன் அறிவித்துக் கொள்கிறோம் —

o

கடந்த இரண்டு மலர்களின் மூலம் தமிழகமெங்கணும் 'பொன்னி' அடைந்த புகழினைக் குறிப்பிட — விரும்புகிறோம் —

o

நிறையப் பக்கங்கள் — கலைவல்லாரின் மூவண்ண ஓவியங்கள் — சித்திரப் பகுதிகள் — புகைப்பட இணைப்புகள் — தமிழகத்தின் தலை சிறந்த எழுத்தாளர்களின் எழுத்தோவியங்கள்

: முற்றும் ஆர்ட் பேப்பரில் :

நல்ல கலை விருந்து

விலை ரூ 3 - 12 - 0

தபாலில் பெறவிரும்புவோர் ரூ 4/- அனுப்பவேண்டும்.

சந்தாதார் ரூ **3-12-0** அனுப்பினால் போதும்.
அவர்கட்கு அஞ்சல் செலவின்றி அனுப்பப்பெறும்.

ஆங்காங்கு முன்கூட்டியே 'பொன்னி' விற்பனையாளர்களிடம் பதிவு செய்து கொள்வது நலமென்று கூற விரும்புகிறோம்.



காலே 10 மணி ஆகிவிட்டது! இன்னும் இளங்கோ வரவில்லே எனக்கும் பொழுது போவது பெரும் பாரமாயிருந்தது. வாசலேப்பார்த்துக் கொண்டே நின்று கொண்டிருந்தேன். என்றுமில்லாதபடி நான் தெருவைப் பார்த்துக் கொண்டிருப்பது என் இல்லக்கிழத்திக்குச் சிறிதும் பிடிக்கவில்லே;

என், இப்படி நின்று கொண்டிருக்கிறீர்கள்? யாரை எதிர்பாக்கிறீர் கள்?'' என்று கேள்விகளே வீசினுள், என்னிடம்.

''இளங்கோவைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறேன்; காலே எட்டு மணிக்கே வந்து விடுவான். உனக்கென்ன கஷ்டம், நான் இங்கே நிற்ப தில்''என்று சொல்லி முடிப்பதற்குள் ''வணக்கம் தோழரே'' என்றுகூறிக் கொண்டு வழுதியை அழைத்துக்கொண்டே இளங்கோ வந்து சேர்ந்தான்.

''ஏன் இளங்கோ இத்தனே தாமதம்?'' என்று உரையாடலேத் தொடங் கினேன்.

''காரணம் ருசிகரமானது! வழியில் நம் ஊர்க் காங்கிரஸ் கமிட்டித் தலே வர் இளங்கோவைப் பிடித்துக் கொண்டார்......??''என்று வழுதி பதில் சொல்ல ஆரம்பித்தான்.

''இளங்கோவிடம் அவருக்கென்ன வேலே?'' என்று ஒரு கேள்வியை இடையில் செருகினேன் நான்.

''வேலே இருந்துதானே அவனே அழைத்தார்; நானும் பக்கத்தில் இருந் தேன். 'சாதிமுறையைக் காங்கிரஸ் அரசாங்கம் ஒழிக்கப் யோசிறது, பார்த்தாயா செய்தியை!'' என்ருர் மார்பை விரித்துக்கொண்டு. 'நல்ல சேதியாச்சே, இந்த நல்ல புத்திவர இவ்வளவு நாளாயிற்றே உங்கட்கு' என்று அலட்சியமாகப் பதிலளித்தான் இளங்கோ. 'சாதிகள் ஒழிவதில் அரசாங்கத்திற்கு அக்கரை இருக்கிறதென்று மந்திரி கோபால் ரெட்டி அசெம்பிளியில் கூறியிருக்கிருரே. அதைத்தான் சொல்கிறேன்' என்று விளக்கம் சொன்ஞர் கா. க. தலேவர். 'எல்லோருக்கும்தான் அக்கரை இருக்கிறது. அக்கரையைக் காரியத்தில் அல்லவா காட்ட வேண்டும்?' என்று மடக்கினுன் இளங்கோ. அவரும் விடவில்லே. 'கலப்புமணம் செய்து கொள்ளும் இளேஞர்கட்கு அரசாங்க உத்யோகம் தருவதில முதன்மை காட்டப் போகிருர்கள் எங்கள் சர்க்கார். வெறும்வாய்ப் பேச்சில்லே' என்று நிமிர்ந்தபேசினுர் அவர். 'யோசிப்பதாகச் சொல்லியிருக்கிருர். இன்னும் உறுதிகூறி விடவில்லே அமைச்சர்' என்று என் திருத்தத்தை இடையில் மொழிந்தேன். 'அப்படிச் செய்தால் மிகப் பாராட்டத் தக்க செயல்தான், உங்கள் சர்க்காரை இந்தக் காரியத்திற்காக நாங்களும் வாழ்த்துகிருேம' என்று கூறினுன் இளங்கோ. கா. க. தலேவர் பூரித்தே போய்விட்டார்! அவர் முகம் செந்தாமரையாகி விட்டதென்ருல் பார்த்துக் கொள்ளுங்களேன்''

''அப்புறம் வந்து விட்டீர்களாக்கும்'' என்று அலுப்போடு கேட் டேன் நான்.

''வருவோமா? புன்முறுவல் தவழ்ந்தது அவர் முகத்தில். மறுபடியும் பேச்சைத் தொடங்கினுன் இளங்கோ. கா. க. தலேவர் கவனிக்கத் தொடங் கினுர் 'காங்கிரஸ் சர்க்காருக்குச் சாதி யொழிப்பில் அக்கரை இருக் கிறதென்று சொன்னீர்களல்லவா?'என்ருன் இளங்கோ! 'ஆமாம்ப்பா, ஆம். இன்னும் உனக்கென்ன சந்தேகம்?' என்று வியப்புப் பெருகக் கேட்டார் கா. க தலேவர். 'சந்தேகம் இல்லாமல் கேட்பேனு? நாங்கள் செய்கிற பணி எந்த நோக்கத்தோடு என்று உங்கட்குத் தெரியுமல்லவா?' என்று மறுபடியும் கேட்டான் இளங்

கோ. கா. க. தலைவருக்குக் குழப்பம். விளங்கவில்லை, 'என்ன சொல்கிறாய், நீ. விளக்கமாகச் சொன்னால் என்ன?' என்று சொல்லி அவன் முகத்தைப்பார்த்தார். 'நாங்களும் அதாவது எங்கள் இயக்கமும் சாதியை ஒழிக்க வேண்டுமென்பதில் மும்முரமாகப் பணியாற்றுகிறோமல்லவா என்றுதான் கேட்கிறேன்' என்று விளக்கம் தந்தான் இளங்கோ. 'நீங்களா? சரி, சரி. ஆமாம் பணியாற்றுகிறீர்கள். அதனால்தானே எங்கட்கும் சாதியொழிப்பில் அக்கரையிருக்கிறது என்று உங்களிடம் கூறினேன்' என்று அமைதியாக விளம்பினார் கா. க. தலைவர்...''

''நீண்ட நேரம் அவருக்குத் தொல்லை கொடுத்து விட்டீர்கள்! முன்பெல்லாம் உங்களைக் கண்டால் பேசவே மாட்டாரே'' என்று இடையில் என் குரலையும் காட்டிக்கொண்டேன்.

வழுதி தொடர்ந்தான்:

"அப்படியானால் நாங்களும் சாதி ஒழிப்பில் அக்கரை காட்டுகிறோம்; அதற்காகவே பிரசாரம் செய்கிறோம். சர்க்காருக்கும் இப்பணியில் ஆர்வமிருக்கிறது என்று ஒப்புக் கொள்கிறீர்கள்'' என்றான் இளங்கோ.

''பிடிகை பலமாயிருக்கிறதே! ஆமப்பா, ஆம்'' என்று சிரித்துக்கொண்டே ஒப்புக் கொண்டார் கா. க. தலைவர்.

''அப்படியென்றால் எங்கள் பத்திரிகைகட்கு ஜாமீன் கேட்பதும், ஆசிரியர்கள் மீது வழக்குத் தொடருவதும், புத்தகங்களைத் தடை செய்வதும், புத்தகங்கள் எழுதியவர், வெளியிட்டவர் மீது நடவடிக்கை எடுப்பதும் எந்த அக்கரையின் மீது செய்கிறார்கள், உங்கள் சர்க்கார்?'' என்றான் இளங்கோ.

"அதுவா? அதுவா? நீங்கள் வகுப்புத் துவேஷத்தை......வளர்க்கிறீர்கள். அதனால் தான்'' என்று தடுமாறிக்கொண்டே நெட்டுருப் போட்டிருந்த பாடத்தை ஒப்பித்தார் கா. க. தலைவர்.

"ஐயன்மீர். இந்த வாதம் இனிமேல் செல்லாது. 'திராவிடநாடு' ஜாமீன் வழக்கில் தீர்ப்புச் சொல்லியிருக்கிறார்களே, படித்துப் பார்த்தீரா?'' என்று இளங்கோ மடக்கினான்.

''படித்துப் பார்த்தேன். நீதிபதிகள் 'திராவிடநாடு' இதழில் வந்த கட்டுரைகள் வகுப்புத் துவேஷத்தை உண்டாக்க வில்லை என்று தீர்ப்புக் கூறியிருக்கிறார்கள்'' "மேலும் சாதி முறையைத்தான் கண்டித்திருக்கின்றன'' என்று தொடர்ந்தான் இளங்கோ

''அதற்கும் இதற்கும் என்னப்பா, சம்பந்தம்?'' என்றார் காங்கிரஸ் தலைவர்.

''ஒரே சம்பந்தம்தான். எங்கள் பணியைத் தடைசெய்யச் சர்க்கார் காட்டும் ஒரே குற்றச்சாட்டு 'வகுப்புத் துவேஷிகள்' என்பதுதான். அது அடிபட்டுப் போயிற்று என்றுதான் சொல்லவந்தேன்,'' என்று விரிவுரை செய்தான் இளங்கோ.

''அதற்குள் காங்கிரஸ் தலைவரைத் தேடி ஒரு அன்பர் வந்துவிட்டார் நாங்கள் அரை குறையாகப் பேச்சை முடித்துக்கொண்டு வரவேண்டியதாயிற்று'' என்று சொல்லி நிறுத்தினான் வழுதி.

''அந்த மனிதருக்குப் புரியவைக்க அதிகம் சிரமப்பட்டிருக்கிறாய், இளங்கோ. முழுவதும் புரியவைப்பதற்குள் அவருக்கு வேலை வந்து விட்டது. இன்னொரு நாள் அவரிடம் சென்று குறையையும் தீர்த்துவிட்டு வந்துவிடு'' என்று ஆலோசனை கூறினேன் நான்.

''அது கிடக்கட்டும். கோயிலில் கர்ப்பக் கிருகத்தில் மின்சார விளக்குப் போடலாமா? உன்கருத்தென்ன?'' என்று வேறு விஷயத்திற்குத் திருப்பினான் இளங்கோ.

''என்னைக்கேட்டால் போடலாமென்றுதான் சொல்வேன், நம்மை யார் கேட்கிறார்கள்? கோயிலே அவசிய மில்லை யென்று சொல்லும் பேர்

வழிகள் நாம், நமக்கு ஏன் அந்த விவகாரம்?'' என்று சொல்லிவைத்தேன் நான்.

''இந்துப்பத்திரிகையில் இதைப்பற்றி யாராவது ஒருவர் கடிதம் எழுதிக்கொண்டே இருக்கிறார், நீலகிரியிலிருந்து ஒருவர் எழுதியிருக்கிறார்'' என்று விளக்க ஆரம்பித்தான் இளங்கோ.

''என்ன எழுதியிருக்கிறார்? போடப்படாதென்று தானே'' என்றான் வழுதி.

''அப்படி இல்லை. பழையகாலத்து ரிஷிகளெல்லாம் இப்போதிருந்தால் மூலஸ்தானத்துக்கு மின்சார விளக்குப் போடுவதைக் கட்டாயம் ஆதரிப்பார்கள் என்று'' ''அதிசயமான ஆசாமியாயிருக்கிறாரே'' என்று என் ஆச்சரியத்தைக் கொட்டினேன் இடையில். ''அவர் அந்த அளவில் விடவில்லை, நெய்விளக்கில் விக்கிரகம் கண்ணுக்குத் தெரிவதில்லை. அதனால் மின்சார விளக்குப் போடலா மென்றும், பசுமாட்டை ஏமாற்றித்தான் நெய் தயாரிக்க முடியுமென்றும் மின்சாரம் அப்படியில்லையென்றும் ஒருபோடு போடுகிறார் அவர்''

''பகுத்தறிவுவாதி யாயிருக்கும்'' என்று அவருக்கு ஒரு நற்சான்று அளித்தேன்.

''மற்றொருவர் சென்னைப் பேர்வழி'' அவர் மின்சார விளக்குப் போடுவதை அடியோடு கூடாதென்கிறார்''

''என்ன காரணம் காட்டுகிறார்''

''வெளிச்சம் தெரிவதற்காக விளக்குப் போடுவது என்றாலல்லவோ, அதிகவெளிச்சம் வேண்டுமென்று மின்சார விளக்குப் போடவேண்டும் என்று கேட்கிறார்''

''பின் எதற்காக விளக்குப் போடுவதாம்?''

''அது ஒரு சடங்காம். பட்டப்பகலில் கூட நம் வீட்டுச் சடங்குகளில் விளக்கேற்றி வைக்கிறோமே. அதுவே அது ஒருசடங்கு என்று காட்டுகிறது என்று வாதிக்கிறார்''

''பலே ஆசாமியாயிருக்கிறார்''

''மேலும் அவர் இன்று மின்சார விளக்கு என்பார்கள்; நாளை மண்ணெண்ணெய் என்பார்கள். வடஇந்தியாவில் மாதிரி கோயில்களில் எல்லோரும் புழங்குவதற்கு இடம் ஏற்பட்டு விடும், ஒருமரியாதை, பக்தியுணர்ச்சி, எல்லாம் குட்டிச் சுவராகிவிடும். இச் சீர்திருத்தத்திற்கு எல்லை இல்லாமற் போய்விடும். எனவே மின்சார விளக்கு வேண்டாம் என்கிறார்''

''வடஇந்தியாவில் என்ன, இங்கும் தானே கோயிலில் எல்லோரும் புழங்குகிறார்கள்.'' என்று விளங்காமல் கேட்டான் வழுதி.

''அவர் சொல்வது, வடஇந்தியக் கோயில்களில் எல்லோரும் மூர்த்தியின் அருகில் சென்று தொட்டுவணங்க உரிமை இருக்கிறது, அதனால் பக்தியுணர்ச்சி குறைந்து போகிறது என்கிறார்'' என்று இளங்கோ விளக்கம் தந்தான்.

''ஓகோ—அப்படியா? கர்ப்பக்கிருகத்திற்குள் செல்லும் உரிமை 'அவாளுக்கு' மட்டும் இருப்பது பறிபோய்விடு மென்று பயப்படுகிறாராக்கும''

''ஆமாம் உண்மைதானே! முதலில் வெளிச்சத்தை நுழையவிடுவார்கள்; பிறகு மனிதர்களையும் நுழையவிட்டு விட்டால்'' என்று வழுதி அவரிடம் அனுதாபம் காட்டினான்.

''சரியான ஆசாமி. இருட்டாயிருந்தால்தான் காலந்தள்ளலாம். இன்னும் சிலகாலமாவது பிழைப்புநடக்குமென்றுசொல்லாமல்சொல்லிவிட்டார் அந்த மனிதர் சரி—இதோடுஇன்றைய உரையாடல் முடியட்டும்''என்றேன்.

வழுதியும் இளங்கோவும் ''நாளை வருகிறோம்.' என்று கூறி விடை பெற்றுச் சென்றனர்.

—ஆண்டி



கண் திறக்குமா?

— நக்கீரன் —

இருபத்தெட்டாம் அத்தியாயம்
"வாழ்க முதலாளித்வம்"

உலகம் விசித்திரமானது என்கிருர்கள்; மனிதனும் விசித்திரமானவன் தான்.

கல்யாணமாவதற்கு முன்ஞல் லட்சியவாதியாக வாழ வேண்டுமென்று நான் விரும்பினேன். அதற்கு உலகம் என்னை அனுமதிக்கவில்லை.

பழியை ஒரேயடியாக உலகத்தின்மீது போடுவதில் அர்த்தமில்லை என்பதை நான் உணர்கிறேன். உலகம் தங்களை அனுமதித்தாலும் சரி, அனுமதிககாவிட்டாலும் சரி—சிலர் லட்சியவாதிகளாகவே வாழ்ந்து லட்சியவாதிகளாகவே மடியத்தான் செய்கிருர்கள். ஆனல் அதற்கு வேண்டிய மன உறுதி எல்லோருக்குமே இருப்பதில்லையல்லவா?

எனவே, தோல்விக்குநானும் ஓரளவு காரணம் என்பதை, ஒப்புக்கொள்கிறேன்.

இப்பொழுது எனக்குக் கல்யாணமாகிவிட்டது. கல்யாணத்திற்குப் பிறகு என்னிடம் எவ்வளவு பெரிய மாறுதல்!

லட்சியவாதிகள் எல்லோருமே எனக்கு இப்பொழுது வீணர்களாகவும் பைத்தியக்காரர்களாகவும் தோன்றுகிருர்கள். இல்வாழ்க்கையைத் தவிர வேறு எதுவுமே இப்பொழுது எனக்கு உயர்ந்ததாகத் தெரியவில்லை!

பெண்!—அவளுக்காக மனிதன் என்னதான் செய்யக் கூடாது?

நம் உயிரோடும் உடலோடும் ஒன்றிவிடும் பெண்ணைப்போல் இந்த உலகத்தில் வேறு என்ன இருக்கிறது!

"காதலை ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையேதான் காண முடியும்; வேறெங்கும் காண முடியாது" என்பதுதான் எவ்வளவு பெரிய உண்மை!

ஆனால் ஒன்றுமட்டும் நிச்சயம் — எல்லாவற்றுக்கும் எது முக்கியமாகவேண்டுமோ, அது பெண்ணைப் பரிபூரணமாக உணர்ந்து அனுபவிப்பதற்கும் வேண்டியிருக்கிறது.

அது என்ன?— அதுதான் பணம்!

அந்தப் பணத்துக்கோ இப்பொழுது பஞ்சமில்லை. அப்புறம் கேட்கவேண்டுமா?— என்னுடைய வாழ்க்கையில் துன்பமும் இல்லை; துயரமும் இல்லை ஒரே இன்பந்தான்?

நாளடைவில் அந்த இன்பம் தெவிட்டிப்போகவும் இல்லை. ஏனெனில் அது ஒரு வகையாக இல்லை; கலையாக மாறிப் பலவகையாகக் காட்சியளித்தது.

இந்தக் கலை என்று ஒன்று உலகத்தில் இருக்கிறதே, அது என்னைப் போன்ற பணக்காரர்களுக்காகத்தானே இருக்கிறது?

ஏழ்மையிலும் இன்பம் அனுபவிக்க முடியும் என்று சிலர் சொல்கிறார்கள். அவர்கள் நம்முடைய அனுதாபத்துக்கு உரியவர்கள் ஏனெனில், அவர்களுக்கு ஏழையைப் பற்றியும் ஒன்றும் தெரியாது; பணக்காரனைப்பற்றியும் ஒன்றும் தெரியாது. இருவருக்கும் நடுவே இருந்துகொண்டு தங்களுடைய ஜீவனோபாயத்திற்காக எதையாவது சொல்லிக்கொண்டு இருப்பவர்கள் அவர்கள்!

குடிசை வாசத்திலும் கோடைக்கானல் வாசத்திலும் ஒரே இன்பத்தைக் காணமுடி ?மயு

கட்டைவண்டிச் சவாரியிலும் கார்ச் சவாரியிலும் ஒரே இன்பத்தைக் காண முடியுமா?

அத்தர் தெளித்த படுக்கையிலும் ஆகாய வெளியிலும் ஒரே இன்பத்தைக் காணமுடியுமா?

கஞ்சியிலும் கனி ரசத்திலும் ஒரே இன்பத்தைக் காணமுடியுமா?

எச்சில் இலையை நக்குவதிலும் ஏழெட்டு விதங்களோடு சாப்பிடுவதிலும் ஒரே இன்பத்தைக் காண முடியுமா?

கைகட்டிச் சேவகம் செய்வதிலும கட்டளையிடுவதிலும் ஒரே இன்பத்தைக் காண முடியுமா?

'கலீர்' என்ற சிரிப்பிலும், கசிந்தொழுகும் கண்ணீரிலும் ஒரே இன்பத்தைக் காணமுடியுமா?

தனக்குத் தானே உழைத்துச் சாப்பிடுவதிலும், தனக்காக நூற்றுக்கணக்கானவர்களை, ஆயிரக்கணக்கானவர்களை...ஏன் லட்சக் கணக்கானவர்களைக்கூட உழைக்க வைத்துச் சாப்பிடுவதிலும் ஒரே இன்பத்தைக் காணமுடியுமா?

முடியாதுதான்!

பொதுவுடைமைத் தத்துவத்தை உலக முதலாளிகள் ஏன் அவ்வளவு மூர்த்தண்யமாக எதிர்க்கிறார்கள்? அதன் உண்மை நானும் ஒரு முதலாளியான பிறகு அல்லவா எனக்குத் தெரிகிறது?

இன்று எத்தனை பேர் என்னுடைய சுகவாழ்வுக்காகத் தங்கள் வீடு வாசலை மறந்து, மனைவி மக்களை மறந்து, வாயிருந்தும் ஊமைகளாய், கண்ணிருந்தும் குருடர்களாய் உழைத்துக் கொண்டிருக்கிறார்கள்!

அவ்வாறு உழைப்பதற்கு ஒரு கூட்டம் இல்லையென்றால் என்னைப் போன்றவர்களுடைய கதி என்ன ஆவது?

இந்த நிலையில் 'வந்தேமாதரம்' என்று சொன்னவாயால் நான் 'வாழ்க முதலாளித்வம்' என்று சொல்லாமல் வேறு என்ன சொல்வது?

முதலாளித்வத்தின் சக்தியால் இன்று உலகமே என் காலடியில் கிடக்கிறது!

'ஏன்?' என்று கேட்பாரற்றுக் கிடந்த என்னை அறியாமல் இப்பொழுது நகரில் எந்தக் காரியமும் நடப்பதில்லை.

என்னைப் பார்த்தாலும் பார்க்காதவர்கள் போல் சென்றவர்கள் இன்று என்னுடன் பேசவும், ஒருநாள் பழகவும் 'நான் முந்தி', 'நீ முந்தி' என்று போட்டி போட்டுக்கொண்டு வருகிறார்கள்.

என்னுடைய தரிசனத்துக்காகக் காலையிலும் மாலையிலும் இன்று எத்தனையோபேர் என வீட்டு வாசலைத் தேடி வந்து தவங்கிடக்கிறார்கள்.

சட்டசபையில் என்னுடைய உள்ளக் குமுறலை வெளியிடுவதற்கு ஓர் உறுப்பினர் பதவி கிடைக்குமா என்று ஒரு காலத்தில் ஏங்கிக் கொண்டிருந்த என்னைத் தேடி இன்று எத்தனையோ உயர்பதவிகள் வருகின்றன.

அளவுக்கு மீறிய பணத்தின் காரணமாக அந்தப் பதவிகளை ஒப்புக் கொள்வதற்கு மறுத்தால், அது அடக்கத்தின் காரணமாக மறுக்கப் படுகிறதென்றும் பட்டம் பதவியில் மோகமில்லாததின் காரணமாக மறுக்கப்படுகிறதென்றும் திரித்துச் சொல்ல இன்று எத்தனையோ பத்திரிகைகள் தயாராயிருக்கின்றன.

பணம், பணம், பணம் என்று நான் செய்யும் மோசடிகள், துரோகங்கள் எல்லாம் கூட இன்று என்னுடைய திறமை என்று மெச்சப்படுகிறது!

ஆகா! முதலாளித்துவத்தின் சக்தியே சக்தி!

இதை விட்டு விட்டுத் தேசத் தொண்டு என்றும் லட்சியம் என்றும் கூறிக் கொண்டு என்னுடைய காலத்தை வீணாய்க் கழித்தேனே, என்ன அசட்டுத்தனம்!

என்னுடைய அசட்டுத்தனத்தைப் போக்கிய என் குருநாதர் பாரிஸ்டர் பரந்தாமனுக்கு எந்த விதத்தில் நான் நன்றி செலுத்துவது! அவருடைய நட்பு மட்டும் எனக்குக் கிடைத்திருக்க வில்லையென்றால் என்னுடைய கண் திறந்திருக்குமா?

○ ● ○

காங்கிரசுக்கு முழுக்குப்போட்ட அன்று என்னுடைய உள்ளத்தில் மகிழ்ச்சி நிறைந்திருந்தாலும் ஒரே ஒரு சந்தேகம் மட்டும் எழத்தான் செய்தது. அந்தச் சந்தேகம் சாந்தினியைப் பற்றியதுதான். அவளுக்கும்

மறைவு

ஜலகண்டபுரம் தோழர் ப. கண்ணன் அவர்களின் ஒரே சகோதரர் தோழர் அர்த்தனாரி அவர்கள் ஆஸ்துமா நோயால் பீடிக்கப்பட்டு 16-11-49 அன்று உயிர் துறந்தார் என்ற துக்கச் செய்தி கேட்டு மிக வருந்துகிறோம். அவரது பிரிவாற்றாமையால் துயருறும் அவரது குடும்பத்தாருக்கும தோழர் ப. கண்ணன் அவர்கட்கும் நம் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளவிரும்புகிறோம்.

எனக்கும் இடையே உதித்த காதல் ஒரு வேளை என்னுடைய லட்சியத்தைப் பற்றியதாயிருக்கலாம். அந்த லட்சியத்தை நான் கைவிடுவதால் அவள என்மீது கொண்ட காதலைக் கைவிடலாமல்லவா?—இவ்வாறு எண்ணி அன்றுமுழுதும நான் வேதனைப்பட்டுக் கொண்டிருந்தேன். நல்ல வேளையாக அப்படியொன்றும நேரவில்லை. 'காதலொருவனைக் கைப்பிடித்தே யவன் காரியம் யாவினுங் கைகொடு'க்கக் கூடியவளாயிருந்தாள் சாந்தினி. அன்று மாலை நான் விஷயத்தைச் சொன்னதும் அவள் சிரித்தாள். அப்பாவைப் போலவே பெண்ணும் சிரித்தது எனக்கு என்னவோ போலிருந்தது. "ஏன் சிரிக்கிறாய்?" என்று கேட்டேன்.

அவள் மீண்டும் சிரித்தாள்!

எனக்குப் பைத்தியம் பிடித்து விடும்போல் இருந்தது. "யாரைப் பார்த்துச் சிரிக்கிறாய்? என்னைப் பார்த்தா சிரிக்கிறாய்?" என்று நான் இரைந்து கேட்டேன்.

ஏனெனில், அன்றைய தினம் உலகமே என்னைப் பார்த்துச் சிரிப்பது போலிருந்தது எனக்கு. அதற்குச் சாந்தினியாவது மாறுபட்டிருப்பாள் என்று நான் எண்ணியிருந்தேன். அவளும் இப்பொழுது என்னைப் பார்த்துச் சிரிப்பதாயிருந்தால்......?

எனக்கு மிகவும் வேதனையாயிருந்தது. அவளோ சிரிப்பதை நிறுத்திவிட்டு மௌனம் சாதித்தாள்.

"சொல், சாந்தினி? என்னைப் பார்த்தா சிரிக்கிறாய்?" என்று நான் மீண்டும் கேட்டேன்.

"உங்களைப் பார்த்துச் சிரிக்கவில்லை. உலகத்தைப் பார்த்துச் சிரிக்கிறேன்!" என்றாள் அவள்.

எனக்குப் போன உயிர் திரும்பி வந்தது போலிருந்தது: "உலகத்தைப் பார்த்துச் சிரிப்பானேன்?" என்று கேட்டேன்.

"நல்லவர்களையும் தீயவர்களாக்கும் உலகத்தைப் பார்த்துச் சிரிக்காமல் என்ன செய்வதாம்?"

"உலகம் நல்லவர்களைத் தீயவர்களாக்குவதில்லை. தீயவர்களை நல்லவர்களாக்குவதில்லை. எல்லாவற்றுக்கும் அவரவர்களுடைய மனம்தான் காரணமாயிருக்கிறது."

"மனம் காரணமாயிருக்கலாம். ஆனால் அந்த மனம் மாறுவதற்கு உலகம் காரணமாயிருக்கிறது!" என்றாள் அவள்.

அவளுடைய வாதத்தைத் தொடர்ந்து நடத்த அன்று எனக்கு விருப்பமில்லை. ஏனெனில், எல்லாவற்றுக்கும் முன்

லைலா மஜ்னு

உலகிலுள்ள புகழ் பெற்ற காதல் காவியங்களிலே. "லைலா மஜ்னு" ஒரு அற்புதக் காவியம்! உண்மைக் காதலின் மகத்துவத்துக்கு ஒரு எடுத்துக் காட்டு! இந்த அற்புதக் காவியம் இரண்டு ஆண்டுகளுக்கு முன் ஸ்வர்ணலதா, நஜீர் ஆகியவர்களைக் கொண்டு இந்தியில் மிகச் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டது! அதைப் பார்த்துத் தயாரித்த தெலுங்குப் படத்தின் உதட்டசைவுகளுக்கேற்பத் தமிழ் வார்த்தைகளைப் புகுத்தி (டப்பிங்) "தமிழ் லைலா மஜ்னு" வாக மாற்றி யிருக்கிறார்கள் பரணி பிக்சர்ஸார்! படம் சில வகையில் "இந்தி லைலா மஜ்னு"வை விடச் சிறந்து விளங்குகின்றது! பரணிக்கு இது ஒரு முழு வெற்றிதான்! இளம் டைரக்டர் ராமகிருஷ்ண தன் திறமை முழுவதையும் கையாண்டு, இதை உணர்ச்சி மிகுந்த உன்னதமான படமாக்கி யிருக்கின்றார்! சில படங்களில் "உள்ள முருக்கும் காட்சிகள்" டைரக்டர்களின் திறமைக் குறைவால் பாழ்பட்டுப் போவதுமுண்டு. ஆனால் இப்படத்தில் அத்தகைய குறைவே யின்றி. உள்ளமுருக வேண்டிய இடத்தில் உண்மையிலேயே நம் உள்ளம் உருகி விடுகின்றது!

தெலுங்கு "லைலா மஜ்னு" வைப் பார்த்து விட்டு, பின்பு தமிழில் பார்க்கும் போது, படம் அவ்வளவாக ரசிக்கவில்லை! காரணம் உதட்டசைவுகளுக் கேற்பத் தமிழ் வார்த்தைகளை உபயோகப் படுத்தாததேயாகும்! பல இடங்களில் பேச்சு முடிந்துங்கூட உதட்டசைவு காணப்படுகின்றது! உதடு அசையாதிக்ருகும் போது பேச்சு காதில் விழுகின்றது! இங்ஙனம் இந்த "டப்பிங்" செய்யும் முறை சரியாகக் கையளாப் படாததால் நல்ல படங்களும் சோபிதமிழந்து விடுகின்றன. இப்பழக்கம் நாளுக்கு நாள் முன்னேறிக் கொண்டே வருகின்றது நம் தமிழ்ப்பட உலகில்! வேண்டாம் இந்தப் பழக்கம்! தமிழ்ப் படங்களை அசல் தமிழ்ப் படங்களாகவே எடுக்குமாறு படத் தயாரிப்பாளர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்!

நடிகர் தேர்தலிலும், உடை விஷயத்திலும் மிகுந்த கவனம் செலுத்தப் பட்டிருக்கின்றது! அந்தந்தப் பாத்திரங்களுக் கேற்ப நல்ல வேஷப் பொருத்தமுள்ள நடிகர்களைத் தேர்ந்தெடுத்திருக்கும் டைரக்டரைப் பாராட்டத்தான் வேண்டும்! நடிகர்கள் ஒவ்வொருவரும் திறமையுடன் நடித்திருக்கின்றனர். பானுமதியின் உள்ளமுருக்கும் உன்னத நடிப்பை இப் படத்தில் காண்கின்றோம். மற்றெல்லாப் படங்களையும் விட இப்படத்தில் மிகவும் கஷ்டப்பட்டு நடித்திருக்கின்றார். லைலாவாகவே மாறி நடிக்கின்றார் எனலாம். கணவன் வீடுபோகும்போதும் தயா

ஸின் பாட்டைக் கேட்டு மனம் உருகும் போதும், பக்கிரிகளோடு வந்து, பிரேமைப் பிச்சை கேட்கும் கயாஸைக் கண்டு உள்ளம் துடிக்கும் போதும், இவரின் நடிப்பைக் கண்டு கல்மனமும் கரைந்து விடும்! நாகேஸ்வர ராவ், சோக பாத்திரத்தையும் ஏற்றுத் தான் அநாயாசமாக நடிக்க முடியும் என்பதை இப்படத்தில் நிரூபிக்கிறார்! மஜ்னுவாக மாறியதும் இவரின் நடிப்பு பிரமாதம்! சிவராவ் சந்தர்ப்பத்தைத் தக்கபடி பயன் படுத்திக் கொண்டிருக்கிறார்! சில இடங்களில் இவரின் நடிப்பு மிகைப்பட்டுக் காணப் படுகின்றது! மற்றும் ஈராக் பிரபுவாகவரும் ஆஞ்சநேயலு, ஜரீனாகவாக வரும் ஜூனியர் ரஞ்சனி, அமீர் உம்ரியாகவருபவர் முதலிய யாவரும் நன்றாக நடிக்கிறார்கள்! அமீர் சர்வாரியாக வரும், M கிருஷ்ணமூர்த்தியின் நடிப்பைமறக்கமுடியாது!

லலிதா, பத்மினி சகோதரிகளின் நடனம கண்களுக்கோர் விருந்து! பொருத்தமான இடத்தில் நடனத்தைப் புகுத்தி ரசிக்கும் வகையில் அமைத்திருக்கிறார்கள்! காட்சி ஜோடனைகள் மிகவும் அபாரமாகத் தயாரிக்கப் பட்டிருக்கின்றன. லைலாவும், கயாஸும் கனவுலகில் ஆடிப்பாடி மகிழுமிடத்தில் — காட்சி ஜோடனைகளும், பளிங்குத் தரையில் காதலர்களின் பிம்பம் விழும் காட்சியும் மனதைவிட்டு அகல முடியாதவை! பாலைவனக் காட்சிகளும், படத்தின் கடைசியில் வீசும் மணற் காற்றும் தத்ரூபமாகப் படமெடுக்கப் பட்டுள்ளன! காதல் கட்டங்கள் விரசமின்றி அமைந்திருக்கின்றன, பெருமைப்படத்தக்க முறையில். பாடல்களெல்லாம் காதுக் கினிமை தரும் வகையில் அமைந்திருந்தும், இந்தி மெட்டுக்களில் பாடப் படுவதால், படம் பார்த்து வெளியே வந்ததும் அவை நினைவில் நிற்கவில்லை.

கல்லால் அடிப்பது ஒன்றைத்தவிர கயாஸை பைத்தியமென்று, சிறு பிள்ளைகள்கேலி செய்வதாகவும் காட்டியிருந்தால் நன்றாக இருந்திருக்கும்!

படத்தின முடிவைப் பற்றியும் ஏதாவது சொல்லாமலிருக்க முடியவில்லை. படமுடிவில் காதலன் காயாஸ், லைலாவின் பிரேமையைப் பற்றிக் கூறும் அந்த இரண்டொரு வார்த்தைகள் அவசியமேயில்லை! இறந்த பின் வானுலகில் அவர்கள் ஒன்றாகச் செல்லும் காட்சியைக் காட்டியிருக்க வேண்டாம்! மணற்காற்றில் தத்தளித்து, காதலர்கள் இருவரும் நெருங்கி, அணைத்ததும் அந்த அணைப்பிலேயே அவர்கள் உயிரை விட்டிருப்பதாகக் காட்டிப் படத்தை முடித்திருந்தால் முதல்தரமான முடிவாக அமைந்திருக்கும். படம் பார்த்து வெளியேறுபவர்கள், "லைலா—கயாஸ்" இவர்களின் தூய காதலின் மகத்துவத்தை எண்ணிக் கண்ணீருடன் வெளியேறுவார்கள்! இந்திப் படத்தைப் பார்த்துக் காப்பி அடித்த டைரக்டர், அதன் முடிவையும் தக்கவாறு காப்பி அடிக்கத் தவறி விட்டாரோ என்று தான் பரிதாபப் பட வேண்டியிருக்கிறது.

காப்பி அடித்த படம் என்ற ஒரு குறை தவிர, மற்றபடி ஒவ்வொருவரும் அவசியம் பார்க்க வேண்டிய, ஒரு உன்னத காதல் சித்திரம இந்த "லைலா மஜ்னு" தான்!

—சி. கே. ராதாகிருஷ்ணன்

பஸ் ஸ்டாண்டில்...

சுகி

வெயில் சுள்ளென முதுகுத் தோலை உரித்தாலும், மழை சோவெனப் பெய்தாலும், புழுதியை அள்ளி மோட்டார்கள் வாய்நிறைய இறைத்தாலும், பஸ் ஸ்டாண்டுக்கு அருகாக அந்தக் குழந்தை கிடப்பது வழக்கம்.

அதன் அருகே "ஐயாமார்களே, பிள்ளையைப் பெற்ற புண்ணியவான்களே, தாய் செத்துப் போனு, ஒரு சங்கு பால்வாங்க வழியில்லை... மகாராஜா........." என்று குரல் கொடுக்கும் பிச்சைக்காரன் இருப்பது வழக்கம்.

அந்தப்பிராந்தியத்திற்குப்புதிதாக வருகிறபிரயாணிகள் அவசர யுகத்தின் எமவாகனங்களை ஓடிப்பிடிக்க வரும் வேகத்தில் காசை எடுத்து வீசுவார்கள். அக் குழந்தையின் நோஞ்சல் உடல், வெயிலிலே துடிக்கும் துடிப்பு, பிச்சைக்காரனின் கனிவுதரும் சோகச் சொல்... எல்லாம் சேர்ந்து இரண்டு ரூபாய் சராசரி சம்பாதித்துத் தரும். இந்தத் தொழிலுக்குத் தேவையான பசலைக் குழந்தையை அவ்வப்போது மாற்றிக் கொடுக்க, பிச்சைக்கார சமூகத்திலே பிரசவங்கள் நடைபெறுவது உண்டு; பிள்ளைகளை இரவல் பெற்றுவந்து எட்டணு, பத்தணு வாடகை கொடுத்து விட்டுப பாக்கியை வைத்துக் கொள்வான். அவன் மனைவியும் தன்னுல் இயன்றளவு பிச்சைக் காசு சம்பாதித்துக் கொண்டு வருவாள். இருவர் வாழ்க்கைச் சகடமும், செமெண்டு ரோட்டில் போகும் விலையுயர்ந்த மோட்டாராகச் சென்றது.

அவள் கர்ப்பவதி! அவன் அடைந்த ஆனந்தம் சொல்லி முடியாது. தன பிள்ளை பிறந்த உடனேயே தனக்குச் சம்பாதிக்கப் போகிறது; தினசரி, எட்டணு பத்தணு, மிச்சம் வைக்கப் போகிறது என்ற பேரானந்தம். பிறக்கும் பிள்ளை "ஆணு? பெண்ணு?" என்று ஆதங்கம் கொள்ளவில்லை. பிச்சை போடுகிறவர்கள் அதற்காகப் போடவில்லையே. 'பசலை, ஒட்டுக் குழந்தை. பிஞ்சு' என்ற இரக்கத்தினுல் தானே காசு போடுகிருர்கள். தாயற்றது என்ற தாரக மந்திர மல்லவா, மனித மனத்தின் ஈரப்பசையைச் சுரண்டி எடுக்கிறது.

நாளொரு மேனியும், பொழுதொரு பொலிவுமாக வளர்ந்த அவள் உடம்பில் அவன் தாய்மையின் ஜொலிப்பைக் காணவில்லை; வருமானத்தின் வடிவத்தைத்தான் கண்டான்.

அவள் பெற்ருள்—குடிசைக்குள்ளிருந்து வீரிட்டலறும் குரல் கேட்டது. தகப்பனின் ஆனந்தம பெருமிதம் அவன் உள்ளத்தில் துடித்தது. துருப்பிடித்த தகரங்கள் பொருத்தப்பட்ட 'கூரை'க்குள் எட்டிப் பார்த்தான். பிஞ்சு விரல்கள்;

பிஞ்சுக் கால்கள்; குண்டுமணிக் கண்கள். அப்படியே தூக்கிக் கொண்டு பஸ் ஸ்டாண்டுக்கு ஓடிவிடலாமா? வியாபார ரீதி—அந்தப் பழக்க வாசனை—புத்தி தீட்சண்யம் அவன் நினைவைக் கலைத்தன.

மனைவி—குழந்தையை ஆர்வத்தோடு எடுத்தணைப்பதைக் கண்டான். தாயன்பின் எல்லை அவன மனத்தைத் தொடவில்லை.

அன்றையப் பொழுது கழிந்தது.

2

மறுநாள் காலை சூரியன் வாதா மரத்திற்கு அப்பால் வந்து விட்டான். 'பெத்துப் பெருகி'ப் பழக்கப்பட்ட அடுத்த குடிசையிலுள்ள அம்மாக் கண்ணு மருந்தரைக்கும் நெடி அவன் மூக்கைத் துளைத்தது. உள்ளிப் பூண்டின். மணம். அது மணமா? பிச்சைக்காரர்கள வீட்டுச் சுற்றுப்புற நாற்றங்களை யெல்லாம் மறக்க வைத்தது அந்த நாற்றம். கண்ணை மூடி மெய் மறந்திருந்தான்.

"உம் புருசன் தொழிலுக்குப் போகலையா?" என்றாள் பக்கத்துக் குடிசைக்காரி.

"போவாரு" என்றாள் அருமைக் குழந்தையைத் தடவிக் கொண்டே. புருஷன் ஏறிட்டுப் பார்த்தான். புதுமணப் பெண் போல அவள குனிந்து கொண்டாள்.

"இதிலே என்ன வெட்கம் புள்ளே?"

"சும்மா இரு மச்சான். ஆமா, நீ சம்பாரிக்கப் போகலையா?"

"எப்படிப் போக? குழந்தையைக் கொடு"

"என்ன சொன்னே?" இரை கிடைக்காத, புலிபோலப் பார்த்தாள். அவன் சொன்ன சொல் அவள் நெஞ்சைத் தீய்த்திருக்க வேண்டும். வம்புக்கிழுக்க நினைத்து "குழந்தையைக் கேக்கவா செய்தே?" என்று உறுமினாள்.

"இந்தா, பாவாயி. அவரு விளையாட்டுக்குச் சொன்னு, நீ பச்சை உடம்புக்காரி, கோபப படாதே" என்று ஆறுதல் சொன்னாள் பெற்றுப் பழக்கமுள்ள பக்கத்துக் குடிசைக்காரி.

"பாரேன், புள்ளையைக் கேக்கிற துணிச்சலை. என் ராஜாவைக் கொண்டுபோயி, மழுவாக் கொதிக்கிற பஸ் ஸ்டாண்டு தகரக் கொட்டகை வெக்கையிலே, போடலாமா? கரிக்காரு புகைமண்டற இடத்திலே போடவா?"

அவள் குரலில் ஏக்கம் பிறந்தது.

"எல்லாப் புள்ளையும் போலத் துடிக்க விடுவேனா?"

"தெரியும கிள்ளி விடுவே, அழவைக்க வேண்டாமா?"

மருந்தறைத்துக் கொண்டிருந்த அம்மாக்கண்ணு நிமிர்ந்து பார்த்தாள். தன குழந்தையையும் வாடகைக்கு விட்டுப் பணம் வாங்கியிருக்கிறாள், தன்னுடைய குழந்தையும் கிள்ளப்பட்டிருக்கலாமே என்ற எண்ணம் அவளுக்கு.

"இவன் நெஞ்சு சுத்த இரும்பு கல்லு. பசலையாட்டம் துவளுது. இதைக் கேக்கிறானே பாவி"

"திட்டாதே பாவாயி"

"பாரு பாரு. என்னைத் திட்றதை. நீ குழந்தையைக் கொடுக்காட்டிப் போ. நானும்

சும்மா இப்படியே படுத்துக் கிடறேன்''

சொன்னதைச் சாதிக்கக் குப்பை மேட்டில் குடிசை நிழல் கவியும் ஒதுக்கமாகச் சுருட்டிப் படுத்து, கொடுங்கையைத் தலைக்கு அணைவாகக் கொடுத்தான். எங்கிருந்தோ ஓடிவந்த சொறியன் அவன் முதுகோடு முதுகாக மண்ணைப் பறித்த படி படுத்துக் கொண்டது. தன் கோபத்தை, அதன் மீது திருப்பி, ஓங்கி ஒரு அறை கொடுத்தான். பதறி உடலை நெளித்துக் கொண்டு, அடுத்த குடிசையின் நிழலில் ஓடிப்படுத்தது நாய்.


3

குழந்தை, புருஷன்—மனைவி, இவர்களுடைய இன்பக் குமிழியாய் இருப்பதற்குப் பதிலாகக் கசப்பின் விளைநிலமாக இருந்தது. வரும்படி குறைந்தாலும் விட்டுக்கொடுக்கக் கூடாது என்ற வைராக்கியத்தால் அவன் தனது வேலைக்கு எழுந்து போகவில்லை.

அவசரமாகக் காசு தேவைப்பட்ட அபலையொருத்தி இரண்டுமாதக் குழந்தையுடன் அங்கு வந்தவள் ''அண்ணே, நீயேன் வரவேயில்லே. இந்தா இருக்கு புள்ளே, ஒரு நாலணக் கொடு இப்போ. பாக்கியை மத்தியானம் பாலுகொடுக்க வருவேனில்லே, அப்போ வந்து வாங்கிக்கிறேன்'' என்று வலியச் சொன்னாள்.

''இல்லேம்மா, நீ போ. நானு இந்த உத்யோகத்துக்குச் சீட்டுக் கொடுத்திட்டேன். நீயே போய்க் கேளு''

''உன்னை மாதிரிப் பாசாங்குக் குரல் எனக்கு வருமா? இளகாத கல் நெஞ்சமும் அப்படியே வேர்விடுமே. முழு ரூபாயை மாத்தித் தருமம செய்யும்படி ஜாலக்குச் செய்வியே. அது நமக்கு வராது



அண்ணே" என்று தாசா செய்தாள்.

அவன் பேசவில்லை; பத்துப் பதினைந்து நாள் குழந்தை தன் வீட்டில் கிடக்கிறபோது எதற்காக வாடகைக்குக் குழந்தை வாங்க வேண்டும்? அப்படி வாங்கினால் பாவாயிக்குத் தைரியம் ஏறிவிடும். அப்புறம் அவள் தன் சொல்லுக்கு மசிய மாட்டாள்.

இரண்டணாவை — பழைய நன்றியின் காணிக்கையாக எடுத்துக் கொடுத்து வந்தவனை அப்புறப்படுத்தினான்.

பாவாயி இதையெல்லாம் லட்சியம் செய்யாது தெரு வீதியில் கத்திக் கத்தி இரண்டு வாய்ச் சோறு பெறத் தன் வேஷப் பொருத்தங்களுடன் ஆயத்தம் செய்துகொண்டிருந்தாள். சுரைக் குடுக்கையைத் தோளில் போட்டு, கையில் தகரக் குவளையேந்திக் குடிசையை விட்டு வெளியே வந்தாள்.

"இந்தா, புள்ளே கிடக்குது அழாமல் பார்த்துக்க"

அவன் மறுபேச்சுப் பேசவில்லை. அவள் பதிலை எதிர்பார்க்காமல் 'சிலுக் சிலு'க் கென மெட்டி கட்டியம் கூற, தெரு வழியே நடக்க ஆரம்பித்தாள். அடுத்த விநாடி, வெள்ளரிப் பிஞ்சு போலத் துவண்டு நெளிந்த அந்தக் குழந்தையைத் துணியோடு பொதிந்து எடுத்துக் கொண்டு—இது தான் ரொம்பநாள் பழக்கமாச்சே — அவன் பஸ் ஸ்டாண்டு நோக்கி நடந்தான்.

பிரயாணிகளின் பரபரப்பும் ஊருக்கு ஊர் பெயர் சொல்லிக் கத்தும் டிக்கட் போடும் நபர்களின் கூக்குரலும், அவசர யுகத்தின் எமன்களான மோட்டார்களின் இரைச்சலும் ஒன்றோடு ஒன்று இணைந்துகொண்டிருந்த அந்தப் பிராந்தியத்துக்குள் நுழைந்தான்.

குழந்தையைக் கையில் ஏந்திக்கொண்டு, தன் தொழில் நுணுக்கத்தை ஆரம்பித்தான்.

"ஐயாமார்களே, அம்மாக்களே, தாயில்லாச் சீவன்...... நேத்துத்தான் பொஞ்சாதி செத்துப் போனா...ஒரு காலணா மகாராஜாக்களே"

இப்படி இந்த ரீதியில் ஏகத்தின் உச்ச ஸ்தாயியில் கதறினான......இரண்டொரு காலணாக்கள் கதறியடித்து வந்து விழுந்தன, குழந்தை முகத்தில் வெயில் விழவே அது வெப்பம் தாங்காமல் புருவத்தை நெளித்துக் கொடுத்தது. கண்ணைச் செருகிற்று.

அன்று அவன் எதிர்பார்த்ததை விட அதிகப்படியாகக் காசு விழுந்தது. ஆசை வெட்கம் அறியாது என்பார்களே அதேபோல நேரத்தின் ஓட்டத்தைக் கவனியாது "இந்தப் பஸ் அந்தப் பஸ்" என்று ஓடி ஓடிப் பிரயாணிகளின் தயாளத்தைக் காலணா, அரையணா, ஓரணா வாக்கிக் கறந்துகொண்டிருந்தான். பசி தாங்காமல், கரிப் புகையின் நெடி தாங்காமல் வெயிலின் கொடுமை தாங்காமல், குழந்தை அழுதழுது தொண்டை கட்டிப்போயிற்று.

அணாக்கள் விழுகின்ற பெருமிததில் குழந்தையின் தாயை, மனைவியின் கோபத்தீயை மறந்து புறப்படவிருந்த ஒரு பஸ்ஸுக்கு ஓடிக் கொண்டிருந்தான். சுடர் தெறித்துக் கொண்டிருந்த 'கியாஸ்

பிளாண்டில்' கம்பியைத் தள்ளியதும் ஒரு தீப்பொறி படாரென்று தெறித்து, ஓடிக்கொண்டிருந்தவன் கையிலே துவண்ட குழந்தையின் வயிற்றில் பட்டது. அவ்வளவுதான்.

குழந்தை வீரிட்டது. கரிக்காரில் கம்பியைச் சுழற்றியவன் திடுக்கிட்டு ஓடோடி வந்து குழந்தையைப் பார்த்தான. நல்ல வேளை, விழுந்த கங்கு சிறு பொறியாக இருந்ததால் உடல் கொப்பளிக்கவில்லை. இருந்தாலும் பட்ட இடத்தில் ஒரு வடு—தோல் கன்றிக் கரியாக்கி விட்டது.

"ராஸ்கேல், இங்கே சுத்திச் சுத்தி வராதே......அநியாயமா பாவம் பழியை நான் ஏற்க இருந்தேனே......" என்று கோபத்தில்பிடரியில் ஒருகுத்து விட்டான். கரிப்போடுகிறவன. குழந்தைமீது தீக்கங்கு தெறிக்கலாமென அடிக்கடி அவன் எச்சரிக்கை கொடுத்ததுண்டு. இன்று பட்டு விட்டது! அதனுல் கோபம் தாங்காமல், குழந்தைமீது, கொண்ட இரக்கம் காரணமாக ஒரு அடி கொடுத்துத் தன் நிலேயைச் சமாளித்துகொண்டான்.

அடிபட்ட சுரணே ஒரு பக்கம் மனேவி வந்துவிடுவாளோ என்ற திகில் மறுபக்கம். உடம்பை நெளித்துப் பின்னுல் திரும்பிப் பார்த்த போது, "இன்னென்று வையுங்க சாமி. வையுங்க சொல்லறேன்...எம புள்ளேயைத் தூக்கிக்கொண்டு வந்திட்டான். நானு செத்துப் போயிட்டதாகச் சொல்லிப் பிச்சையெடுக்கிருனும் பிச்சை" என்று கூவிக் குழந்தையை வெடுக்கெனப் பிடுங்கிக் கொண்டாள் பாவாயி. அவள் பார்வை, குழந்தைமீது படிந்த கருப்புக்கறை - சாந்துப் பொட்டுபபோலக் கருகியிருந்த வடுமேல் கவிந்தது.

"என்ன இது?"

"நான் சொல்லச் சொல்லக் கரி போடற இடத்திலே வளேயவளேய வந்தான். கங்கு தெறித்து விட்டது. அதுக்காகத்தான் பிடரியிலே கொடுத்தேன்."

பிச்சைக்கு, வெயிலிலும் வெக்கையிலும் கொண்டு செல்லக் கூடாதெனப் பத்துப் பதினேந்து நாளாக வாதாடியவள் குழந்தையின் மேல் நெருப்புக் கங்கு சுட்டிருப்பதைக் கண்டதும், ஆங்காரம் தாங்காமல் சுரைக் குடுக்கையால் ஓங்கி, யடித்தாள். அவன் தலேயெல்லாம் அனுபிஷேகம்!

"எம் மூஞ்சியிலே முழிக்காதே. பாருங்க, எஜமான்களே! எம் புள்ளேயைத் தூக்கி வந்து நானு செத்துப் போனதாகக் காசு வாங்கிருன். நீங்களும் போடுறிங்க"

பஸ்ஸில் இருந்தவர்களுக்கும் காசு போட்டவர்களுக்கும் 'சுரீல்' என்றது. தங்களுடைய இரக்கச் சித்தத்தின் மூடத்தனம் படமெடுக்கவே, இரண்டொருவர் அவனேச் சூழ்ந்த

னர். கூட்டம் கூடியது. அவன் "எம் பிள்ளை தான், எம் பொஞ் சாதிதான் இவ" என்று கதறியும், அடியும் உதையும் குறையவில்லை.

"இனிமே இந்தப் பஸ்—ஸ்டாண்டுக்குள் கால்வைத்தே கருமாதிக்கு எலும்பு இருக்காதுடா" என்று வெளியே அடித்துத் துரத்தினர்கள். புருஷன் அடிபடுவதில்பாவாயிக்குவருத்மில்லை. தண்டனை சரியென்று மனதில் எண்ணினுள். தாய்மைப் பாசம் பதி பாசத்தை விட உச்ச நிலையில் இருந்தது.

அவள், அருகாக இருந்த கடையில் ஒரு துளி தேங்காய் எண்ணெய் வாங்கிக் குழந்தையின் உடம்பில் தேய்த்து விட்டுத்' தன்குடிசை நோக்கி வந்தாள்.

"சீ...போ நாயே. இது உன் வீடு இல்லை" என்ருன் அவள் புருஷன். அவள் நுழைவதைத் தடுத்தான்.

"பிச்சைக்கார மூதிக்கு வீடு வாசல் வேறே கேடா......? எம் பிள்ளையை உன் தொழிலுக்குத் தர மாட்டேன். அதுக்கு வேறே ஆள் பாரு."

"பெரிய, ராசாத்தி மவ, போறயா? மண்டையைப் பிளக்கணுமா?" என்று ஒரு கல்லை எடுத்தான்.

'பெரிய துரை மவன். வைச்சு வாழ்வேன்னு வந்தேன். போய்யா......" என்று குழந்தையைத் தோளில் சாத்திக் கொண்டு அவள் போய்க் கொண்டிருந்தாள். தகரக் குடிசையின் வாசலில் நின்றபடியே அவள் மறைவதைக் கண்டான்.

அதற்குப் பிறகு பாவாயி அந்த ஊருக்கு வரவில்லை. அடுத்த ஊரில் யாரோ ஒரு இருட்டுப் பிச்சைக்காரனுக்குத் துணைவியாக ராஜபோக வாழ்வில் வாழ்வதாக, அந்தப் பிச்சைக்கார சமூகத்தில் பேசிக் கொண்டார்கள் இது இயல்பு.

ஒரு மாதத்திற்குப் பிறகு யார்யாரோ பெற்றெடுத்த இளம் பிள்ளைகள் துணையால் மீண்டும் அந்தப் பஸ்-ஸ்டாண்டில் அவன "ஐயா மகாராஜாக்களே, தாயில்லாப் பிள்ளை..." என்ற பழைய பல்லவியை ஆரம்பித்துத் தொழிலில் முன்னேறிக் கொண்டிருந்தான். அவனை அண்டி இன்னெரு பெண் ஜென்மம் இப்பொழுது தஞ்சம் புகுந்து விட்டது.

இது அங்கு சகஜம். பண்பாடு நிறைந்த அன்ருடச் சம்பவம். ○



"தோழரே! உங்களுக்கு திருமணம் எப்போது?"

"அதெல்லாம் 50-க்கு மேலே தான்!"

"என்ன? 50-க்கு மேலேயா? அத்தனை வயதுக்குப்பிறகா! அப்படியானல் நீங்களும்......?"

"சே சே! அப்படியில்லை. நான் 1950ஐச் சொன்னேன்!"



உன்னுருவே தோன்றுதடி!

உள்ளத்தில் படிந்துவிட்டாய் அழகுருவாய்!
உணர்வுடனே கலந்துவிட்டாய் தமிழ்ச் சுவையாய்!
கள்ளக்கண் பார்வையிலே சொக்கி விட்டேன்
கரைபுரண்டு வருகின்ற காத லாற்று
வெள்ளத்தில் புணையாவாய் என் றுனை நான்
வேண்டியதை மறுத்துவிட்டாய்! உயிர் நிலைக்கக்
கள்ளைத்தான் நம்பினும்அம் மது நிறைந்த
கைக்கிண்ணத் துன்னுருவே தோன்றுதடி!

கச்செதிர்க்கும் உன்மார்பு கலக்க வில்லை
காட்டுமுல்லைச் சிரிப்புந்தான் அசைக்க வில்லை
பச்சைமயில் சாயலுக்கும் பதைக்கவில்லை
பண்ணிறைந்த உன்னிசைக்கும் படிய வில்லை
இச்சைமிகும் பார்வையில்தான் கட்டுண்டேன்
என்ஆசை மறுத்துவிட்டாய்! என்வாழ் வுக்(கு)
அச்சாணி அனையவளே! சோலைசெலின்
அங்கெல்லாம் உன்னுருவே தோன்றுதடி!

இனிக்கின்ற சிலம்பெடுத்தேன் கானற் பாணி
இசைக்கின்றாய்! மாதவியாய் நடிக்கின்றாய்!
கனிச்சாறே சிலம்பொலியும் கேட்கு தடி!
காதலைத்தான் புறக்கணித்துச் சென்று விட்டாய்!
உனக்கென்று கொலைப்பார்வை அமைந்ததுவோ
உயிர்வாழ மனமின்றி நஞ்செடுத்துத்
தினச்சென்றேன் அதனிடத்தும் எனைவாட்டும்
தெரிவையேஉன் எழிலுருவே தோன்றுதடி!

— முடியரசன்

கண்டதுண்டோ!



ஒண்டொடியாள், என்னுயிர்க்கோர் உயிரேபோல்வாள்,
ஓவியன்கை புனைந்தனைய உருவம் கொண்டாள்,
பெண்டகையாள் திருமுகத்தில் பிறழ்ந்தி லங்கும்
பேரமர்க் கண்ணிணைபோலக் கரிய தாகிக்
கண்டார்க்குக் காதல்நோய் ஊட்டிப் பின்னைக்
கடுகியது தீர்க்குமொரு மருந்து மாகி
மண்ணின்மிசை வாடாத குவளை தன்னை
மணிவண்டே எங்கேனும் கண்ட துண்டோ?

அவிர்மணிப்பூண் அணங்கொப்பாள், அழகின் செல்வி,
அமிழ்துநிகர் இன்மொழியாள், அறிவின் மிக்காள்,
செவிப்பொலியும் திருக்குழையாள் செவ்வாய் போலத்
திகழ்முல்லை யரும்பினிரை சேரக் கொண்டு
குவிந்திடினும் ஒளிசிறிதும் குன்றா தாகி,
கூடலினும் பிரிதலினும் குறிப்புக் காட்டித்
தெவிட்டாத்தேன் வழங்கிடுநற் குமுதம் தன்னைச்
சிறுவண்டே எங்கேனும் கண்ட துண்டோ?

பிணைமடமான் மென்னோக்கி, பேசுந் தெய்வம்
பிறைநுதலாள், மயிலியலாள், பிரித லாற்றாத்
துணைவியவள் தனமதைப்போல் என்றும் குன்றாச்
சுடருடன்நல் எழில்நலமும் சூழப்பெற்று,
தனலிடையே ஒளிர்பசும்பொன் வண்ணம் சார்ந்து
தண்மையும்வெம் மையும்வழங்கி, வல்லி யொன்றில்
இணையொத்த தாமரையின் அரும்பு தன்னை
எழில்வண்டே எங்கேனும் கண்ட துண்டோ?

— நா. கு. நமச்சிவாய

உலகப் பெரியார்
கலீலியோ!

இரா. இராமதுரை

"நாஸ்திகன்!"

"பைபிளின் விரோதி!"

"மதக் கொள்கைகளை மண்ணோடு மண்ணாக்க நினைக்கும் உன்மத்தன்!"

"இவன் உன்மத்தன் மட்டுமல்ல; பலே காரியக்காரன்! அதையும் இதையும் கூறி நம்மையெல்லாம் முட்டாள்களாக்க நினைக்கின்றான்!"

"பூமிதான் சூரியனைச் சுற்றி வருகின்றதென்று கூறுகிறான் மடையன்! பைபிளிலே கூறப்பட்டிருக்கின்றது சூரியன் தான் பூமியைச் சுற்றி வருகின்றதென்று. பின் இவன் யார் அதற்கு முற்றும்மாறாகக் கூறுவதற்கு? இவன் இப்படிக் கூறுவதன் மூலம் நமது பூமியின் பெருமையையே குறைக்கின்றான் என்றுதான் கூற வேண்டும்"

"அரிஸ்டாடில் எப்பேற்பட்ட அறிஞர்! அவர் கொள்கைகளையல்லவா பொய் யென்று கூறுகின்றான் இந்த அற்பன்! அரிஸ்டாடிலைவிடத் தன்னைப் பெரிய அறிஞன் என்று இவன் தன்னைப் பற்றி எண்ணிக் கொண்டிருக்கின்றானே! மேதை அரிஸ்டாடில் எங்கே, இந்தச் சிறு அற்பனெங்கே! நெருப்புடன் விளையாடுகிறான் சிறுவன்! எரிமலை உச்சியில் கந்தகக்கிடங்கு கட்டுகிறான் மடையன்! உல்லாசப் படகேறிப் பாயும் அலைகடலில் பிரயாணம் செய்ய நினைக்கின்றான்."

இப்படியாகப் பலப்பலவாகக் கலீலியோவை நோக்கி வெகுண்டுரைத்தார்கள், அவர் காலத்தில் அவர் நாட்டிலே வாழ்ந்துவந்த மதக் குருக்கள் முற்றும கற்றுணர்ந்தோம என அகம்பாவம் கொண்டிருந்த பட்டதாரிகள், பொது மக்கள் ஆகியோர்.

இவ்வளவிற்கும் அவர் செய்த குற்றம? அவர் வாழ்க்கை வரலாறு எடுத்துரைக்கும்!

கலீலியோவின் முழுப்பெயர் கலீலியோ கலீலே என்பதாகும். அவர் இத்தாலிய நாட்டில், அப்பொழுது அறிவுச் செல்வமும, அழகுச் செல்வமும் ஒன்றாக அமையப்பெற்று உன்னத நகரமென ஒளிவீசிக் கொண்டிருந்த பைசா எனும் நகரில் 1564ம் ஆண்டு பிப்ரவரி மாதம் பிறந்தார். அவர் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர்தான். அவர் தாய்தந்தையருக்கோ தனது மகன் நன்றாகப் படித்து டாக்டர் பட்டம் பெறவேண்டுமென்று ஆசை.

ஆதலால் அரிது முயன்று தனது மகனைப் படிக்கவைத்தார்கள் கலிலியோவின் தாய் தந்தையர்.

கலிலியோ நன்ருகப் படித்துக்கொண்டு வந்தார். அவர் இசையிலும், சித்திரம் வரைவதிலும் ஆர்வமுடையவராக விளங்கினர். ஆதலால் அவர் பைசா பல்கலைக் கழகத்தில் சேர்ந்து சித்திரக் கலையைக் கற்க ஆரம்பித்தார். ஆனல் அங்கே, சித்திரம நன்ருக வரைவதற்குக் கணித அறிவும் தேவை யென்பதை அறிய வந்து. பிறகு கணிதம பயில ஆரமபித்தார். கணிதம் பயில ஆரம்பித்தவுடன், அவருக்குக் கணிதத்தில் தனி ஆர்வம் பிறந்தது. அந்த ஆவமே அவரைப் பெரிய மனிதராக்கிற்று.

அவர் திறமையைக் கண்ட ஒரு பெரிய மனிதர் அவரைப் பைசா பல்கலைக் கழகத்திலேயே ஒரு ஆசிரியராக நியமித்தார்.

கலிலியோ காலத்து மக்கள் டாலமி என்பவருடைய வான நூல் கொள்கைகளிலும், மற்றைய விஞ்ஞான விஷயங்களில அரிஸ்டாடில் என்பவருடைய கொள்கைகளிலும் பெரும நம்பிக்கை கொண்டிருந்தார்கள்.

டாலமி என்பவர் எகிப்து நாட்டைச் சேர்ந்த ஒரு பெரிய கணித நிபுணர். அவர் கி. பி. இரண்டாம நூற்ருண்டில் வாழ்ந்தவர். அவர் அநேக உண்மைகளைக் கண்டுபிடித்தவர். எனினும், அவர் கண்டுபிடித்தவை அனைத்தும் உண்மையல்ல. உதாரணமாக அவர் பூமி அசையாமல் ஒரே இடத்தில் நிற்க, சூரியனும், மற்றைய கோள்களும், விண்மீன்களும் பூமியைச் சுற்றி வருகின்றன என்று எழுதிவைத்து விட்டுச் சென்ருர். இக்கொள்கை சரியல்ல என்பது இன்று உலகறிந்த உண்மை! அவரின் அந்தத் தவருன கொள்கையை அவருக்குப்பின் பதின்மூன்று நூற்ருண்டுகள் வரை மக்கள் உணமையென்றே நம்பினர்கள்!

அரிஸ்டாடில் இத்தாலிய நாட்டின பேரறிஞர். இவர் இன்றும் "விஞ்ஞானத்தின் தந்தை"யென உலகத்தாரால் போற்றி அழைக்கப்படுகின்ருர். உலகத்தின மிகப்பெரிய சிந்தனையாளர்களுள இவரும் ஒருவர். அரிஸ்டாடிலின் புகழ் இன்றும உலகைவிட்டு மறையவில்லை, அவர் அநேக உண்மைகளைக் கண்டுபிடித்தார். எனினும அவர் கொளகைகள் அனைத்தும உண்மையல்ல. உதாரணமாக, மாறுபட்ட இடைகளையுடைய இருபொருள்களைச் சமஉயரத்திலிருந்து ஒரே சமயத்தில் தரையை நோக்கிவிட்டால், இடை அதிகமான பொருள் இடை குறைவான பொருளைவிடச் சீக்கிரத்தில் தரையை அடையும் எனபது அரிஸ்டாடிலின் கொள்கைகளில் ஒன்று. இது உண்மையல்ல. இதைததான கணடுபிடித்தார் கலிலியோ.

அவர் மாறுபட்ட இடைகளையுடைய இரண்டு குண்டுகளைப் பைசா நகரத்தின் சாய்ந்த கோபுரத்திலிருந்து ஒரே சமயத்தில் தரையை நோக்கி நழுவவிட்டார். அரிஸ்டாடிலின் கொள்கையின்படி அவைகளில் இடை அதிக

மானது இடை குறைவானதை விடச் சீக்கிரத்தில் தரையை அடையவேண்டும். ஆனால் அவைகள் இரண்டும் ஒரே சமயத்தில் பூமியை அடைந்தன!

அரிஸ்டாடிலின் கொள்கையொன்றைத் தப்பெனக் கலிலியோ நிரூபித்ததைக் கண்டு அரிஸ்டாடிலை ஆதரித்தவர்கள் கலிலியோ மீது காரணமின்றிச் சீற்றங் கொண்டார்கள். தங்கள் கண் முன்பு கலிலியோ செய்துகாட்டிய பரிசோதனையை நம்ப மறுத்தார்கள்; ஆனால் அதே சமயம் அரிஸ்டாடில் எழுதிவைத்துவிட்டுச் சென்ற புத்தகத்தைக் காட்டிக் கலிலியோ கூறுவது உண்மையாக இருக்க முடியாதென்று அவர்கள் வாதிட்டார்கள்! அவர்கள் மட்டுமல்ல, பைசா பல்கலைக்கழகப் பட்டதாரிகளும் கலிலியோ மீது அதற்காகக் கோபங்கொண்டார்கள்! இதற்கிடையில் பணக்காரனொருவனின் கோபத்திற்குள்ளானார் கலிலியோ. மேற்கூறிய காரணங்களாலும், இன்னும் சில காரணங்களாலும கலிலியோ தனது எதிரிகளுக்குப் பயந்து பைசா நகரைவிட்டுப் பிளாரன்சுக்கு ஓடவேண்டியவரானார்.

அந்தச் சமயத்தில் கலிலியோவின் தகப்பனார் இறந்துவிட்டார். கலிலியோ தனது தாயாரையும், ஒரு தம்பியையும், இரு தங்கைகளையும் காப்பாற்ற வேண்டியவரானார்! ஆங்கே கொடுந் துன்பத்தில் இரு ஆண்டுகளைக் கழித்த பிறகு, கலிலியோ பட்டுவாவில் கணிதப் பேராசிரியராக வேலை பெற்றார். ஆங்கே அவர் அமைதியாகப் பதினெட்டு ஆண்டுகளை ஆராய்ச்சியில் கழித்தார். அவருடைய புகழ் எங்கணும் பரவ ஆரம்பித்தது. அவருடைய சொற்பொழிவுகளைக் கேட்க ஐரோப்பாவின் பல பாகங்களிலிருந்தும் மக்கள் வந்து சூழ ஆரம்பித்தார்கள்.

கலிலியோ முதலில் பூமியைக் கதிரவன சுற்றி வருகின்றதென்ற டாலமியின கொள்கையில்தான் நம்பிக்கை கொண்டிருந்தார். எனினும் பின்னர் அவர் தனது ஆராய்ச்சிகளின் மூலம், பூமிதான் சூரியனைச் சுற்றி வருகின்றதென்ற கோபர்நிக்சின கொள்கை உண்மையாக இருத்தல் வேண்டுமென்ற முடிவிற்கு வந்தார்.

கோபர்நிக்ஸ் தார்ன் எனும் ஊரில், போலந்து நாட்டில், கி. பி. 1743-ம் ஆண்டு பிறந்தார் கோபர்நிக்ஸ் சிறந்த வான சாஸ்திரி. அவர் பூமியைக் கதிரவனும், ஏனைய கோள்களும், விண்மீன்களும் சுற்றி வருகின்றன என்ற டாலமியின கொள்கை தப்பாயிருத்தல் வேண்டுமென்று எணணத் தலைப்பட்டு, அநேக நாட்கள் ஆராய்ந்த பிறகு, பூமியும், ஏனைய கோள்களுமே சூரியனைச் சுற்றி வருகின்றன என்ற முடிவிற்கு வந்தார். தனது கொள்கையை விளக்கி ஒரு புத்தகமொன்றும் எழுதினார். ஆனால், அதனை வெளியிட்டால் எங்கே தன் மீது மதக் குருக்களும், மக்களும் வெகுண்டெழப் போகின்றார்களோ என்ற பயத்துடன், தான் சாகுந் தருணத்தில் அதனைப் புத்தகமாக வெளியிட்டார்.

கோபர்நிக்சின் அக்கொள்கையை எடுத்துரைத்தால் தனக்கு ஆபத்து நிச்சயம் என்பதைக் கலீலியோ அறிந்திருந்தும் தனது மாணாக்கர்களுக்கு அதனை அஞ்சாமல் எடுத்துரைத்தார்.

1601ம் ஆண்டில் கலீலியோ சொந்தமாகத் தொலைநோக்காடி(*Telescope*)ஒன்றைசெய்து கொண்டார். வானை நோக்கி முதன்முதலாகத் தொலைநோக்காடியினைத் திருப்பியவர் கலீலியோவாகும். முதன் முதலாகத் தொலைநோக்காடியின் உதவி கொண்டு நிலவினை ஆராய்ந்தார். நிலவிலும பூமி யிலிருப்பதைப்போன்றே மலைகளும்பள்ளத் தாக்குகளும் இருப்பதைக் கண்டுபிடித்தார். ஆனால் அரிஸ்டாடிலை ஆதரித்தவர்கள் அவர் கூற்றை நம்ப மறுத்தார்கள். நிலவு ஒழுங்கான வட்ட வடிவினையும் சம பரப்பினையும் உடையது என்பது அவர்கள் கொள்கை!

பிறகு கதிரவனைச் சுற்றி வரும கோள். (*Planets*)களில் ஒன்றான ஜுபிடரைச் சுற்றிச் சில சிறு கோள்கள் சுற்றி வருவதைக் கண்டுபிடித்தார். அது கலீலியோவின் எதிரிகளுக்குப் பெருஞ் சினத்தை மூட்டியது. அப்படியிருக்க முடியாது என்று அவர்கள் கூறினார்கள். அவர்களில் ஒருவன், "தலையில் இரண்டு நாசித் துளைகள், இரண்டு காதுகள், இரண்டு கண்கள், ஒரு வாய் ஆகிய ஏழு துளைகளே உள்ளன. ஏழு உலோகங்களே உலகில் காணப்படுகின்றன. ஏழு நாட்களைக் கொண்டதே ஒரு வாரம். ஆதலால் ஏழு கோள்கள் தான்வானவெளியில் இருக்கமுடியுமேயன்றி அதற்கு மேல் இருக்க முடியாது" என்று கூறினான்!

தனது கூற்றை நம்பாதவர்களைத் தொலைநோக்காடியின் மூலம் அக் கோள்களைக் காணும்படி அழைத்தார் கலீலியோ. ஆனால் அவர்கள், "வெறுங் கண்களுக்கு அவைகள் புலப்படாததால், அவைகள் உண்மையில் இருக்கமுடியாது" என்று கூறிவிட்டார்கள்! கலீலியோவின் புகழ் பரவ ஆரம்பித்தது. பிளா



ன்ஸ் நகருக்கு மிகுந்த ஊதி யத்துடன் வேலைபுரியச் சென் றார் கலிலியோ. பூமி சூரிய னைச் சுற்றி வருவதுடன், சூரி யனும் தன்னைத்தானே சுற்றி வருகிறது என்பதையும் கண்டு பிடித்தார் கலிலியோ.

கலிலியோவின் புகழ் பரவப் பரவ அவருக்கு எதிரிகளும் மேலும் மேலும் தோன்ற ஆரமபித்தார்கள். எதிரிக ளின் தூண்டுதலின் பேரில் 1611ம் ஆண்டு அவர் நீதி மன்றத்தில் விசாரிக்கப்பட்டு, தனது கொள்கைகளை நாட் டில் பரப்பக் கூடாதெனத் தண்டிக்கப்பட்டார்.

இதற்குப் பிறகு பதினறு ஆண்டுகள் கலிலியோ தனது ஆராய்ச்சிகளைத் தொடர்ந்து நடத்திச் சென்று, தனது கொள்கைகளை விளக்கிப் புத் தகமொன்று எழுதி அதனை 1632ம் ஆண்டு வெளியிட்டார். அதற்காக அவர் மறுபடியும் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட் டார். காரணம் அவர் அப் புத்தகத்தில் சூரியனை பூமி யைச் சுற்றிவருகின்றதென்ற கொள்கைக்கு முற்றும் மாறு கப்பூமியே சூரியனைச் சுற்றிவரு கின்றதென்று எழுதியது தான்!

கலிலியோ நீதிமன்றத்தில், 'பைபிள் மேலுலகத்திற்கு மக் கள் செல்லும் வழிகளைக் கூறு கிறதேயன்றி, மேலுலகத்தின் சுழற்சியைக் கூறவில்லை'' என்று சாதுரியமாக உண் மையை எடுத்துக்கூறினர்.

அவர் கூற்று பைபிள் பிரி யர்களின் புத்திக்கு எட்ட வில்லை! அவர் கூற்று மதக் குருக்களின் மண்டையில் ஏற வில்லை! அவர் கூற்று அக் கால மக்களின் செவிகளிலே நுழையவில்லை!

கடைசியில் "பைபிளின் விரோதி" என்ற பட்டத்துடன் சில நாட்கள் சிறைத் தண்ட னையும் பரிசாகப் பெற்றுர் கலி லியோ. இருபத்திரண்டு நாட் கள் சிறையிலே கழித்தார்.

பிறகு அவர் தொடர்ந்து ஆராய்ச்சிகள் பல நடத்தி, புத்தகங்கள் பல எழுதி வெளியிட்டார். வானின் அதி சயங்களைக் கண்டு களித்து உலகுக்கெடுத்துரைத்த கலி லியோ தனது கடைசிகாலத தில் கண்பார்வை இழந்து வானின் அதிசயங்களைக் கண்டு களிக்க இயலாதவ ரானுர். அவர் தனது 78-ம வயதில் இயற்கை எய்திஞர்.

உலகத்தின் உண்மைச் சுழற்சியைக் கண்டு பிடித்த கலிலியோவிற்கு அக்கால உலகமளித்த பரிசு "பைபிள் விரோதி' என்ற பட்டம்! முற் றும கற்றுணர்ந்தோமென எண்ணிக்கொண்டிருந்த அக் காலப் பட்டதாரிகள மேதை யான கலிலியோவிற்கு அளித்த பட்டம் "முட்டாள்" என்பது! மேலுலகத்திற்கு மக் கள் செல்வதற்கு வழிகாட்டி யாகப் பூலோகத்தில் வாழ்ந்து வந்த அக்கால மதக்குருக்கள், 'மேலுலகின் உண்மைச் சுழற் சியைக் கண்டறிந்த கலிலியோ விற்குச் செய்த உபகாரம ஏள னம்! கொடுத்த பட்டம் "நாஸ்திகன்" என்பது!

உலகின் உண்மைச் சுழற்சி யைக் கண்டறிந்து அஞ்சாமல் எடுத்துரைத்த கலிலியோ உண்மையிலேயே ஒரு உலகப் பெரியார்! ○

உயர்திரு உல்லாசம் அவர்களுக்கு



18. ஏகாம்பரம் எம். எல். ஏ.

நான் அரசியலிலே அதிகச்சம்பந்தம் வைத்துக்கொள்ளாவிட்டாலும், ஒரு எம். எல். ஏ எனக்கு நண்பராயிருக்கிறார் என்று மட்டும் பெருமைப்பட்டுக்கொள்ளத் தவறினதில்லை. ஆனால் அந்த ஆசையிலும் மண்ணைப் போட்டுவிட்டார் எனது நண்பர். இப்பொழுது ஏகாம்பரம் ஒரு மாஜி எம். எல். ஏ. அதாவது 'தாலி' யறுத்த தியாகி!

பாவம்! அவர் அந்த மூன்றெழுத்துக்களைச் சம்பாதிப்பதற்குப் பட்டபாடுகொஞ்சநஞ்சமல்ல. உழைத்தார் உழைத்தார் செக்குக்குள் அகப்பட்ட புண்ணாக்கைப்போல, உடம்பை உடம்பென்றும் பாராமல், உருத் தெரியாமல் போகும் வரை உழைத்தார்.

எத்தனை தந்திக் கம்பிகள்? எத்தனை தபாலாபீஸ்கள்! எத்தனை தண்டவாளங்கள்! அப்பப்பா! அத்தனையும் அவர் அறுக்க, கொளுத்த, பெயர்க்கப் பட்டபாடு கொஞ்சமா? அத்தனை சிரமத்திற்கும் கடைசியில் கூலி கிடைத்தது. அது தான் எம். எல். ஏ. என்ற மூன்று எழுத்துக்கள்! [5-ஏக்கர் நிலத்துக்கும் எழுதிப் போட்டிருப்பதாகக் கேள்வி!]

அந்த எழுத்துக்களைத் தக்க இடத்திலேபக்குவமாய்உபயோகித்து, பணப் பெருக்கத்தோடு வாழ்ந்து வந்தார். கடைசியில் கையைத் தூக்கிவிட்டவர்களே, காலையும் வாரிவிட்டனர்.

இதிலே, எப்படி எனது நண்பர் அமங்கலி ஆனார் என்பது தான் கதை! அந்தக்கதையை நான் சொன்னால் அவ்வளவு சுவையாயிராது. அதை அவரே சொன்னால்தான் நன்றாயிருக்கும். அவரும் அதைத் தான் விரும்புகிறார். நண்பர் கதையை ஆரம்பிக்குமுன் அவரை உங்களுக்கு அறிமுகப் படுத்திவிடுகிறேன்.

இதோ, இவர்தான் ஏகாம்பரம்! தடித்த உடல்! பரந்த நெற்றி! உருண்டையான முகம்! கட்டை மீசை! பேசினால், மணியடிப்பது போல இருக்கும். சில சமயம் சிங்கம் கர்ஜிப்பதுபோல் இருக்கும்! இதோ அவர் பேசுகிறார், கேளுங்கள்:-

"நான்தான் ஏகாம்பரம்! நேற்றெல்லாம் என் பெயருக்குப் பின்னால் மூன்று எழுத்துக்கள் தொங்கிக்கொண்டிருந்தன! இன்று நான் வெறும ஏகாம்பரம்! மனிதர்களே நிலையற்ற ஜடப் பொருள்கள்

ரன்ஸ் நகருக்கு மிகுந்த ஊதியத்துடன் வேலைபுரியச் சென்ருர் கலிலியோ. பூமி சூரியனைச் சுற்றி வருவதுடன், சூரியனும் தன்னைத்தானே சுற்றி வருகிறது என்பதையும் கண்டுபிடித்தார் கலிலியோ.

கலிலியோவின் புகழ் பரவப் பரவ அவருக்கு எதிரிகளும் மேலும் மேலும் தோன்ற ஆரம்பித்தார்கள். எதிரிகளின் தூண்டுதலின் பேரில் 1611ம் ஆண்டு அவர் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு, தனது கொள்கைகளை நாட்டில் பரப்பக் கூடாதெனத் தண்டிக்கப்பட்டார்.

இதற்குப் பிறகு பதினறு ஆண்டுகள் கலிலியோ தனது ஆராய்ச்சிகளைத் தொடர்ந்து நடத்திச் சென்று, தனது கொள்கைகளை விளக்கிப் புத்தகமொன்று எழுதி அதனை 1632ம் ஆண்டு வெளியிட்டார். அதற்காக அவர் மறுபடியும் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டார். காரணம் அவர் அப்புத்தகத்தில் சூரியனே பூமியைச் சுற்றிவருகின்றதென்ற கொள்கைக்கு முற்றும் மாருகப்பூமியே சூரியனைச் சுற்றிவருகின்றதென்று எழுதியது தான்!

கலிலியோ நீதிமன்றத்தில், "பைபிள் மேலுலகத்திற்கு மக்கள் செல்லும் வழிகளைக் கூறுகிறதேயன்றி, மேலுலகத்தின் சுழற்சியைக் கூறவில்லை" என்று சாதுரியமாக உண்மையை எடுத்துக்கூறினர்.

அவர் கூற்று பைபிள் பிரியர்களின் புத்திக்கு எட்டவில்லை! அவர் கூற்று மதக்குருக்களின் மண்டையில் ஏறவில்லை! அவர் கூற்று அக்கால மக்களின் செவிகளிலே நுழையவில்லை!

கடைசியில் "பைபிளின் விரோதி" என்ற பட்டத்துடன் சில நாட்கள் சிறைத் தண்டனையும் பரிசாகப் பெற்ருர் கலிலியோ. இருபத்திரண்டு நாட்கள் சிறையிலே கழித்தார்.

பிறகு அவர் தொடர்ந்து ஆராய்ச்சிகள் பல நடத்தி, புத்தகங்கள் பல எழுதி வெளியிட்டார். வானின் அதிசயங்களைக் கண்டு களித்து உலகுக்கெடுத்துரைத்த கலிலியோ தனது கடைசிகாலத்தில் கண்பார்வை இழந்து வானின் அதிசயங்களைக் கண்டு களிக்க இயலாதவரானர். அவர் தனது 78-ம் வயதில் இயற்கை எய்தினர்.

உலகத்தின் உண்மைச் சுழற்சியைக் கண்டு பிடித்த கலிலியோவிற்கு அக்கால உலகமளித்த பரிசு "பைபிள் விரோதி" என்ற பட்டம்! முற்றும் கற்றுணர்ந்தோமென எண்ணிக்கொண்டிருந்த அக்காலப் பட்டதாரிகள் மேதையான கலிலியோவிற்கு அளித்த பட்டம் "முட்டாள்" என்பது! மேலுலகத்திற்கு மக்கள் செல்வதற்கு வழிகாட்டியாகப் பூலோகத்தில் வாழ்ந்து வந்த அக்கால மதக்குருக்கள், 'மேலுலகின் உண்மைச் சுழற்சியைக் கண்டறிந்த கலிலியோவிற்குச் செய்த உபகாரம ஏளனம்! கொடுத்த பட்டம் "நாஸ்திகன்" என்பது!

உலகின் உண்மைச் சுழற்சியைக் கண்டறிந்து அஞ்சாமல் எடுத்துரைத்த கலிலியோ உண்மையிலேயே ஒரு உலகப் பெரியார்! ○

உயர்திரு உல்லாசம் அவர்களுக்கு



18. ஏகாம்பரம் எம். எல். ஏ.

நான் அரசியலிலே அதிகச்சம்பந்தம் வைத்துக்கொள்ளாவிட்டாலும், ஒரு எம். எல். ஏ எனக்கு நண்பராயிருக்கிறார் என்று மட்டும் பெருமைப்பட்டுக்கொள்ளத் தவறினதில்லை. ஆனால் அந்த ஆசையிலும் மண்ணைப் போட்டுவிட்டார் எனது நண்பர். இப்பொழுது ஏகாம்பரம் ஒரு மாஜி எம். எல். ஏ. அதாவது 'தாலி' யறுத்த தியாகி!

பாவம்! அவர் அந்த மூன்றெழுத்துக்களைச் சம்பாதிப்பதற்குப் பட்டபாடுகொஞ்சநஞ்சமல்ல. உழைத்தார் உழைத்தார் செக்குக்குள் அகப்பட்ட புண்ணாக்கைப்போல, உடம்பை உடம்பென்றும் பாராமல், உருத் தெரியாமல் போகும் வரை உழைத்தார்.

எத்தனை தந்திக் கம்பிகள்? எத்தனை தபாலாபீஸ்கள்! எத்தனை தண்டவாளங்கள்! அப்பப்பா! அத்தனையும் அவர் அறுக்க, கொளுத்த, பெயர்க்கப் பட்டபாடு கொஞ்சமா? அத்தனை சிரமத்திற்கும் கடைசியில் கூலி கிடைத்தது. அதுதான் எம். எல். ஏ. என்ற மூன்று எழுத்துக்கள்! [5-ஏக்கர் நிலத்துக்கும் எழுதிப் போட்டிருப்பதாகக் கேள்வி!] அந்த எழுத்துக்களைத் தக்க இடத்திலேபக்குவமாய்உபயோகித்து, பணப் பெருக்கத்தோடு வாழ்ந்து வந்தார். கடைசியில் கையைத் தூக்கிவிட்டவர்களே, காலையும் வாரிவிட்டனர்.

இதிலே, எப்படி எனது நண்பர் அமங்கலி ஆனார் என்பது தான் கதை! அந்தக்கதையை நான் சொன்னால் அவ்வளவு சுவையாயிராது. அதை அவரே சொன்னால்தான் நன்றாயிருக்கும். அவரும் அதைத் தான் விரும்புகிறார். நண்பர் கதையை ஆரம்பிக்குமுன் அவரை உங்களுக்கு அறிமுகப் படுத்திவிடுகிறேன்.

இதோ, இவர்தான் ஏகாம்பரம்! தடித்த உடல்! பரந்த நெற்றி! உருண்டையான முகம்! கட்டை மீசை! பேசினால், மணியடிப்பது போல இருக்கும். சில சமயம் சிங்கம் கர்ஜிப்பதுபோல் இருக்கும்! இதோ அவர் பேசுகிறார், கேளுங்கள்:-

"நான்தான் ஏகாம்பரம்! நேற்றெல்லாம் என் பெயருக்குப் பின்னால் மூன்று எழுத்துக்கள் தொங்கிக்கொண்டிருந்தன! இன்று நான் வெறும ஏகாம்பரம்! மனிதர்களே நிலையற்ற ஜடப் பொருள்கள்

தாமே! நேற்றைக்கிருந்தார் இன்றைக்கில்லையே கச்சியேகம் பனே- இப்படி ஒருவர் சொல்லி யிருக்கிறார். இல்லை! பாடி யிருக்கிறார்! அப்படியிருக்கை யில், எழுத்துக்கள் தோன்று வதும் மறைவதும் ஆச்சரிய மில்லையல்லவா? 'கனம்' ஆக இருப்பவர் லேசாக ஆவதும் லேசாக இருப்பவர் 'கனம்' ஆக ஆவதும் இயற்கை! ஆனாலும் கஷ்டப்பட்டுச் சம்பாதித்த பொருள் கையைவிட்டுப் போகும் பொழுது யாருக்கும் மனவருத்தம் இருக்கத்தானே செய்யும்! அந்த வருத்தத்தை மற்றவர்களிடம் சொல்லிக் கொள்வதுதான், மனிதப் பண்பு! அந்த முறையில் தான் என் கதையை உங்க ளிடம் கூறுகிறேன்.

"எண் எண்ணங்களை, என் வாழ்க்கையில் நடந்த சம்பவங் களை, உள்ளது உள்ளபடியே, வாழைப்பழத்தை உரித்து வைப்பதுபோல, உங்களுக்கு முன் வைக்கிறேன். அழுகிப் போயிருக்கிறதே என்று ஆத் திரப்படக்கூடாது. பித்தலாட் டம், வஞ்சகம், சூது முதலியன, என் எண்ணங்களில் இருந்தி ருக்கலாம்! பிளாக் மார்க்கெட், கொள்ளையடித்தல் முதலிய கொடிய சமபவங்களும் நடந்தி ருக்கலாம். அதையெல்லாம் பொருட்படுத்தக் கூடாது.

'பிறக்கும்பொழுதே, நான் கதர்ச்சட்டையோடு பிறக்க வில்லை! நான் காங்கிரசிலே சேர்ந்தபோது எனக்கு ப போதிய அறிவோ, சிந்தனையோ இருந்ததென்று சொல்ல முடி யாது. காங்கிரஸ் என்றால் காந்திஜி என்று தெரியும்! அதன் திட்டங்களைத் தெரி யாது. ஆனால் எதிர்க்கட்சிக் காரர்களைத் திட்டுவதற்குத் தெரியும். கல்லெறிவதிலே கைதேர்ந்தவன் நான்! இப் படி முரட்டுத்தனமாக நான் முன்னேறிக்கொண்டிருந்தேன். சீக்கிரத்திலேயே, எனக்குத் 'தீவிரவாதி' என்ற பெயரும் கிடைத்தது.

"ஆனால், வெறும் உழைப் பாளியாக, ஊழியனாகமட்டும் இருக்க நான் விரும்பவில்லை. ஒரு உன்னதமான லட்சி யத்தை நோக்கி என் உள்ளம பறந்துகொண்டிருந்தது. சட்ட சபை நாற்காலிகளும், அதில் போடப்பட்ட இலவம் பஞ்சு மெத்தைகளும், அதற்குமேல் சுற்றிக்கொண்டிருக்கும் காற் றாடிகளும், என் கனவிலே சுழன்றுகொண்டிருந்தன. என் கற்பனைக் கோட்டைகளைக் கற் கோட்டையாக்குவதற்குரிய காலமும் வந்தது. அதுதான் ஆகஸ்ட் கலாட்டா! [புரட்சி என்று அந்தக் காலத்தில் புலம்பிக்கொண்டிருந்தேன்]

"தந்திக் கம்பிகளை அறுத் தேன். தபாலாபீஸ்களைக் கொளுத்தினேன். தண்ட வாளங்களைப் பெயர்த்தெறிந் தேன. முனிசிபாலிடி 'விளக்கு களை 'மூளி'யாக்கினேன். கடைசி யில் சிறைக் கம்பிகளையும் எண்ணினேன.

"சிறையிலே பல பெரிய தேச பக்தர்களைச் சந்தித்தேன். ஆனால் அவர்களெல்லாம் என் னைப்போலத் தந்திக் கம்பி களை அறுக்கவுமில்லை, தபா லாபீஸைக் கொளுத்தவுமில்லை. தடியடிகூட வாங்காமல் தியாகி களான தங்கக் கம்பிகள்! இருந்தபோதிலும், அவர்கள் சிறையில் இருக்கவாவது

துணிந்தார்களே, அதுவே பெரியதியாகம் என்று என்மனதைத் தேற்றிக்கொண்டேன்.

"சிறையிலிருந்து வெளியே வந்தேன். கும்பலோடு கும்பலாகக் கோவிந்தாப் போடுவதில் பயனில்லை எனபதை நன்ருகத் தெரிந்துகொண்டேன். முன்புபோலத் தடியடிக்கும் தண்டாலுக்கும் ஆளாகாமல் தனித்துநின்று வேலை செய்ய ஆரம்பித்தேன்! தினசரிப் பத்திரிகைகளின் ஒத்துழைப்பை விரும்பினேன். கிடைத்தது! வெற்றியும் பெற்றேன்.


"ஏகாம்பரம்; தியாகத்தின் சிகரம்' என்று எல்லாத் தினசரிகளும் ஏகோபித்து ஊளையிட்டதன் பயனுக, என் வட்டாரத்தில் நான் ஒரு எம். எல். ஏ. ஆகத் தெரிந்தெடுக்கப்பட்டேன். ஆனுல் சட்ட சபை என்ற கொலுமண்டபத்தை அலங்கரிக்கத் தேர்ந்தெடுக்கப்பட்ட பொம்மைகளில் நானும ஒருவன்என்பது அப்பொழுதே எனக்குத் தெரியாது.

"முதல்நாள் சட்டசபைப் பிரவேசம் பிரமாணம் எடுத்துக்கொண்டதோடுசரியாய்ப்போய் விட்டது! கைதூக்குவதும், தலையாட்டுவதும், கேளவிகள் கேட்காமலிருப்பதும்தான் பிரமாணம் எடுத்துககொண்டதற்கு அர்த்தம என்று அப்பொழுதே தெரிந்திருந்தால், சட்டசபைக்குள நுழைந்திருக்கவே மாட்டேன்.

"இரண்டாவது தடவையாக நான் சட்ட சபைக்குச்சென்ற போது, ஏதோ தவறுதலாக, கதர்க் கண் காட்சிக்குள் வந்துவிட்டோமோ என்று தோன்றியது. ஏனென்ருல் யாரோ ஒரு அங்கத்தினர் தக்ளியும் கையுமாக நூல் நூற்றுக் கொண்டிருந்தார். எல்லோரும் அவரையே கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தனர். எல்லோரும் என்ருல் எங்கள் கட்சி அங்கத்தினர்கள் மட்டும்தான். எங்களுக்குத்தான் சபையில் வாயைத் திறக்கக்கூடாது என்ற உத்தரவாயிற்றே! தப்பித் தவறி யாராவது, கொட்டாவி விடுவதற்கு வாயைத் திறந்தால் கூடச் சட்ட மந்திரி முறைத்துப்பார்ப்பார்.

"ஆனுல் அந்தப் பயம் கொஞ்சநாளில் பறந்து போயிற்று. ஏனெனில் மந்திரிகளே, சில சமயங்களில் எங்கள் தயவை நாடிவர வேண்டியதாகி விட்டது. பிறகு கேட்கவேண்டுமா?

"ஒருநாள் ஒரு கனம் அங்கத்தினர் பலமாகக் குறட்டைவிட்டுத் தூங்கிக்கொண்டிருந்தார். சபையில் ஒரு மசோதா மீது பலத்த விவாதம் நடந்துகொண்டிருந்ததால், யாருக்கும் இந்தச் சத்தம் கேட்கவே இல்லை.



"பழ மொழிகள்"

"விவாதம் என்ற பெயரில் ஆரம்பமான கூச்சல் உச்ச நிலைக்கு வரவே சபாநாயகர் மணியடித்து அமைதி உண்டாக்கினர். ஆனல் குறட்டைச் சத்தம் மட்டும் ஒடுங்கவில்லை, அப்பொழுதுதான எல்லோரும் 'குறட்டை'யைக் கவனிக்க ஆரம்பித்தனர்.

"உடனே, அஜண்டாவில் அடுத்தபடியாக இருந்த விஷயத்தை நீக்கிவிட்டு, குறட்டை விஷயத்தைச் சேர்த்து, அதன்மேல் விவாதத்தை ஆரம்பித்தனர்.

"குறட்டைவிடுவது சரியா?" என்றார் ஒருவர்.

"சரியல்ல!" என்றார் சபாநாயகர்.

"அப்படியானல் குறட்டை விடாமல் தூங்கலாமல்லவா?" இப்படி வேருெருவர்.

"தூங்குவதும் சரியல்ல" சபாநாயகர்.

"குறட்டை விடுவதுதானே சபைக்கு இடைஞ்சலாயிருக்கிறது. இந்நேரம் எனது நண்பர் குறட்டைவிடாமல் தூங்கியிருந்தால், இந்த விஷயம் அஜண்டாவில சேர்க்கபபட்டிருக்குமா?"

"லண்டன் சபையில் கூடத் தூங்குகிறார்கள்"

"குறட்டைவிடுவது தேகாரோக்கியம்!"

இப்படிக் குறட்டை விவாதம் நீண்டுகொண்டிருந்தது. குறட்டைச் சத்தமும நீண்டுகொண்டிருந்தது. அவர் இன்னும் எழுந்திருக்கவே இல்லை! இதற்குள ஒருவர், "கனம அங்கத்தினரின் குறட்டையை நிறுத்த ஏதாவது வழியுண்டா?" என்றார்.

"அங்கத்தினரின் தூக்கத்தைக் கலைக்கச் சபைக்கு அதிகாரமிருக்கிறதா?" என்றார் இன்னெருவர் சபாநாயகர் சட்டப புத்தகத்தைப் புரட்ட ஆரமபித்தார். அன்றைய கூட்டம் குறட்டையிலேயே முடிந்தது. கடைசியில் தூங்கிய, அங்கத்தினர், கதவு சாத்தப்படும பொழுதுதான கண் விழித்தாராம்.

"இந்தப் போக்கில் போய்க் கொண்டிருந்தது சட்ட சபை! காட்டுக் கூச்சலுக்கு மத்தியில் நிம்மதியற்றுத் தூங்குவதைக் காட்டிலும், வீட்டிலேயே தூங்குவது என்று முடிவு செய்தேன். அதனபடியும் செய்தேன். அதுவுமன்றி, உள்ளே இருந்து காரியங்களைச் சாதிப்பதைவிட வெளியிலிருந்து வேலை செய்வதுதான் மிகுந்த பலன் அளித்தது.

"உள்ளூர்ப போலீசை மிரட்டுவது, தாசில்தார் காதைக் கடிப்பது, கலெக்டரைச் சரிக் கட்டுவது—இப்படிப் பல ஓ-டைகளையும் அடைத்து, பணம் என்ற தண்ணீர் என வீட்டுக்குள பாயுமபடி செய்தேன். நானும் பிழைக்கத் தெரிந்தவன்தான் என்பதை உலகுக்கு நிரூபித்தேன.

"இப்படி வருடங்கள இரண்டு உருண்டன. சட்டசபை எப்படியிருக்கிறது எனறே எனக்குத் தெரியாது! நான சட்ட சபைக்கு ஏன் வரவில்லை என்று யாரும கவலைபபட்டதாகவும தெரியவில்லை. ஆனல் மாதாமாதம சமபளம மட்டும பலாபபழத்தைப்போலச் சுளையாக வந்துகொண்டே இருந்தது. உள்ளே இருந்து உபத்திரவம் கொடுக்காமல், வெளியே கிடந்து தொலைக்கட்

டும் என்று விட்டுவிட்டார்கள் ஆக்கும் என்று எண்ணினேன். ஆனால் கடைசியில் வெளியேற்றப் பட்டேன். இரண்டு வருடத்தில் நான்கு தடவைதான் சட்டசபைக்கு வந்திருக்கிறேனும்! இதுகூட இத்தனைநாள் சந்தேகத்தில் இருந்திருக்கிறது! இப்பொழுது என் இடத்திற்கு வேறு ஆள் போடப் போகிறார்கள்! இவ்வளவுதான் என் கதை!'

○ ○ ○

கேட்டீர்களா, கதையை! இதுதான் அவர் முடிவு என்றால் அதில் ஆச்சரியமொன்றுமில்லை. இன்னொரு விஷயம் கேள்விப்பட்டேன். ஏகாம்பரத்திற்குப் பதிலாக நியமிக்கப் படப்போகும் அங்கத்தினர் பொதுமக்கள் கூட்டத்தில் சொன்னாராம்! சபையில் உட்கார்ந்துகொண்டு தூங்குவது அவ்வளவு நல்லதல்ல. என்று இந்த "வரப்போகும்குறட்டை" கையைப் பரப்பி, காலை நீட்டிப் படுத்துக்கொண்டு தூங்கும் என்று நான் நிச்சயமாய் எதிர் பார்க்கிறேன்.

மக்கள் பிரதிநிகள் என்ற. போர்வைக்குள் உல்லாசங்கள் ஒளிந்துகொண்டிருந்தால் உறங்காமல் வேறு என்ன செய்வார்கள்? அதுதானே அவர்களுக்குச் சுகமும் சொர்க்கமும்! கதர்ச் சட்டையைப்போட்டுவிட்டால் மட்டும் தேசபக்தியும் தியாக உணர்ச்சியும் வந்துவிடாது என்பதை உல்லாசங்களுக்கு அறிவிக்க ஆசைப்படுகிறேன்.

வணக்கம்

வழிப்போக்கன்



என்ன வினோதம் பார்!

அத்தான்



தம்பி! தம்பி! ஓடிவா
தங்கச்சியைக் கூட்டிவா
காலணாவைக் கொண்டுவா
கண்ணாடியில் உலகம் பார்!

என்ன வினோதம் பார்!
இங்குவந்து நீயேபார்!
சின்னச் சின்னப் பிள்ளைகாள்!
சீக்கிரமே வாருங்கள்

நம்முடைய நாட்டிலே
நடப்பதனைப் பார்க்கலாம்!
பிச்சைக்காரன் பார் பார்
பெரியபிச்சைக் காரன்பார்!



ஏழைகளைப்
பாருங்கள்
எலும்பைஎண்ணிப்
பாருங்கள்

கூழுமில்லை யென்று
சொல்லிக்
குமுறுவதைப்
பாருங்கள்!


உங்கள்போன்ற
குழந்தைகள்
ஊணுறக்க
மின்றியே

பாடுபட்டுவேலை
செய்தல்
பார்த்திடுங்கள்
குழந்தைகாள்!



கையில் காசே இல்லையென்று
கஷ்டப்படும் போதிலே
பையன்களைப் படிக்கவைக்கப்
பையில் காசு இருக்குமோ?

பெட்டகத்தில் பூட்டிவைக்கும்
பெரியபணக் காரர்கள்
ஏழைகளைப் படிக்க வைத்தால்
எத்தனையோ நன்மையாம்!



பெரியபணக்
காரராக
நாளை நீங்கள்
மாறினல்
மறந்திடாது
ஏழைகட்கு
உதவிசெய்ய
வேண்டுமே!

பண்டிதநேரு இந்தியா திரும்பி விட்டார் இப்போது. இச்சொற்பொழிவு அவர் அமெரிக்காவில் சுற்றுப் பிரயாணம் செய்து கொண்டிருக்கும்போது புதுக்கோட்டை திராவிடமுன்னேற்றக் கழகச் சார்பில் 3-11-49 அன்று நிகழ்த்தியதாகும் ○ ○ ○

புது உலகில் நேரு!

டி. கே. சீனிவாசன்

ஆடம்பரமும் அலங்காரமும் நிறைந்த வரவேற்புகளினிடையே அமெரிக்காவில் பவனி வருகிறார் இந்நாட்டுப் பிரதமர் நேரு. தினந்தினம் பத்திரிகையைப் புரட்டினால் நேரு பல விதத் தோற்றங்களில் காட்சி அளிக்கிறார் இந்தச் சுற்றுப் பிரயாணத்தில் ஏற்படும் விளைவுகள் என்ன என்பதைத் தீவிரமாகச் சிந்தித்துக்கொண்டிருக்கும் அரசியல் நிபுணர்களும், "எங்கள நேரு அமெரிக்க ஜனாதிபதிட்ருமனோடு கைகுலுக்கினார்" என்று பெருமையோடு பேசிக்கொள்ளும் தேசியத் தோழர்களும், இன்று நம் முன்னிலையில் இருக்கின்றனர். உலகம் முழுதுமே நேருவின் அமெரிக்க விஜயத்தைக் கூர்ந்து கவனிக்கிறது.

நேருவின் அமெரிக்க விஜயம் ஒரு வகையில் திருப்தியே அளிக்கிறது. இதுவரையில் அமெரிக்காவைப் பற்றி நினைக்காத சேரியிலிருக்கும் சிங்காரமும் மூட்டை தூக்கும் முனியனும் காலையில் பத்திரிகையை எடுத்தவுடன் "எங்கேயிருக்கிறது அமெரிக்கா?" என்று தேடுகின்றனர். "அங்கே நம் நேரு என்ன செய்கிறார்?" என்று கவனிக்கின்றனர். நியூயார்க் நகரத்தின வானத்தை எட்டும் கட்டிடங்களைப் பார்க்கும்போது, கொலம்பியா பல்கலைக்கழகக் கட்டிடங்களையும் அதில் உள்ள மாணவர்கள் அணி வகுப்பையும் அவர்கள் காணும்போது என்ன தோன்றும்? 'இங்கே ஒரு நாளைக்காவது இருந்து பார்க்க வேண்டும்' என்ற ஆசை அவர்களை அறியாமலே அவர்களுக்கு ஏற்படாதா? "நம்மால் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து படிக்க முடியாவிட்டாலும் நம் பிள்ளைகளையாவது அங்கு அனுப்ப வேண்டும்" என்று நினைப்பார்களா, மாட்டார்களா? இன்று சட்டசபைக்குப் போயிருக்கிற காங்கிரஸ் அங்கத்தினர்கள் சட்டம் செய்யவா போனார்கள்? அதற்குத் தகுதியானவர்களா? சட்டசபையில் உள்ள நாற்காலிகளின் அமைப்பு மேலே சுழன்று கொண்டிருக்கும் மின்சார விசிறிகள் இரண்டுஞ் சேர்ந்து "ஒரு நாளைக்காவது இங்கே உட்கார்ந்து தூங்கிப்

பார்க்க வேண்டும்' என்ற ஆசையைத்தானே அவர்களுக்கு உண்டாக்கியிருக்க வேண்டும் அந்த ஆசையால் என்னென்ன பாடுபட்டார்கள், உழைத்தார்கள் அதைப் போல இந்நாட்டு மக்களுக்குச் சிலையாக இருக்கும் மீனாட்சியையும், மலைமல் இருக்கும் வேலனையும் காட்டுவதற்குப்பதிலாக அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தையும், அதில் இருக்கும் பட்டளிப்பு அரங்கையும் அழகழகான வர்ணப் படங்களில் தீட்டியிருந்தால் ஒரு கவர்ச்சி உண்டாகாதா? இதையெல்லாம் நாம் செய்யவில்லை இதுவரையில். நேருவின் அமெரிக்க விஜயம செய்கிறது.

தென்னிந்திய இரயில்வேயில் வெளியிடப்பட்ட தமிழ் டைம் டேபிளின் முகப்பு அட்டையைப் பாருங்கள். ஒரு பெரிய தண்டவாளம் வானலோகத்துக்கு ஏறிப் போகப் பணி வைத்திருக்கும் மாதிரி சுற்றிலும் சில கோபுரங்கள், கீழே "கோயில் பல கொண்டது தென்னிந்திய இரயில்வே" என்ற குறிப்பு! வடக்கே சென்னையைத் தாண்டாத, தெற்கே தனுஷ்கோடியருக்கு அப்பால் தேவையில்லாத, மேற்கே கோயமுத்தூர் தாண்டினால் எவருக்கும் புரியாத இந்த டைம டேபிளில் இந்த விளம்பரம் எதற்காக? இந்தப் பகுதிக்குள் இருப்பவர்களில் யாருக்குத் தெரியாது இங்கே யிருக்கிற கோவில்களைப் பற்றி? மதச் சார்பற்ற சர்க்கார் நடத்தும இரயில்வேயில் கோபுரமுங் கோவிலும், அதைப் பற்றிய குறிப்பும் எதற்காக? ஒரு என்ஜின் படத்தைப் போட்டுப் "பாருங்கள். ஆதிகாலத்தில் அக்கினி பகவானுக்கும் வருண பகவானுககும் ஆகவே ஆகாது. நீர் நெருபபின் மேல் பட்டால் நெருப்பு அணைந்து விடும். இன்று ஒன்றுக்கொன்று முரண்பட்ட சக்திகளை ஒத்துப் போகச் செய்து மனிதன எஞ்ஜின் ஓட்டிக் காட்டுகிறான்" என்று எழுதினால் எவ்வளவு தெளிவு ஏறபடுத்தியிருக்கலாம்! நேருவின் புது உலக விஜயம் மககளுக்கு ஏற்படுத்தியுள்ள தெளிவை இதற்கு முன்னமேயே இங்கிருந்தே உண்டாக்கி யிருக்கலாம்!

நேருவைக் கேட்டால் "வெகு நாட்களாக எனக்கு அமெரிக்காவைச் சுற்றிப் பார்க்கவேண்டும் என்ற ஆசை. அதைத் தீர்த்துக் கொள்ள வந்திருக்கிறேன" என்கிறார். ஆனால் உண்மை என்ன தெரியுமா? நேரு தானாக அங்கே போகவில்லை. அழைப்புக் கொடுத்து வரவேற்கப் பட்டார். அமெரிக்காவின் ஜனாதிபதி ட்ரூமன் தன் விமானத்தையும் அனுப்பி வைத்தார் நேருவை அழைத்து வர. குடிசைகள், சேரிகள், பாழடைந்த மண்டபங்கள், பழைய பெருமையை விடாப்பிடியாக வைத்திருக்கும இடிந்த கோட்டைகள் இவைகளையே கொணட இந்த நாட்டின பிரதமரை வானத்தை எட்டுங் கோபுரங்கள், அழகிய வீதிகள், உல்லாசக் கூடங்கள், பார்த்தால் பிரமிக்கும மாளிகைகள் கொண்ட அமெரிக்காவின் ஜனாதிபதி "என் நாட்டை வந்து பார்த்து விட்டுப் போ" என்று அழைத்திருந்தால் அது பெருமைப் படுத்துவது

என்பதை விடப் பரிகசிப்பது என்றுதான் ஆகும். அல்லது நேரு போனாலதான் தீரும என்ற வகையில் அமெரிக்காவில் எந்த விதமான அரசியல். சமுதாய, பொருளாதாரச் சிக்கல் இருப்பதாகவுஞ் தெரியவில்லை. அப்படியே இருந்தாலும் அதைத் தீர்த்து வைக்கத் தகுதியானவர் நேருவா என்பதும்சந்தேகத்துக் குரிய விஷயம். அரசியலில் அரிச்சுவடி படித்துக் கொண்டிருக்கும் நாடான, பொருளாதாரதில் குசேலர் நாடான, சமுதாயத்தில் இன்னும் "ஆயிரமுண்டிங்கு ஜாதி எனில் அங்கியர் வந்து புகல் என்ன நீதி?" என்று பாடிப் பெருமைப்படும் நாடான இந் நாட்டுப் பிரதமருக்கு வெளிநாட்டுச் சிக்கலைத் தீர்க்கும் தகுதி வரமுடியும என்று கனவு காணுவது கூடத் தவறு.

பின் ஏன் நேருவை அழைத்தார் ட்ரூமன்? ஆசியாவும் ஐரோப்பியாவும் ஒனறுபட்ட யூரேஷியா என்ற கண்டத்தில் ஒரு பகுதிக்குச் சிவப்பு வர்ணம் ஏற்கனவே தீட்டப்பட்டு விட்டது. மற்றெரு பகுதியில் இப்போதுதான மெருகு ஏறிக் கொண்டிருக்கிறது எஞ்சியிருக்கும் பகுதிகளில் இந்தியாவும ஒனறு. பட்டத்துக்கு வருவதற்கு முன் ஏழைகளின வேதனை ஒலியையே கேட்டுக் கொண்டிருந்த நேருவுக்கு மாஸ்கோ மணம் மிகவும் பிடித்திருந்தது பட்டத்துக்கு வந்தவுடன கோகிலகான இசைவாணிகளின் குயிலிசை காதுகளில் பட்டுக் கருமபாக இருந்த கம்யூனிஸம் வேம்பாக மாறிவிட்டது. ஆகையால் தான் அமெரிக்காவில் நேரு பேசிய பொழுது "இந்தியாவில் உள்ள மக்களின் வாழ்க்கைத் தரம் உயராவிட்டால் கம்யூனிஸம் பரவி விடும். ஆகையால் அமெரிக்க நாட்டு முதலாளிகளே உங்கள் முதலை இந்தியாவில் போட்டுத் தொழில் நடத்தி அங்குள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துங்கள்" என்று குறிப்பிட்டிருக்கிறார் பொது உடமை கூடாது என்பதற்காக வாழ்க்கைத் தரத்தை உயர்த்தச் சொல்கிறார் பொது உடமைவாதி என்று ஒரு காலத்தில் போற்றப் பட்ட ஜவஹர்லால் நேரு. ஏன் அமெரிக்கா அவரை வரவேற்காது? ஏன் அமோகமான வரவேற்பு அவருக்களிக்காது?

அமெரிக்கா முதலாளிகளிடத்தில் ஏன கெஞ்ச வேண்டும்? இன்று அமெரிக்கருக்கு இந்த நாட்டின் தயவு ஏராளமாகத் தேவையாயிற்றே! ரஷ்யாவுக்கு எதிராகப் போர்முனை அமைத்தால் அதில் முக்கிய தளமாக இருக்கப் போவது இந்தியாதானே. இந் நேரத்தில் அமெரிக்காவில் நேரு என்ன சொன்னாலும் நடக்கும், எதைச் செய்தாலும் தகும என்ற நிலையிலுள்ளவர்தானே. அப்படியிருக்க எதற்காகக் கண்ணன் அருள் பெற்ற குசேலர் குபேரனிடம் பிச்சை கேட்க வேண்டும்?

அப்படி அமெரிக்காவிலிருந்து முதல் பெற வேண்டிய நிலையிலா இருக்கிறது நம் நாடு? இங்கே யிருக்கிற முதல் எல்லாம் என்ன ஆயிற்று? இப்போதுதான் தலைதூக்கி வரும் இந் நாட்டில் உள்ள

முதலை வைத்துப் பராமரிக்காமல் ஊரார் முதலையெல்லாம் தேடி அலையலாமா? ஸ்ரீரங்கநாதரும், வெங்கடாஜலபதியும், பழனிமலை வேலனும், மதுரை மீனாட்சியும் கோடிக் கணக்கில் வைத்துக் கொண்டு காத்திருக்கிறார்களே அவர்கள் பெற்ற பிள்ளைகளாகிய நமக்கு உதவ? நாட்டின் நிலையை மக்களிடத்தில் சொல்லி, முதல் பிறரிடமிருந்து வருவதால் ஏற்படும் இன்னல் தொல்லைகளை விளக்கிக் கேட்டால் மக்கள் இந்த ஏற்பாட்டுக்கு ஒப்புக் கொள்ளுவார்களே!

இன்று ஆலயப் பிரவேசம் எப்படி வந்தது? ஆதி திராவிடர்கள் பார்வை பட்டாலே கடவுளுக்குத் தீட்டு ஏற்பட்டு விடும் என்ற நிலை மாறிப் பார்வையோடு நிழலும் படலாம் என்ற மாறுதல் எப்படி ஏற்பட்டது? எந்த நந்தனையாவது எந்த நந்தியாவது வழி மறித்தால் அந்த நந்திக்கு ஆறுமாதம் கடுங்காவல் என்று அரசாங்கம் சட்டம் செய்யும் அளவுக்கு மக்கள் மனநிலை மாறவில்லையா? இதே போன்ற தெளிவுண்டாக்கும் பிரச்சாரத்தைக் கட்டுப்பாடாக எல்லாக் கட்சித்தோழர்களும் செய்தால் இன்னும் கொஞ்சம் மூட பக்தியைத் தளர்த்திவிட முடியுமே. மக்களும் அவ்வளவு மந்த புத்தி உள்ளவர்களில்லையே! "திருச்செந்தூரில் உள்ள வேலன் குடும்பஸ்தர். அவருக்குச் செலவிருக்கும். ஆனால் பழனிமலை வேலன் காவடி தூக்கிக் கஷாயந் தரித்தவனாயிற்றே! அவனுக்கெதற்குச் செலவு?" என்று கேட்டால் எந்த மனிதனாவது ஒத்துக் கொள்ள மாட்டேன் என்பானா? "தூங்கிக் கொண்டிருக்கின்ற ரெங்கநாதர் முன் தாளமும் மேளமும் அடித்து, தீபமும் தூபமுங் காட்டி அவரைத் தூங்கவிடாமல் தொல்லைப்படுத்துவதை விட அந்தப் பணத்தை வேறெதற்காவது செலவிடலாம்" என்றால் மக்கள் மறுத்தா விடுவார்கள்?

சரித்திரத்தில் நடந்த நிகழ்ச்சி மறுபடியும் நடக்காது என்பார்கள். அது ஏன் என்றால் முதல் தடவை நடந்த போதே அதன் விளைவுகள், காரண காரியங்களை உணர்ந்த மக்கள் மறுபடியும் அதுமாதிரி நடக்க விடமாட்டார்கள், என்பதால்தான். இன்று நேருவின் பேச்சு சரித்திரத்தை மறுபடியும் நடக்கச் செய்கிறது. இன்று அமெரிக்காவில் இருக்கும் நேரு இந்நாட்டு மக்களுக்கு எப்படி அறிமுகப்படுத்தப் பட்டார் என்பது அரசியல் தெரிந்தவர்களுக்குப் புரியும்.

சோப்பும் சீப்பும் விற்க வந்தான் வெள்ளைக்காரன். வியாபார நிலையங்களைப் பாதுகாக்கப் படையை வரவழைத்தான்.

படைக்கு வேலை கொடுக்க நாட்டைப் பிடித்தான். பிடித்த நாட்டைப் பாதுகாக்க ஆட்சி பீடம் அமைத்தான். அங்காடிக் கடையில் தொடங்கியதுதான் ஆட்சி பீடத்தில் வந்து முடிந்தது. அதற்காக உயிர்விட்ட வீரர்கள் கட்டைபொம்மு, ஊமைத்துரை, திருப்பூர்க் குமரன், வீ. ஓ. சிதம்பரம், பகவத் சிங், இன்னும் எத்தனையோ ஆயிரக்கணக்கான தியாகிகள், அந்தச் சுதந்திரப் போராட்டத்தில் அறிமுகம் ஆனவர்தான் நேரு. ஆங்கில நாட்டு அங்காடிக் கடை எவ்வளவு தூரம் வளர்ந்தது என்பதைத் தெரிந்த நேரு அமெரிக்கநாட்டு அங்காடியையும் வட்டிக்கடையையும் அழைக்கிறார். நேரு அமெரிக்க நாட்டில் கால் வைத்தபோதே ட்ரூமன் குறிப்பிட்டிருக்கிறார், "நீங்கள் எங்கள் நாட்டுக்கு வருகிற நாள் இந்நாட்டைக் கண்டுபிடித்த கொலம்பஸ் நினைவு நாள். உங்கள் நாட்டைத் தேடிப்போன கொலம்பஸ் திசைமாறி இந்த நாட்டைக் கண்டுபிடித்தான்" என்று. எதற்காகக்கொலம்பஸ் இந்தியாவைத் தேடிவந்தான்? அழகான அருவிகளையும், அருவிகளால் ஏற்படும் ஆறுகளையும், கண்டு களிக்கவா? அல்லவே! எதற்காக ராபர்ட் கிளைவ் கூட்டம் இங்கே வந்ததோ அதற்காகவேதான்! இது தெரியாதா நேருவுக்கு? மறுபடியும ஒரு சுதந்திரப் போராட்டம் நடத்தித்தானே ஆகவேண்டியிருக்கும்!

மற்ற ஏகாதிபத்தியங்களை விட அமெரிக்க ஏகாதிபத்தியம் மிகவுங் கொடுமையானது. அமெரிக்க நாட்டு ஆதிக் குடிகளான சிவப்பு இந்தியர்களை வேட்டையாடிக்கொன்ற நெஞ்சிரக்க மற்றவர்கள் அமெரிக்கர்கள். நீக்ரோக்களை உயிரோடு எரித்து அவர்கள் தீயில் வாடி வதங்கும்போது அதை நேரிலேயே கண்டு களிப்படைந்தனர்கள். எல்லோரும் வெளிநாட்டிலிருந்து பண ஆசையால் சொந்த நாட்டை விட்டு உற்றார் உறவினர்களைத் துறந்து அங்கே போய்க் குடியேறியவர்கள். "கொண்ட மனைவியை அந்நியனோடு அனுப்பி ஒரு கைகொடுத்து மேலே தூக்கியும் விட்டானும்" என்ற பழமொழி மாதிரி பொது உடமைப் பூங்கா அமைவதையுங் கெடுத்து இந்நாட்டை அமெரிக்காவுக்கு அடிமைப் படுத்தவுமாக அல்லவா இருக்கிறது நேருவின் பேச்சு.

அப்படியே அமெரிக்க முதல் இங்கே வந்தால் இங்கேயுள்ள ராட்டைகளும், குடிசைத் தொழில்களும் என்ன ஆகும்? முதல் போடும் அமெரிக்க முதலாளி "ஆடு ராட்டே" என்ற கோகில இசைவாணியின் பாட்டைக் கேட்டால் மௌன்ட் பேட்டனைப்போல "இசைவாணியை எங்கள் நாட்டுக்கு இரவல் கொடுங்கள்" என்று கேட்பானே தவிர ராட்டையைச் சுழற்றுவதிலா முனைவான்? ஆலைகளும் தொழிற்சாலைகளுந் தானே அமையும்! அப்போது காங்கிரஸ்காரர்கள் இதுவரையில் மக்களை ஏமாற்றிவந்த குடி

சைத் தொழில் கிதம் என்ன ஆகும்? குமரப்பாக்களின் கூக்குரல் எப்படி அடங்கும்? வருகிற அமெரிக்க முதலாளி இங்கே ஆலையோடும் தொழிற்சாலையோடும் நின்று விடுவானா? குமரி முனையில் உள்ள அணுகுண்டு செய்வதற்குத் தேவையானமோனசைட்என்ற உலோகம் அவன் கண்ணில் படாதா! பட்டால் அணுகுண்டு தொழிற்சாலை அல்லவா வைப்பான். இப்போதிருக்கும்நிலையில் எதிர்காலத்தில் ஏற்படலாம் என்று எதிர்பார்த்திருக்கும் மூன்ருவது உலக மகா யுத்தத்துக்கு அணுகுண்டு தேவை என்றுதானே நினைப்பான். அவனிடம் போய், "இது காந்தியார் பிறந்த நாடு. அகிம்சையை உலகெங்கும் பரப்பும்நாடு. இங்கேயுள்ள மோனசைட் அணுகுண்டு செய்யப் பயன்படுத்தப் படக்கூடாது" என்று சொன்னல் கேட்பானா?

அப்படியே அமெரிக்கா முதல் போட்டால் அது யாருக்கு லாபம்? வடநாட்டு முதலாளிகளோடு கூட்டு முதலாக அமையுமே தவிர தென்னட்டு முதலாளிகளோடு கூட்டு முதலாக ஆகுமா? அவனே வந்தாலும் இங்கேயுள்ள செட்டியார்கள், வணிகர்கள் எல்லாம் அதைத் தேடுவார்களா? இங்கேயுள்ள செட்டியாருக்கு, "எங்கேயாவது இடிந்த கோவில் இருக்கிறதா? அதைப் புதுப்பிக்கலாம்" என்ற எண்ணம் இருக்குமே தவிர அதையா கவனிப்பார்? முதல் வடநாட்டில் இருக்கும். மூலப் பொருள்கள் தென்னட்டிலிருந்து போகும். அப்போது யாருக்கு லாபம்? யாருக்கு நஷ்டம்?

இப்போது நேருவின் அமெரிக்கச் சுற்றுப் பிரயாணம் தானகை நுழைந்து கொண்டிருந்த வெளிநாட்டானை நாமாக அழைப்புக் கொடுத்து வரவேற்கும் மதியீனந்தானே தவிர வேறு என்ன ஆகும்?

ஐக்கியநாட்டுசபை நேருவை, "ரஷ்யாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே ஒற்றுமை உண்டாக்க முயற்சியுங்கள்" என்று கேட்டிருக்கிறது. ஒற்றுமை உண்டாக்கும் தூதர் எப்படிப் பட்டவர்? அமெரிக்கா நாட்டில் அளிக்கப்படும் வரவேற்பில் பாண்டு வாத்ய ஒலியைக் கேட்பதற்காக இந்நாட்டுக் கம்யூனிஸ்டுகள் கைகளில் விலங்கு பூட்டிப் பார்த்தவர், அப்படியே ஒற்றுமை உண்டாக்கினலும் அது நிலைக்குமா? திருமணம் என்ற பேரால் செய்து கொள்ளும் ஒரு ஏற்பாடாகத்தானே இருக்கும்! நேரு காஷ்மீரப் பார்ப்பனர். ஆனல் பார்ப்பனீயப் பண்புகளை விட்டவர். இன்று ஐக்கிய நாட்டு சபை நேருவை மறுபடியும் புரோகித வேலை செய்யத் தூண்டுகிறது.

நேரு இம் மாதம் 8ந் தேதி இலண்டனுக்கு வந்து விடுவார், எப்படித் திரும்பப் போகிருரோ இனிமேல் தான் தெரியும்! ஆனல் அமெரிக்காவில் நேரு பேசிவரும பேச்சு செம்படவனை மீன் "எனனைப பிடித்துக் கொள்ளேன்" என்று மன்ருடிக் கேட்பதைப் போலத் தான் இருக்கிறது. பொறுத்திருந்து பார்ப்போம் விளைவுகளை! ○

எஜமானி

– வ. சம்பந்தன் –



முழு நிலவு பட்டப்பகல் போல் காய்ந்து கொண்டிருந்தது. மணி எட்டுக்கூட ஆகவில்லை. ஆனாலும் ஊர்ச்சந்தடி எவ்வளவோ அடங்கிவிட்டது,கிராமம் தானே! தூரத்தில் ஏதோ ஒரு நாயின் குரைக்கும்சப்தம் விட்டு விட்டுக் கேட்டுக்கொண்டிருந்தது. அந்த அமுதைப் பொழியும் நிலவிலே ஜோராகப் பையன்கள் ‘சடு குடு’ ஆடிக் கொண்டிருந்தார்கள்தெருவில். அவர்கள்போடும் சப்தத்தைத் தவிர வேறு குறிப்படத்தக்க சபதம் கிடையாது. பெரிய பண்ணை குமாரசாமி முதலியாரின் மனைவி புவனா அது வரையில் திண்ணையில் உட்கார்ந்து தெருவைப் பார்த்துக் கொண்டிருந்தவள் உள்ளேயிருந்து தன் கணவன் பலமாக இருமும் சப்தம் கேட்டு உள்ளே எழுந்து போனாள். பொழுது விடிந்து பொழுது போனால் அவளுக்கு நிற்கக்கூட நேரம் கிடையாது, ஏதாவது ஒரு வேலை வந்துகொண்டேயிருக்கும் பெரிய பண்ணை ஊருக்கே முதன்மையான வீடு– சொத்துள்ள குடும்பம் என்றுதான் பெயர். ஆனால் வேலைக்கு ஒன்றும் குறைவில்லை. வேலை செய்ய ஆட்களுக்கும் குறைவில்லை ஆனால் வீட்டின் எஜமானினேரில் இருந்து எல்லாவற்றையும் கவனித்துக் கொள்ளாவிட்டால் என்னதான் இருந்தாலும் சுகப்படுமா? அதிலும் கணவன் வேறு காயாலாவாகப் படுக்கையில் படுத்துவிட்டார். ஆகவே வெளியே போய் நிலம் நீரைக் கவனிக்க வேறு பொறுப்பான ஆள் இல்லை. எனவே வீட்டிலிருந்து கொண்டே புவனா தான்–ஆட்களைக் கட்டி மேய்த்து அவ்வளவு பெரிய குடும்பத்தின் விவகாரங்களை மிகவும் நுணுக்கமாக நடத்திக்கொண்டு வந்தாள், அப்படி இப்படிக் கணவன் படுக்கையில் படுத்து ஒரு ஆண்டு விளையாட்டைப் போல் ஆகிவிட்டது. எவ்வளவோ வைத்தியம் செய்து பார்த்தும் முற்றும் குணமான பாடில்லை– அன்று பூராவும் அவளுக்கு வேலை சரியாக இருந்தது. அறுப்பு அறுத்து நெல் வந்து தோட்டத்துக் களத்தில் கொட்டியிருந்தது. ஆட்களை வைத்துக்கொண்டு அளந்து குதிருக்குள் கொட்டவேண்டும். அதற்கும் புவனா தான் இருக்க வேண்டும். வீட்டுக்கணக்கப் பிள்ளை சுத்தமோசம், பெரிய அமிஞ்சி. வேறு ஆள் கிடைக்காததினால் அவனைக்கட்டி மாரடிக்க வேண்டியிருந்தது. சந்திரசேகரன், வீட்டில் இருந்தானானால் அவ்வளவு கவலை

அடங்காப் பிடாரி!

வயிற்றுப்பசி என்று ஒன்றிருப்பதனால் தான் காமப்பசி சற்று அடங்கியிருக்கிறது. வயிற்றுப் பசியே இல்லாதிருந்தால் மனிதன் மிருகமாகி உலகமே அழிந்து விடலாம்!

—டால்ஸ்டாய்

இல்லை. சந்திரசேகரன் குமாரசாமிமுதலியாரின் அக்கா பிள்ளை. சிறுவயதிலேயே அவள்—கணவனை இழந்து விட்டு — தம்பியிடம் வந்து சேர்ந்தாள். குமாரசாமி முதலியாருக்கு மகன் இல்லையாகையால்—தன் அக்கா மகனையே தன் மகன் போல் பாவித்து வந்தார். தன் பிள்ளையைத் தன் தம்பியின் பொறுப்பில் விட்டு விட்டுக் காலமானாள் அவள். மாமா பேரில் உயிரையே வைத்திருந்தான் மருமகனும், தன் பெண் விசாலத்தையே கொடுத்து வீட்டில் வைத்துக் கொள்ள வேண்டும் என்று திட்டம் போட்டிருந்தார் முதலியார். சிறு வயது முதற்கொண்டே அதே வீட்டில் வளர்ந்தவனாகையால் குடும்பத்தின் நுணுக்கங்களை அறிந்திருந்தான் அவன். அவன் இருந்தது வீட்டிற்கே ரொம்ப ஒத்தாசையாய் இருந்தது. எல்லாக் காரியங்களையும் தன் தலைமேல் போட்டுக்கொண்டு திறம்படச் செய்வான். அவன் பத்தாவது வகுப்பு முடிந்ததும் — காலேஜில் போய்ச் சேர வேண்டுமென்று சொன்னான். மாமாவும் தடை ஒன்றும் சொல்லவில்லை. சென்னையில் இண்டர் கடைசி வகுப்பில் படித்துக் கொண்டிருந்தான். எப்பொழுதும் கலகலவென்று பேசிக் கொண்டிருப்பான். அவன் இருந்தால் வீடே ஒரே தடபுடலாகத்தானிருக்கும்......

புவனா திண்ணையை விட்டு எழுந்து உள்ளே போனாள். கூடத்தில் ஹரிக்கேன்விளக்கு எரிந்துகொண்டிருந்தது. ஈஸி சேரில் முதலியார். படுத்துக் கொண்டிருந்தார். நோயில் அடிபட்டமுகம்—களையிழந்துகாணப் பட்டது. வாலிப வயதாயிருந்தாலும் தாங்கிக்கொள்ளலாம். வயசும் ஐம்பதுக்குமேல் ஆகிவிட்டிருந்தது. முதுமையின் தோற்றம் உடலில் காணப் பட்டது. பக்கத்தில் ஒரு ஸ்டூலில்—பழவகைகள் —மருந்துச் சாமான்கள் வைக்கப்பட்டிருந்தன. அருகில் அமர்ந்து அவருடைய ஒரே பெண் விசாலம் தன்னுடைய அப்பாவிற்குச் சாத்துக்குடிப் பழம் உரித்துக் கொடுத்துக் கொண்டிருந்தாள்—விசாலம் புவனாவின் மூத்தாளின் ஒரே மகள். குமாரசாமி முதலியாரிடம், விசாலத்தை பெற்றவுடனேயே அவளை அவர் கையில் ஒப்படைத்து விட்டு மறைந்தாள் அவருடைய மூத்த மனைவி. தாயற்ற பெண்ணை மனங் கோணாமல் தான் வளர்த்து வந்தார் தந்தை. புவனாவும் தன்னுடைய மூத்தாள் மகள் என்று சற்றுகூட வித்தியாசம் பாராட்டாமல் — நடத்தி வந்தாள் விசாலத்தை. விசாலத்திற்குத் தன்னுடைய சித்தியின் மேல் உயிர். ஆகக் கூடி விசாலத்தைவிடப் புவனா நாலு வயது மூத்தவள் தான்.

விசாலத்திற்கு இப்பொழுது பதினாறு வயது நடந்துகொண்டிருந்தது......

கணவன் படுத்துக்கொண்டிருந்த இடத்திற்கு அருகில் வந்துநின்ருள் புவனு.ஏறிட்டுத் தன் மனைவியின் முகத்தைப் பார்த்தார் முதலியார். சற்று நேரம் ஒரு அசாதாரணமான அமைதி நிலவியது அந்த வீட்டிலே. பின் "என் புவனு, நேற்று சந்திரன் லெட்டர் எழுதியிருந்தானே, பார்த்தாயா? நாளைக்குப் பரீட்சை ஆரம்பமாம்! அப்பா! அந்தப் பிள்ளை இப்போழுது பக்கத்தில் இருந்தால் எவ்வளவு ஒத்தாசையாக இருக்கும்" என்று கூறி நிறுத்தி விட்டு ஒரு பெருமூச்சு விட்டார் முதலியார்.

"பார்த்தேன், விசாலம் காண்பித்தது. அதற்கென்ன? பரிட்சை முடிய இன்னும் 15 நாள் தானே இருக்கிறது. அப்புறம் இங்கே தானே இருப்பான்" என்று எதையோ நினைத்தவண்ணம் கூறினுள் புவனு.

"கொஞ்சம் வெந்நீர் கொண்டுவா, தோட்டத்தில் களத்தில் தானே நெல்லைக் கொட்டி இருக்கிருர்கள்? அந்த முனுசாமிப்பயல் சரியாக் கதவை யெல்லாம் இழுத்துப் பூட்டி இருக்கானே என்னவோ! இந்தப் பாழாய்ப் போன சயலா என் உயிரை வாங்குகிறது சனியன்—ஒரு வேலையும் பார்க்க விடாமல்!"—என்று கூறினுர்.

"வெந்நீர் கொண்டுவந்து ஸ்டூலில் வைத்துவிட்டு "நான் போய் எல்லாம் சரியாக இருக்கிறதா என்று பார்த்துவிட்டு வருகிறேன்" என்று கூறிவிட்டுப் 'பெட்ரூம்' லைட்டைக் கையில் எடுத்துக் கொண்டு தோட்டத்தைநோக்கிச் சென்ருள். தோட்டம் என்ருல் எங்கும் போகவேண்டியதில்லை. வீட்டைச் சேர்ந்தது தான். மாடுகன்று கட்ட—வைக்கோல் போர் போட்டுவைக்க பின்னுல் விசாலமான இடம் அதற்கு நாலு பக்கமும் காம்பவுண்டுச் சுவர் போட்டு—இரும்புக் கம்பிக் கதவு போட்டிருந்தது. இதற்கு முனுசாமி காவல்காரன். மாடுகன்றைக் கவனித்துக் கொள்வது—தோட்ட வேலையைப் பார்த்துக் கொள்வது எல்லா வேலையும் பார்த்துக் கொள்வான் அவன். முனுசாமி பெண்ஜாதி கண்ணம்மா தான் வீடு பெருக்குவது–சாணம் தெளித்துக் கோலம் போடுவது–வீட்டுச் சில்லறை வேலைகளைப் பார்த்துக் கொள்வது எல்லாம், வேலைக்காரர்களில் முனுசாமி நம்பிக்கையாயிருந்த படியால்–அவனுக்குத்தோட்டத்திலேயே குடிசை போட்டுக் கொண்டு இருக்க அனுமதி அளித்திருந்தார் முதலியார். அத்துடன் தோட்டத்திற்கும் காவலாக் இருக்குமல்லவா? கண்ணம்மாவும் ரொம்ப நல்ல மாதிரி. ஏழ்மையா யிருந்தாலென்ன — அழகு இருக்கக் கூடாதா என்ன? களைபொருந்தியமுகம் கறுப்பு நிறத்திலும்—கண்கவர் அழகு. ஆடிப்பரக்கும் கூந்தலை அள்ளிச் சொருகிக் கட்டி–காலணு அகலம் குங்குமப் பொட்டு அந்த கறுப்பு நிற முகத்தில் இட்டுக் கொண்டு வந்து 'அம்மா' என்று அவள் வந்து கூப்பிடும் அழகு ஒன்றே போதுமே!

......என்னமோ நினைத்துக் கொண்டு புவனா பெட்ரூம் விளக்கை எடுத்துக்கொண்டு தோட்டத்தின் பக்கம் சென்றாள். நிலா பட்டப்பகல்போல் காய்ந்து கொண்டிருந்தது. வேப்பமரத்தின் காற்று லேசாக வந்து வீசிக்கொண்டிருந்தது. நிர்மலமான நீல வானிலே அமுதைப் பொழியும் நிலவினடியிலே - அங்கே ஒரு தனி அமைதி குடிகொண்டிருந்தது......கேட்டைத் திறக்கப் பார்த்தாள் புவனா. முடியவில்லை. உள்பக்கம் பூட்டுப் போட்டிருந்தது. 'சரிதான் பத்திரமாகப் பார்த்துக்கொள்வான்'என்று எண்ணித்திரும்ப எத்தனித்தாள். அப்பொழுது அவள் உள்ளே தோட்டத்தில் இரும்புக் கம்பிகளினிடையே கண்ட காட்சி அவளைச் சிலைபோல் அங்கே அப்படியே நிற்க வைத்தது. வீட்டு எஜமானி கையில் விளக்குடன்—கவனித்தாள். கொஞ்ச நேரம்தான் வேப்பமரத்தின் அடியில் கண்ணம்மாவின் மடிமீது முனுசாமி தலையை வைத்துப் படுத்துக்கொண்டு அந்தக் குறுகுறுத்த முக அழகைப் பருகிக்கொண்டிருந்தான். ஒருக்கால் மேலே ஓடும் சந்திரன் அழகா-தன் மனைவியின் வடிவு வதனம் அழகா என்று ஒப்பிட்டுப் பார்க்கிறானோ. என்னவோ? லேசாக அன்பு குழைந்தோடும் அருள் பார்வையோடு-அவனுடைய நெற்றியில் ஆடிப் பரந்து வரும் அவனுடைய முன் மயிரைத்தள்ளி விட்டுக்கொண்டிந்தாள் கண்ணம்மா. சந்திரனின் ஒரு துண்டு தெறித்து விழுந்தது போல் பிரகாசமாய் இருந்தது அந்தப் பணிப்பெண் முகம். என்னபேசிக்கொண்டார்களோ யாருக்குத் தெரியும். தூரத்திலிருந்து பார்த்ததில் அவர்களுடைய உருவம்தான் அப்பட்டமாகத் தெரிந்தது. வீட்டு எஜமானி இந்தக் காட்சியைக் கண்டாள். களங்கமற்ற கிராமியக் காதல் கரைபுரண்டோடும் இளம் உள்ளங்களின் இன்ப வாரிதியைக் குலைக்க ஆசைப்படவில்லை. பேசாமல் விளக்கைச் சிறிது செய்து விட்டு-வீட்டிற்குள் புகுந்தாள் புவனா. அவள் முகம் அந்த மங்கிய ஒளியிலும் ஒரு வேதனையைக் காண்பிக்காமலில்லை.

'ஈஸிசேரி'ல் படுத்த படியே அவள் கணவர் தூங்கிவிட்டிருந்தார். அதற்குள் விசாலம், ஒதுப்புறமாக - தன் படுக்கையில் படுத்திருந்தாள். தூங்கிவிட்டாளோ என்னவோ தெரியாது. சந்தடியே இல்லை. வீடு நிசப்தமாக இருந்தது. கூடத்து விளக்கு அழுது வடிந்து கொண்டிருந்தது. திரியைக் கொஞ்சம் தூக்கிவிட்டுவிட்டு-வீட்டுக் கொல்லைக் கதவைத் தாழ்ப்பாள் போட்டு விட்டு வந்தாள். புவனா இன்னும் சாப்பிடவில்லை. மனம் சரியாக இல்லை. ஆகவே சாப்பாடு தேவையில்லை. தெருவில் சந்தடி அடங்கிஇருந்தது. பையன்கள் விளையாட்டை எல்லாம் மூட்டை கட்டிக்கொண்டு போய்விட்டனர். அப்படி இப்படி ஒருவர் இருவர் போவது தவிரத் தெருவில் ஜன சந்தடி கிடையாது. வேலைக்காரப்பயல் கந்தன் தெருக்குறட்டில் படுத்து நிம்மதியாகத் தூங்கிக்கொண்டிருந்தான். தெருக் கதவைச் சாத்திதாழ்ப்பாள் போட்டுவிட்டு அப்படியே

வாசல் ஓரமாய்த் தூணின் அருகில் சாய்ந்துகொண்டு உட்கார்ந்தாள் புவனா. நிர்மலமான நீலவானில் சந்திரன் பவனி வந்துகொண்டிருந்தான். பக்கத்தில் இருந்த படுக்கையை இழுத்துப்போட்டு வாசல் ஓரமாகத் தாழ்வாரத்திலேயே படுத்தாள். மேலே மேகத்திற்கும் நிலவுக்கும் காதல் போராட்டம் கொஞ்சம் பலமாகவே நடந்து கொண்டிருந்தது. திடீரென்று சந்திரன் மேகத்தைக் கட்டி அணைப்பதுபோல் அருகில் செல்லுவான். சற்று நேரம் அவளுடைய மார்பிலே தன் அழகொழுகும் முகத்தைப் பதித்துக் கொள்வான் ஒரு நிமிடம்கூட ஆகியிருக்காது. காதலியிடம் ஊடல் கொண்டவன்போல — ஒரே வேகமாக ஓடிவந்து விடுவான் மேகத்தைவிட்டு. புவனாவுக்கு - அந்த வீட்டு எஜமானிக்குத தூக்கம்வரவில்லை, வானத்தை வெறிக்க வெறிக்கப்பார்த்துக் கொண்டிருந்தாள். அவளையுமறியாமல் இரண்டு துளிக்கண்ணீர் - குழிவிழுந்த சோபைக் கன்னத்திடையே உருண்டோடியது. சிந்தனை அலைகள் அந்தப் பெண்ணின் மனதிலே அலைமோதத் தொடங்கின. காலத்திரையைக் கிழித்துக் கொண்டு — பெண் மனம் எதை எதையோ எண்ணி ஆரமபித்தது:—

இந்த வீட்டில் முதலியாரின் இரண்டாந்தாரமாக வந்தபொழுது புவனாவிற்குப் பதினேழுவயதுதான் இருக்கும். விளையாட்டைப்போல் மூன்று வருடங்கள் உருண்டோடிவிட்டன அதற்கப்புறம். பக்கத்து ஊர்தான் அவள் பிறந்த ஊர்.

கோஞ்சம் ஏழ்மையான குடும்பம். அத்துடன் தகப்பனருக்கு நான்காவது பெண். கேட்க வேண்டுமா? இளம் உள்ளம். கனிந்த பார்வை குறுகுறுத்த முல்லைச் சிரிப்பு.பேசும் இரு கருவிழிகள். பெண்மையின்பூர்ணப் பொலிவுபொங்கி வழிந்தது புவனுவிடத்திலே! அந்தக் காலத்தில் - கவலையற்றவளாய் - தன் இச்சையாக இளம் பெண்ணுக ஓடி ஆடின குறும்புக்கார வயதில் அவள் பாட்டிகூடச்சொல்வாள், "நம் புவனுவுக்கென்ன: அவள் அழகுக்காகவே எவனுவது வந்து கொத்திக்கொண்டு போய்விடமாட்டானு" என்று. கடைசியில் பணம்தான் பேசியது, பண்ணை குமாரசாமி முதலியாரின் இரண்டாந்தாரமாக இந்த வீட்டினுள் காலடி எடுத்துவைத்தாள். பேதைப் பெண் எவ்வளவோ அழுதாள். ஆனல் பெண்ணின் அழுகையும் -குமுறலும் - பணம் அந்தஸ்து இவைகளின் முன்னே பலியிடப்பட்டன. விளையாட்டுப் புத்தியைத் தூக்கி எறிந்து விட்டு- வெதும்பும் உள்ளத்துடன் வீட்டு எஜமானியாக உள்ளே நுழைந்தாள். மனதைக் கல்லாக்கிக் கொண்டு — பண்ணைவீட்டு அம்மா என்ற பட்டத்தைப் பெற வந்தாள். "வா, அம்மா புவனு! உன்னுல்தான் இந்தக் குடும்பம் இழந்த சோபையைத் திரும்பி அடையவேண்டும். எங்களுக்கு பிரகாசம் தர வந்த குடும்ப விளக்கு, நீ!" கட்டின புருஷர் கனிந்த குரலோடு வரவேற்ருர். "வா,சித்தி எங்கிக்கிடந்த எங்களுக்கு உன்னைப் பார்த்ததும் எவ்வளவு ஆறுதலாக இருக்கிறது, தெரியுமா" — இது குழையக் குழையப்பேசும் குமாரிவிசாலத்தின் வரவேற்பு.

"வாருங்கள், மாமி! வந்துவிட்டீர்களல்லவா! இனிமேல் எங்களுக்கு என்ன குறைச்சல்" இது சிரித்துச் சிரித்துப்பேசும் சேகரன் கூறியது.

சிதறுண்ட உள்ளத்தை— சுக்குநூருகிப்போன தன் இதயக் கனவுகளை - இன்ப நினைப்புகளை -தூக்கித்தூரவீசிஎறிந்துவிட்டு-அந்த வீட்டினுள் எஜமானியாகப் புகுந்தாள் புவனு!

பெரியவீடு, பூர்விகக்குடும்பம் நிரம்ப சொத்து — கிராமத்திலேயே தலையான இடம்-மாமியார், நாத்தனர் தொந்தரவில்லை. கூப்பிட்டவுடன் 'ஏன்' என்று கேட்க ஆட்கள். யாதொரு விதமான விசாரத்திற்கும் இடம் கிடையாது. தன்னை எஜமானிபோல் நடத்தும் கணவர். குழையக் குழையப் பேசித் தன் அன்பைக் கவரும் விசாலம். சிரித்துச் சிரித்துப் பேசும் நாத்தனர் பிள்ளை. களங்கமற்ற உள்ளத்துடன் கலகலவென்று இருக்கும் பணிப்பெண் கண்ணம்மா— வீட்டு எஜமானி புவனு! வாழ்க்கையில் இதைவிட வேறென்ன வேண்டும்? புவனு அதிர்ஷ்டக்காரி — கொடுத்து வைத்தவள்-இது உலகத்தின் தீர்ப்பு.

இந்தச் சாதகமான சூழ்நிலையை வைத்துக்கொண்டு வாழ்க்கையின் படிக்கட்டுகளை மிகச்சுலபமாக ஏறிவிடலாம் என்றுதான் அந்தப் பேதைப் பெண் எண்ணினுள் முதலில். காலம் அவளைப் பைத்தியமாக

அடித்துவிட்டது, நாட்கள் செல்லச் செல்ல — வாழ்க்கையில் இழக்கக்கூடாத ஏதோ ஒன்றை இழந்துவிட்டது போல் நினைக்க ஆரம்பித்துவிட்டாள். தன்னுடைய வாழ்க்கையில்-ஏதோ ஈடுகட்ட முடியாத வேதனைதரும் நஷ்டம் ஒன்று ஏற்பட்டுவிட்டது என்பதை அவள் உணர அதிககாலம்பிடிக்கவில்லை-அவளும் பெண்தான், உணர்ச்சி உள்ளவள். வெறும் மரக்கட்டை அல்ல என்று யாரும் நினைத்ததாகத் தெரியவில்லை. வெறும் மேல் பூச்சுகளைக் கொண்டு தீர்ப்புக்கூறும் சமூகத்தினிடமிருந்து 'நல்ல தீர்ப்பு' எப்படிப்பெற முடியும்? குழந்தையைப் போல் நடத்தி எஜமானிபோல் ஆதரவுகாட்டுகிறார் கணவர். ஆனால் அது மட்டும் வாழ்க்கையின் தாபத்தைத் தணித்துவிட முடியுமா என்ன? இளகிய—பெருந்தன்மை படைத்த உள்ளம் தான் கணவருக்கு. போதுமா? ஏதோ ஒன்று விவரிக்க முடியாத ஒன்று—எல்லா வசதிகளுக்குமிடையே—ஒரு பெரிய துக்கம் — ஒரு நிராசை வேரூன்றிவிட்டது, புவனாவின் மனதிலே. அது அவள் குற்றமில்லை. வாழ்க்கையை விழலுக்கு இறைத்த நீர்போல் கக்க—என்னதான் ஆனாலும் ஒரு இளமை உணர்ச்சி பொங்கும் பெண்ணால் முடியுமா? நாள் பூராவும் அது இது என்று ஏதாவது வேலை இருந்துகொண்டேயிருக்கும் அவளுக்கு. பெரிய குடும்பத்தின் எஜமானியல்லவா? எல்லாவேலைகளையும் முடித்துக்கொண்டு—வியர்வை பொங்கி வழியும் வதனத்தை அலம்பிச் சுத்தம் செய்து—அழகான கருஞ்சாந்துப் பொட்டு அதில் இட்டு—வெற்றிலைச் சிவப்பேறிய — செவ்விதழ்கள் துடிக்க சிங்காரப் பதுமைபோல் வருவாள் அந்த நாட்களில் — அந்த அப்பாவி —ஐம்பது வயதுக் கிழவன்— —தொட்டுத்தாலி கட்டியவன் அந்தப் பேதைப் பெண்ணின் உள் அந்தரங்கத்தைக் கண்டானா? அவள் வருவதற்கு முன்னே குறட்டைவிட ஆரம்பித்துவிடுவான் அந்தப் புண்ணியவான். பிறகு வெதும்பும் நெஞ்சம் தலையணையைப் பாரமாகக் கொண்டு — சோக கீதம் இசைக்கவேண்டியது தான். விம்மி விம்மி மரத்துப் போயிருந்தது அவள் உள்ளம். பெரியவீட்டின் எஜமானியாக — பண்ணைவீட்டு அம்மாவாக—எத்தனையோ உறவினர்களின் கல்யாணங்களுக்குப் போயிருப்பாள். கண்ணைப் பறிக்கும் இளஞ்ஜோடிகளைக் கண்டு — வெதும்பி மனங்குன்றித் திரும்பாதநாள்கிடையாது. 'பண்ணைவீட்டு எஜமானி! நாசமாய்ப் போச்சு—பாடுபட்டு வேலை செய்யும் பணிப்பெண் கண்ணம்மாவைவிட எந்த வகையில் மேம்பட்டவள் நான்' என்று அவள் வெதும்பாத நாள் கிடையாது: எண்ணுதஎண்ணமெல்லாம் எண்ணி — ஏங்கிப் போயிருப்பாள் அவள். ஆனால் பட்டுப்போன வாழ்க்கையிலும் காட்டில்காயும் நிலவான தன் வாழ்க்கையிலும் —ஒரு சில சம்பவங்கள் அவள் மனத்திரையைவிட்டு என்றும் அகன்றதில்லை.

[அடுத்த இதழில் முடியும்]

..பொது மேடை..

சென்னை
14-11-49

★ பூவையர் விரும்பும் பொன்னி

"என்ன கண்டுவிட்டு அப்படி வைத்த விழி வாங்காமல் பார்க்கின்றீர்கள்?" என்று கேட்டுக்கொண்டே என் வாழ்க்கைத் துணை நலம் மெதுவாகப் 'பொன்னி'யை இழுப்பாள். 'பொன்னி' நல்லாளின் மேனி வருந்தச் சகிக்க மாட்டாதவனாய் நானே அவளை என் இல்லாளிடம் ஒப்படைத்து விடுவேன். அவள் வினாவிற்கு நான் பதில் கூறவேண்டிய அவசியமே இருக்காது. 'பொன்னியே' அவளுக்கு விடை தந்து விடுவாள் போலும். தன்னையடைந்த 'பொன்னி'யைப் பார்த்துக்கொண்டே இருப்பாள். முகப்புப் படத்தை உற்றுநோக்குவாள். அதன் எழில் அவளை எளிதில் கவர்ந்து விடுவது நன்கு தெரியும்! கடைசி அட்டைப் பக்கத்தைத் திருப்பிப் பார்ப்பாள். மறுபடியும் முகப்பைப் பார்த்துப் பார்த்தவள் பார்த்தபடியே இருப்பாள். நீண்டகாலமாக எதிர்பார்த்து ஏங்கித் தவித்த அப்பொருளை அடைந்து விட்டவளின் மகிழ்ச்சியைப் போன்று இதழ்கள் குறுநகை புரிந்த வண்ணமே இருப்பாள். பொன்னியும் புன்னகை காட்டி மகிழ்விப்பாள் போலும்! "அம்மாமிப் பத்திரிகைகளைப் பார்த்துப் பார்த்து அலுத்து விட்டது, போங்கள். தமிழ்தானா வேறு ஏதாவது அன்னிய மொழியா என்றே சந்தேகம் வந்து விடும். தமிழைக் கொலை செய்து, துண்டாடி, கூறு போட்டிருக்கும். காணச் சகிக்காது. அம்மாமிகளின் சித்திரவதையைக் கண்டு மனங்கலங்கி விடுவேன். இதற்கு விமோசனம்கிடையாதா என ஏங்கித் தவிக்கும் என் மனம். என்னை ஆறுதல் சொல்லித் தேற்றுவது போல் இதோ 'பொன்னி' நல்லாள் என் மார்பின் மீது தவழ்கின்றாள். 'பொன்னி'யின் தோற்றம், பொலிவு, வனப்பு இவைகளைப் பார்த்துப் பார்த்து மகிழ விரும்புகின்றது என் மனம். பார்த்தவுடன் கவர்ச்சிதரும் திறன் படைத்த பொன்னியின் வருகை தமிழ்க்கலை உலகிற்கே தெவிட்டாத இன்பமாகும்; பெருமையும், புகழும் தருவதாகும். திராவிட மங்கையர்கள் விரும்பிப் படிக்க ஆசை கொடுக்கும் ஒப்பற்ற இதழ் 'பொன்னி' தூய தமிழும், நல்ல நடையும், உயர்ந்த கருத்தும் கமழ வருபவள் பொன்னி. திராவிட நற்பண்பும் நாகரிகமும் கலந்த கதைகளும், செறிந்த பொருள் நிறைந்த கவிதைகளும் மலிய மலர்ந்து விளங்குகின்றவள் பொன்னி, பொன்னியில் வெளிவரும் ஒவ்வொரு பகுதியும் சுவைமிக்கதாகும்" என வாயாரப் புகழ்ந்து விட்டுப்பொன்னியில் வெளிவரும் சில விகடத் துணுக்குகளைப் பற்றிப் பேச ஆரம்பித்தாளோ இல்லையோ ஒரே "அவுட்" சிரிப்புத்தான். வைதிகப் பழமைக்கும், மூடப்பழக்கவழக்கங்களுக்கும் "வேட்டு" வைக்கட்டும் இத் திராவிடத் தோழர் தோழியர்களின் 'அவுட்' சிரிப்பு என்பது தான் பொன்னியின் விருப்பம் போலும்!

கோ. குமாரசாமி.

○●○

பெரியகுளம்
4-11-49

ஏழைபடும்பாடு

இன்றைய சுதந்திர சர்காரில் ஏழைமக்கள் கொடுக்கக் கூடிய வரி இவ்வளவு அவ்வளவென்று சொல்லி முடியாது. வாங்கும்

பொருள்களின் விலேயோ விஷம் போல் ஏறிவிட்டது. அன்றாடம் கிடைக்கும் கூலியோ வாழ்க்கைச் செலவுக்குப் பற்றாக்குறையாயிருக்கிறது. கெஞ்சிக் கேட்டாலோ முதலாளி பாம்பெனச் சீறுகிறான். அரசாங்கம் முதலாளி வர்க்கத்துக்கு மகுடி வாசிக்கிறது. இந்நிலேயிலே ஏழைபடும்பாடு எட்டிலடங்காது. இந்த நாளில் ஜவுளிக்கடையிலே ஒரு கஜம் துணி ஒரு ரூபாயென்கிறான் கடைக்காரன். ஏழை துணியையும் பில்லேயும் கையில் வாங்கும்போது திகைக்கிறான். துணி விலே ஒரு ரூபாய்தான். பம்பாய் வரி, சென்னே வரி, சேல்ஸ் டாக்ஸ், இன்னும் புரியாத வரி—பெயர் தெரியாத வரி இவைகளெல்லாம் கணக்குக் கூட்டி அணுக் கலத்தையும் பைசாக் கலத்தையும் நிரப்பி விடுகிறான். வாங்கியது கால் பணம் என்றால் சுமை கூலி முக்கால் பணம் என்ற கதையிலே காசைக் கொடுத்துவிட்டுக் கண்ணீரும் கம்பலேயுமாக வீடு திரும்புகிறான் ஏழை. இன்று சர்க்கார் போட்டிருக்கும் அத்தனே வரிகளும் ஏழைகளேத்தான் மிகவும் பாதித்திருக்கின்றன. அரசினர் வேண்டுமானால் கூறலாம்; நாங்கள் போடும் வரி உற்பத்தி முதலாளி, மொத்த வியாபாரி, சில்லறை வியாபாரி இவர்களேத்தான் பாதிக்கும் எனலாம். நடைமுறை அப்படியல்ல. உற்பத்தியாளர் தமது பொருளுக்குப் போட்டிருக்கும் வரியைத் தன் நிகர லாபத்திலிருந்து கொட்டிக் கொடுப்பதில்லே.

மொத்த வியாபாரியிடம் வாங்குகிறான், மொத்த வியாபாரி சில்லறை வியாபாரியிடம் வாங்குகிறான். சில்லறை வியாபாரி எல்லா வற்றிற்கும் ஈடுசெய்வதற்காக ஏழைகளின் வயிற்றிலடிக்கிறான். ஆகவே சர்க்கார் போடும் ஒவ்வொரு வரியும் ஏழையின் இரத்தத்தை உறிஞ்சுவதாகத்தான் கொள்ளமுடியும். ஏழையின் இன்றைய உண்மை நிலேயைப் படம் பிடித்துப் பார்த்தால் உண்மை நிலே தெளிவாகத் தெரியும், வயிற்றிற்குக் கஞ்சியில்லே. கட்டக் கந்தையில்லே. கால்காசுகூடக் கையிலே மிச்சமில்லே. ஆனுல் அரசன்கூட இயந்திரத் தேய்வுக்காக ஓர் மூலதனம் ஒதுக்குகிறான். இந்த ஏழை தனது வாழ்நாளுக்காக—பிற்கால ஓய்வுக்காக—சக்தியற்றுச் சம்பாதிக்க முடியாத நிலேயில் தான் வாழ்வதற்குக் கொஞ்சம் பொருளே மீத்துவைக்க முடியவில்லே. ஏழைக்கு மூலதனம் அவனது அரை டஜன் குழந்தைகள் தாம்! இந் நிலேயில் ஒன்றுக்குமேல் ஒன்றாக வரியைப் போட்டு, ஒடுக்கப்பட்டவர்களேயே மீண்டும் மீண்டும் சக்கையாகப் பிழிந்து அவர்களது உழைப்பில் முதலாளி வர்க்கமும் அரசாங்கமும் பங்குபோட்டு வாழுமாகில் நாடு வாழாது- நாடு காடாகும். ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளொக்கும் என்ற மனிதப் பண்பு விளக்கத்தை நினேவிற் கொண்டு அந்த ஏழை சிந்தும் வியர்வையைத் துடைத்துக் கடமையைச் செய்வார்களா ஆளவந்தார்கள்?

ப. கு. இராமசாமி.

○●○

திருநெல்வேலி
12-11-49

மலர் மணம்

'பொங்கல் மலர்' முன் இரண்டு மலர்களேயும் விடச் சிறப்பான முறையில் வெளிவரும் என்பதைக் கண்டதும் உள்ளபடியே என்னுள்ளத்தில் உவகை பொங்கி வழிகிறது. 'பொன்னி'யில்புரண்டோடி வருகின்ற புதுப்புனல், வர்ணாஸ்ரமக் கோட்டையை உடைப்பதோடுமட்டுமல்லாமல் அதனோடு பிணேந்திருக்கும் முதலாளித்துவக் கோட்டையையும் சேர்த்துத் தகர்த்துக்கொண்டு, தமிழகம் முழுவதும் பாய்ந்து, வளப்படுத்துவதாக அமையவேண்டும் என்பது என் அவா. எப்படியாயினும், மலர்மிகச் சிறந்த முறையில் மணம் வீசும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

திருவரங்கன்

உத்தமபாளையம்
2-11-49

நான் விரும்புவது

எப்படிச் சமர்க்களத்தில் காயப் பட்ட வீரனை ஓர் 'நர்ஸ்' எடுத்து மருந்துகள் போட்டு, தன் இனிய மொழிகளாலும், குளிர்ந்த பார்வையாலும், அவ்வீரனைப் பிழைக்க வைத்துப் பிறகு சமருக்கு அனுப்புவது போல, நமது திராவிட நாட்டுப் பிரிவினைப் போரில் திறமையுறப் போரிட்டுக் காயமடைந்த மறவரைப் "பொன்னி" நல்லாள் தன் இனிய மொழிகளாலும், குளிர்ந்த பார்வையினாலும், திருக்கரங்களாலும், நம்மைத் தீண்டிப் புத்துயிர் அளித்துச் சமர் செய்ய அனுப்பத் தயாராக இருக்கிறாள். அணி வகுத்து நடத்தத் தளபதி 'மாலை மணி'யார் இருக்கிறார். போர்ப்பண் பாடப் புதுவைக்குயில் இருக்கிறார். போர் வீரர்களாய் நாங்கள் இளைஞர்கள் இருக்கிறோம், பின் ஏன் தயக்கம்? புறப்படுங்கள்; மாற்றாரை மாய்த்தொழிப்போம்-மாலை சூடுவோம் — மறுமலர்ச்சி உண்டாக்குவோம். மறுமலர்ச்சி, கிளர்ச்சியாக மாறினால் அன்றே மலரும் திராவிடத் தனியரசு. இதே நான் விரும்புவது.

மு. மணி

○●○

கரூர்
12-11-49

அண்ணா பரம்பரை

புதுமைக் குரலெழுப்போம் எனக் கடந்த பொன்னி இதழில் நண்பர் தமிழழகன் அவர்கள் குரல் கொடுத்தார். உள்ள நிறைவோடு அதனை வரவேற்கிறேன். சிதைந்துபோன ஜெர்மனியைச் செப்பனிட முயன்றான் ஹிட்லர். இரான், துருக்கி, சிரியா போன்ற நாடுகளில் முகமதிய முல்லாக்களின் முடிவில்லா ஆட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தான் முஸ்தபா கமால். தனது உன்னத இலட்சியங்களை உலகினர் உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதற்காகப் போட்ட கருஞ் சட்டையைப் பதினைந்து வருடம் கழற்றாது பணி புரிந்தான் மாஜினி. பனி படர்ந்த சமவெளியில் நள்ளிரவிலே கூடக் கொல்லும் குளிரில், தனது ஓட்டைக் குடிலில் உட்கார்ந்து உறைந்து போன ஊற்றெழுதியின் முனையை மெழுகு வர்த்தியின் சூட்டில் காய்ச்சிக் காய்ச்சி எழுதிக் குவித்ததன் மூலம் ஓர் புதிய சமுதாயத்தை உருவாக்கினான், பிரெஞ்சுப் புரட்சியின் தந்தை ரூசோ. புரட்சிக் கவிதைகளைப் பாடிப் புன்மையாளர்களைக் காய்ந்தான் விட்மன். இவர்களெல்லாம் தங்கள் எழுத்தால், எண்ணத்தால், பேச்சால், தீங்கவிதைகளால் புதுமைக்குரலெடுத்தனர். தமிழகத்திலும் புதுமைக் குரலெடுக்கப் 'பொன்னி நல்லாள்' கொடுத்தனள் பாரதிதாசன்பரம்பரையை. ஆனால் இதுமட்டும்போதாது, போர்ப்பரணி பாடிப் புரட்சி வித்தை உள்ளத்திலே தூவப் பாரதிதாசன் பரம்பரை என்றால், அப்புரட்சி வித்து வளரத் தண்ணீராகவும் அறியாமையின் ஆணி வேருக்கு விடப்படும் வெந்நீராகவும் ஒரு அண்ணாவின் பரம்பரை தேவை. புரட்சித் தீப்பொறிகளைக் கிளப்பப் பாரதிதாசன் பரம்பரை, அதனைத் தீயாக மாற்றிப் பரப்பும் புயல் அண்ணா பரம்பரை. பொன்னித் தாயீன்று கொடுப்பாளா அண்ணா பரம்பரையை? பொன்னி ஈன்று கொடுக்கும் இந்த இரட்டையரின் புதுமைக் குரல் அவனி முழுதும் பவனிவர, திக்கெட்டும் சென்று எதிரொலிக்க. அதுகண்டுபொன்னியின் வதனம் புன்முறுவல் பூக்க, அம் முல்லை முறுவலின் உதய ஒளியிலே எங்களின் இலட்சியக் கனவின் நிறைவேற்றத்தைக் கண்டு களி கொள்ளும் அந்நாள் எந்நாளோ?

"கனலன்"

கட்கேசர்
18-11-49

சொற்பொழிவு நற்பலன் தரும்

10-11-49 'பொன்னி' கிடைக்கப் பெற்றுப் புதுப் பகுதிகள்

கண்டுமகிழ்ந்தேன். பிறரும்மகிழ்கின்றனர். மாகாணத்திற்குவெளியில் உள்ளவர்களுக்கு இயக்கத்தைப் பற்றிய செய்தியே சரியாகக் கிடைப்பதில்லை; இத்தரு நேரத்தில் இயக்கப் பிரசாரகர்களின் சொற்பொழிவுகளை வெளியிட முடிவு செய்தது நல்ல பலன்தரும். தடுமாறியவர்களை நிலைப்படுத்துவதோடு, ஆங்காங்கு மேலும் பலரின் சிந்தனையை கிளரித் தம்பாலராக்க ஏதுவாக இருக்கும் என நம்புகிறேன். தங்களின் இந்தமுடிவைத் தவருது நிறைவேற்றும்படி வேண்டுகிறேன்.

மு. கிருட்டினமூர்த்தி

○●○

நூடத்தை
17-11-49

எந்நாளோ?

"மதிமுகம்" மான் விழி, பிறை நுதல், கொவ்வை இதழ் மின்னல் மொழி, கார்குழல், மலர்க்கை, நுண்ணிடை, இப்படி" இருக்கும் ஆண்களின் 'அரச்சனை' ஆரணங்குகளைப் பற்றி; பொருத்தமோ அன்றிச் செறிவோ இருக்கவேண்டுமென்ற வரையறையின்றி! ஆனல் "மங்கையொருத்திதரும்சுகமும் எங்கள் மாத்- தமிழ்க் கிடில்லை" எனத் தக்க தமிழின்பத்தையே தன்னுளடக்கிக் கொண்டு பவனி வரும் "பொன்னி" மங்கையைப் போற்றுதல் இப் பெற்றியதே என ல் பொருத்தமுடைத்தா? "பெண்கள் தங்கள் கஷ்டங்களைத் தாங்களே எழுதினல் தான் உள்ளது உள்ளபடியே இருக்கும்; படிப்போர் உள்ளத்தையும் உருக்கும். நம் நாட்டுப் பெண்மணிகள் ருஷிய நாட்டுப் பெண் எழுத்தாளர் வாண்டா வாஸிலெவ்ஸ்காவைப் போலஎழுத வேண்டும். அந்த இன்பப் புதிய நாள் என்னுளோ?" எனக் குறிப்பிட்ட அந்த இன்பநாளைத் தமிழகம் அடையும் கால அளவு "பொன்னி" யை நம்நாட்டு நங்கையர் பயன்படுத்தும் அளவினதாகவே இருக்கும் எனல் சாலும். ஓரிரு சுலோசனைக்களால் மட்டுமே அறிஞர் ஏறுவின் விழைவை நிறைவேற்றல் இயலாத தொன்று. எனவே ஆரணங்குகள் ஆயிரக்கணக்கில் ஆயத்தப்படவேண்டும் அப்பணி புரிய. மற்றும் பல துறைகளிலும், பற்பல மூவலூர் மூதாட்டிகளும், நாகம்மையார்களும், டாக்டர் தருமாம்பாளம்மையார்களும், சத்தியவாணிகளும் தோன்றவேண்டும் என்பதைப் "பொன்னி" சொல்லாமற் சொல்கிருள்

சௌ. உலகஒளியாள்

○●○

பீளமேடு
13-11-49

மாணவர் கடமை

எந்தப் பெருங்குடி மக்களுக்குக் கல்வியானது தலைமுறை தலைமுறையாக மறுக்கப்பட்டு வந்ததோ அந்த மாணவர்கள் நன்மைக்காக வைக்கப் பட்டிருக்கும் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் அமளி நடத்த விரும்பியது ஒரு சிறு கும்பல். சட்டத்திற்குக் கட்டுப்படாத இந்த மாணவர்களின் கோரிக்கை தவறு என்பதைத்தக்க காரணங்களால் எடுத்துக் காட்டிச் சரியான சம்மட்டி அடி கொடுத்திருக்கிறீர்கள் 10-11-49 தலையங்கத்தில் பொன்னி இதழில். "மாணவர் கடமையை" விளக்கி அவர்களின் இரு கோரிக்கைகளும் தவருனவைமட்டுமல்ல, அவற்றை நிறைவேற்ற எண்ணிய முறையும் தப்பு, என்பதை வெள்ளிடை மலையாக எடுத்துக் காட்டியிருக்கிறீர்கள்! தமிழ்ப் பற்றுக்கொண்டுள்ள பல்கலைக் கழகத்திற்கு ஏற்பட்டுள்ள கீழ் நிலையையும், தமிழ்ப் பெருமக்களுக்கு விளக்கி யிருக்கிறீர்கள்! அண்ணுமலை அமளியைப் பற்றி நாட்டினர் நல்லதோர் எண்ணம் கொள்ளத் தங்கள் தலையங்கம் ஓர் எடுத்துக் காட்டு, புது உருவில் வெளிவந்துள்ள 'பொன்னி' நல்லாள் வாழ்க! அவளது எழில் "மாணவர் கடமை" என்ற தலையங்கத்தின் மூலம் சிகரத்தை அடைகிறது. சட்டத்திற்குக் கட்டுப்படாத மாணவர்கள் அறியட்டும்

உண்மை நிலையை உணர்ந்து திருந்தட்டும்.

இரா. ஆ. நமசிவாயம்

○●○

வேலூர்
15-11-49

ஆங்கிலத்தினசரி வேண்டும்

இன்று திராவிடமுன்னேற்றக் கழகக் அரசியலார் எதிர்பாராத வகையில் அவர்கள் அஞ்சிநடுங்கும் அளவிற்குத் தமிழ் நாட்டிலும் தென்னிந்தியாவிலும் விரைந்து பரவியுள்ளது. ஆனல் இவ்வளவு பெரிய செல்வாக்குள்ள ஓர் அமைப்பிற்கு ஒரே ஒரு தமிழ்த் தினசரி மட்டுமே உள்ளது வருந்தத்தக்கது. அது போதாது. குறைந்தது திராவிட மொழிகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு தினசரி இதழ் இருந்தே ஆகவேண்டும். இன்றைய உலகத்தின் கண்ணுடி செய்தித்தாள் தானே? ஆதலின் இது உடனடியாகக் கவனிக்கப் படவேண்டிய பிரச்சனையாகும். அப்படி ஒவ்வொரு மொழியிலும் ஒரு தினசரி அமைக்கத் தற்போது முடியாவிட்டாலும் கட்டாயமாக ஒரு ஆங்கிலத் தினசரியாவது இருந்தாக வேண்டும். கல்லூரிக் காளைகளின் முழு ஆதரவையும் பெற்ற நமது கட்சியின் ஆங்கிலத் தினசரி, ஆரம்பிக்கப்பட்டால் வெற்றிகரமாக நடைபெறும் என்பது உறுதி. இன்று உள்ள 'இந்து'வும் மற்ற ஆங்கிலப் பத்திகைகளும் தாம் நம்கழகத்தின் நடவடிக்கைகளை இருட்டடிப்புச் செய்கின்றனவே! நமக்கென்று ஒன்று வேண்டாமா?

நெ. திரு. தர்மலிங்கன்

○●○

திருப்பாப்புலியூர்
13-11-49

பார்ப்பனீயத்தை விட்டொழித்தேன்

என் உள்ளத்தில் குமுறிக் கொண்டு, நெடுநாளாக வேதனையளித்து வரும் ஒரு விஷயத்தை உங்கள் 'பொதுமேடை'யில் விவாதிக்கலாம் என்று இதை எழுதலுற்றேன். நான் ஒரு "பார்ப்பனன்" என்றாலும் வாழ்வின் எத்துறையிலும் நான் சாதி, மதம் முதலிய பற்றுக் கொண்டு எப்பிரச்சினையையும் அணுகுவதில்லை. என் மனச் சாட்சிக்குச் சம்மதமாக நடும் கண்ட நியாயத்தை யாருக்கும் வழங்கத் தவறியதில்லை. இன்னும் தெளிவாகச் சொல்லப் போனால் என் சிறந்த நண்பர்களில் பெருவாரியானவர் பிராமணர் அல்லாத 'திராவிடத்' தோழர்களே; நான் வாழ்க்கையில் இன்னல் அடைந்த போதும் உதவி புரிந்தவர்களும் பெரும்பாலும் அவர்களே. இது மட்டுமல்ல. பிறவியினால் வெறுக்கத் தக்க ஒரு வகுப்பாரைச் சேர்ந்த நான் 'பார்ப்பனீ'யத்தை அறவே விட்டொழித்தது மட்டுமல்ல; அறிஞர் அண்ணாத்துரை போன்ற சிறந்த அறிவாளிகளின் உயர்ந்த பிரசாரத்தின் காரணமாகச் சீர்திருத்த வெள்ளத்தில் இழுக்கப்பட்டு வெகுவாக முன்னேறி அறிவுப் பாதையில் சென்று வருபவன். என் சொந்த வாழ்வின் குறுகிய எல்லைக்குள் 'பார்ப்பனீய'த்தை விட்டொழித்து, மக்களிடையேயும் என் சக்திக்குட்பட்டுப் பிரசாரம் செய்து சமூகத்தைத் திருத்த உழைத்து வருகிறேன். நான் இக்கடிதத்தின் தலைப்பில் கண்ட 'வேதனை' யளித்து வரும் விஷயத்துக்கு இப்பொழுது வருகிறேன்- தற்போது நான் வேலை செய்துவரும் காரியாலயத்தைச் சேர்ந்த சிலர், நான் 'சீர்திருத்தவாதி' என்று சொல்வதெல்லாம் வெளி வேஷம் என்றும், 'பார்ப்பனர்கள்' திருந்தவே முடியாது என்றும் சொல்லி நான் எந்த முன்னேற்றக் கருத்தை ஆதரித்துப் பேசினாலும் 'சந்தேகக் கண்' கொண்டு என்னை அலட்சியம் செய்கிறார்கள். எனினும், 'பார்ப்பனர்'கள் செய்வதும் சொல்வது எல்லாம் திராவிடர்களுக்குத் தீமை செய்யும் என்று நினைக்கக் கூடாது என்று என் திராவிட நண்பர்களை மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன் வி. எஸ். கிருஷ்ணசாமி

* பரிசுபெற்ற கடிதம்:- கே. குமாரசாமி, 2/30 நமினியப்பன் தெரு மண்ணடி, சென்னை, ரூ5/-மணியார்டர் செய்யப்பட்டது.



மூன்றும் பாகம்

முதல் அத்தியாயம்

தெற்கே!

இடம் சென்னை செயிண்ட் ஜார்ஜ் கோட்டை! அந்த வானளாவும் மண்டபத்தினுள் குழப்பம். ஏன்?

வெள்ளை வியாபாரத் தலைவர்களிடம் பரபரப்பு. வருணிக்க முடியாத ஒரு அவசரக் கோலம்! கிலி கொண்டிருந்தனர் அந்த 'கிளார்க்குகள்' கூட்டம். மொத்தத்தில் சொன்னால் எல்லோருமே பீதி யடைந்தனர்.

தென்னாட்டில் பிரஞ்சு ஆங்கிலோ போட்டி பலமாக இருந்தது. அந்தப்போட்டியின் உருவம் பல விதமான திரைகளுக்குள் புகுந்து கொண்டு ஆடிற்று! அந்தப் போட்டியை ஒழிக்கப் போட்ட திட்டங்கள் எல்லாம் போரிலேதான் முடிந்தன. அமைதியான முறையில் ஆக்க வேலைகளுக்கு ஊக்கம் தரும் வகையில் எதுவும் அமையவில்லை.

ஹைதராபாத் அரசன் நிஜாம் உல்முல்க் திடீரென இறந்து விட்டான். பிறகு யார் பட்டம் பெறுவது? இறந்த மன்னனுக்கு நாசர்ஜங் என்றொரு மகனும், முசபர்ஜங் என்றபேரனும் உண்டு. அவர்கள் பட்டத்துக்கு வாரிசுதார்கள்! ஆகவே அரச பதவியை அடைவதற்கு மகனுக்கும் பேரனுக்கும் போட்டி! அவர்களில், பேரன் முசபர்ஜங் பிரஞ்சுக் கவர்னர் டூப்ளேயைக் கட்டாயம் உதவிசெய்ய வேண்டுமென்று மன்றாடினான், அவனும் அவனது வெற்றிக்கு உழைப்பதாக உறுதி கூறினான். உதவிகள்பல புரிந்தான், என்றாலும் மகன் நாசர்ஜங்கே அந்த பட்டப் போட்டியில் வெற்றிபெற்றான், முடியும் சூடிக் கொண்டான். பிரஞ்சுக்காரர்கள் சரித்திரத்தையே மாற்றி எழுதினார்கள். சூழ்ச்சியால் நாசர்ஜங்கை வீழ்ச்சி

யடையச் செய்தார்கள். வெட்டுண்டு மாண்டான் நாசர்ஜங். சிறைப்பட்டிருந்த பிரஞ்சு 'செல்லப்பிள்ளை' முசபர்ஜங் முடி சூட்டுவிக்கப் பெற்றான். பிரஞ்சுக்காரர்கள் கூத்தாடினார்கள். டுப்ளே—மத்தே - பாத்—டுப்ளே ஜெயங்கொண்டபுரம்—என்று அவர்களின் வெற்றியைக் கொண்டாடும் வகையில் ஒரு நகரையே பிரஞ்சுக் 'கவர்னரின' பெயரால் அழைத்தார்கள். 'ஜெயஸ்தம்பம்' வேறு நாட்டப் பெற்றது. நவாப் பட்டம் வேறு கொடுத்தார்கள்.

அது மட்டுமா......?

கர்னாடகத்தில் அன்வாருதீன் ஆண்டு கொண்டிருந்தான். சந்தா சாகேப் ஆட்சியுரிமை பெற உரிமையுள்ளவன். அவன். பிரஞ்சுக் காரருடன் கொஞ்சிக் குலவினான். 'கர்னாடக முசபர்ஜங்' காகப் பயனபடுத்தப் பட்டான்! அவனை மகாராஷ்டிரர்கள் சிறையிட்டார்கள். அப்பொழுது பிரஞ்சுக்காரர்கள் அவனுக்காகப் பரிந்து வந்தார்கள். அவனதுகுடும்பத்திற்குத்தக்க பாதுகாப்பு அளித்தனர். பிறகு அவனை மீட்பதற்குப பெருந்தொகை கொடுத்தனர். சந்தா சாகேப் வெளியில் வந்தான். பிரஞ்சுக்காரரின் உதவியினாலும், தூண்டுதலினாலும் நவாபுடன் போருக்கே கிளம்பி விட்டான். ஆம்பூர் என்ற இடத்தில் பயங்கரப் போர் நடந்தது. நவாப் தோற்றான். அவன மகன் முகாமது அலி திருச்சிக் கோட்டையிலே ஒளிந்து கொண்டான்.

இப்படிப் பிரஞ்சுக்காரர்கள் வாகைசூடிக் கொண்டு தென்னாடு முழுவதும் திரிந்தார்கள். பிரஞ்சுக் கவர்னர் டுப்ளேயின் செல்வாக்கு உச்ச நிலையிலிருந்தது. வெள்ளையர் வாய் பொத்தி, கை கட்டி யிருக்க முடியுமா! வெள்ளையர் நிலை? ஆங்கிலேயரின் எதிர்காலம்? பெரிய இருட்டு, காரிருள்! ஆனால் ஆங்கிலேயர்கள் பெரிய தந்திரககாராகளல்லவா? வரலாற்றையே புரட்டி எழுதிவிட மாட்டார்களா?

காலத்திற்கேற்ற முறையில் ஆங்கிலேயருக்குக் கிளைவ் என்ற பெருவீரன் கிடைத்தான. அவன தந்திரயோசனைகள் ஏற்றுக்கொள்ளப் பெற்றன. உடனே திருச்சிக் கோட்டையிலே திருடனைப் போல விழித்துக்கொணடு கிடந்த முகமமது அலிக்கு உதவி செய்வதென முடிவு செய்தனர். திருச்சியிலே வெளளையர் முற்றுகையிடப் புறப்பட்டுவிட்டனர். இந்தச் சேதி கேட்டவுடன் சந்தா சாகேப் தனது ஆற்காட்டுக் கோட்டையிலே இருந்த வீரர்கள் அனைவரையுமே அழைத்துக் கொண்டு புறப்பட்டான். எவ்வளவு போராட்டங்கள்...... ஆரணிச் சண்டை! காவேரிப் பட்டினப் போர்! திருச்சியில் தீரப் போராட்டம்! என்று நிகழ்ச்சிகள் தொடர்ந்தன. இந்த நேரத்தில் கிளைவ் பாதுகாப்பிழநதிருந்த ஆற்காட்டை வெகு எளிதில் பிடித்துவிட்டான.

பிறகு கௌண்டிலாவி என்ற வீரனுடன் சலவரம! என்னென்ன வகையான போராட்டங்கள்! ஆம், கடைசியாகப் பிரஞ்சுககாரர்களின் ஆதிக்கத்தை எப்படியோ ஒழித்து விட்டனர்! வெகுபாடு

பட்டு, பல போராட்டங்களை நடத்தி இந்தக் காரியத்தைச் சாதித்தார்கள் ஆங்கிலேயர்கள்.


வெற்றியென்ற கோபுரத்தைப் பல வீரர்களின் பிணங்களால் அல்லவா கட்டுகிறார்கள்! அதற்கு அழகு செய்ய உயிர்களெனும் வண்ணச் சுண்ணக் குழைவுகள்! மூளை பலமெனும் தீட்டுக் கோல்கள்...... அப்பப்பா! வெள்ளையர் வெற்றியடைந்திருந்தாலும் வேறு ஏதாவது புது ஆபத்து வந்துவிடுமோ என்று பயந்துகொண்டிருந்தனர். தெற்கே இப்படிப் பயந்துகொண்டிருக்கும்பொழுதுதான் வடக்கே அந்தப் பேராபத்து... .... கல்கத்தா வீழ்ச்சி நடந்தது.

இரண்டாம் அத்தியாயம்

முதல் உதவி!

வெள்ளையர் இங்கு வரும்பொழுது வேறு எந்த எண்ணத்துடனும் வரவில்லை. ஆளும் நிலைமை ஏற்படும் என்று அவர்கள் கனவிலும் கருதவில்லை. கி. பி. 1600ல் முதன் முதல் பண்டகசாலை அமைக்கும்பொழுதும, அதற்குப் பின்னால் சில பல ஆண்டுகள் வரையிலும் அவர்களுடைய நோக்கமெல்லாம் வணிகத் தொழிலைப் பெருக்குவதுதான்!

ஆனால்? காலமும் சூழ்நிலையும் அந்தப் போக்கை மாற்றிவிட்டன. அவர்கள் தங்கள் வியாபார வளர்ச்சிக்கு உள்நாட்டு அரசியல் வாதிகளின் துணை தேவையென்றுணர்ந்தார்கள். ஆகவே தான உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுமாறு தளளப்பட்டார்கள். வெறறியுங் கண்டார்கள். நுழைந்தார்கள். வெற்றியோடு வெளியிலும்வந்தார்கள்



திடீரென்று கல்கத்தாவிலிருந்து செய்தி வந்தது — ஜூலை 15ல் காசிம்பஜார் கோட்டை சுபேதார் கைவசமாகிவிட்டது என்று! திடுக்கிட்டார்கள். அவர்கள் ஏற்கனவே கல்கத்தாவின் பலமற்ற நிலையை உணர்ந்தார்கள். கல்கத்தாவின் அங்காடிகள் நிலைமை மோசந்தான. ஆகவே இராணுவத்தை அங்கு வளர்க்க, பெருக்க முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று எண்ணினார்கள்.

நிலை குலையப்போகும் கல்கத்தாவிற்கு என்ன முதல் உதவிசெய்வது? யார் அந்த உதவியைச் செய்யமுடியும்? நேரிலா, சென்னையிலிருந்தபடியா?...... இப்படிச் சிந்தித்தார்கள். அப்பொழுது அவர்கள் எண்ணத்தில் வந்த செய்தி இதுதான்: உடனே ஒரு படையை அனுப்புவது! ஆனால் இதில் முன்னெச்சரிக்

படவேண்டிய செய்தியொன்றுண்டு. கல்கத்தாவில் உள்நாட்டுச் சுபேதாருக்கும் வந்தேறிகளாகியவணிகர்களுக்கும் சண்டை. ஆகவே படையில் கூலிக்காகச் சேர்ந்துள்ள நாட்டவர் வணிகர்களை எதிர்த்தே போரிட்டாலும் போரிடலாம். ஆகவே வெள்ளையர்களே நிரப்பிய ஒரு படை அனுப்புவதென்று முடிவு செய்தனர்.

மேஜர் கில்பேட்ரிக் படைக்குத் தலைமை வகிக்க இசைந்தார். 230 பேர் கொண்ட ஒரு பெரும் படை அவர் ஆணையின் படி நடக்க அனுப்பபபட்டது!

ஆனல் அதனல் அடைந்த பயன... ஒன்றுமில்லை!

அந்தக் காலத்தில் கடற் பிரயாணம் என்ருல் 'கைலாச யாத்திரை' என்றுதான் அர்த்தம்! சமுத்திரராசன் தயவில்கள் — அவர்களைத் தாண்ட வேண்டும்! வாயுதேவன் உத்தரவு வேண்டும். இத்தனையும் கடந்து செல்ல வேண்டும். இப்படிப் பல 'கஷ்ட நஷ்டங்க'ளிடையே புகுந்து கில்பேட்ரிக் வந்து சேர்ந்தான் பல்டா என்ற கடற்கரைக் கிராமத்தில் தங்கியிருந்தான்.

ஆனல் புறப்பட்டவர்களில் பலர் பல்டாவரை உயிருடன் வரவில்லை. எண்ணிக்கையில் வரவரக் குறைந்து விட்டனர். பலர் வழியிலே மடிந்து விட்டனர். ஆகவே அவர்களின் நிலைமை மகாமோசம். இருநூற்றுமுப்பது பேரில் முப்பது பேரே போரிடத்தக்கவர் எஞ்சியிருந்தனர். பரிதாபம்! முதல் உதவி செய்யப்போனவர்கள் கடைசி உதவியை அவர்களிடமே எதிர்பார்க்க வேண்டியவர்களாகி விட்டனர்.

மூன்ரும் அத்தியாயம்

வியாபாரக் குழு!

அன்று கல்கத்தாவின் கோர நிலையைப் பற்றிப் பேசவே வியாபாரக்குழு கூடிற்று!

கல்கத்தா. அங்கு என்ன நடந்தது? விபரந்தேவை — விளக்கமாக — விரிவாக. கல்கத்தாவைச் சுபேதார் பிடித்து விட்டாரா? அத்துடன் விடவில்லையாமே! இருட்டறையில் தள்ளி நம்மவரை — நூற்றிருபத்து மூவரைக் கொன்று குவித்து விட்டாராமே! என்ன அநியாயம்! என்ன கொடுமை! கொன்று விட்டார்!...... ஹஹஹா...... கொலைகாரனுக்கு மதிப்பு—அவர் பட்டம்! அந்த மதிகெட்ட மடையனை விடக்கூடாது... உடனே தக்க திட்டம வேண்டும் அவன் மண்டையிலே அடிக்க, நாம் தான் தீவிரமாக அதனைத் திட்டிட வேண்டும். அந்த தீயனின் தூய்மையற்ற செயலுக்குத் தக்க விடைதர வேண்டும்...

இப்படிப் பலர் வாதமிட்டனர். வாதம் வரவரச் சூடாகி விட்டது. உறுப்பினர்கள் தங்கள் தங்கள் ஆத்திரத்தைக் கொட்டியளந்தனர்.

முதலில் ஆர்ம் துரை எழுந்தான். அவன் பெரிய சரித்திர



ஆசிரியன். கல்கத்தாவில் வாழ்ந்தவன். அதன் நிலவரம் தெரிந்தவன். அதற்கு மாற்று மருந்து எதுவெனப் புரிந்தவன். அவன் தொடங்கினான் இப்படி...

"கனம் தலைவர் அவர்களே! இதனை உடன் கவனித்து ஆவனசெய்ய வேண்டுகிறேன்" கணீரென ஒலித்தது அவன் குரல்.

"ஆமாம் இது அவசியம் கவனிக்கப்பட வேண்டியது. ஆபத்து நமது நிழலாகிறது. இனிச் செல்லுமிட மெங்கும் தொடரும்!" அடுத்தபடி பேசிய அட்மிரல் வாட்சனின் பேச்சு இது.

பிறகு ஒருவர் —

"உடன சுபேதாருடன் நேச உடன்படிக்கை செய்து கொள்வது நலம்"

அடுத்தவர்—

"அதை நான் அழுத்தந் திருத்தமாக ஆமோதிக்கிறேன். இப்பொழுதுள்ள நிலைமையில் சண்டையிட வலுவில்லை. வம்பை விலைக்கு வாங்க வேண்டாம்"

ஆர்ம் முகம் கறுத்தது. வெள்ளைமுகம் சினத்தால் இரத்தம் ஏறிக்குப்பென்றுசிவந்தது!

"சற்றுக் கவனிக்க வேண்டும். சமரசம் பேசிச் சாந்தி அடைவதென்பது தகிடுதத்த வேலை — பாம்பு கடித்த ஒருவனுக்கு விசிறி கொண்டு வீசுவது போலத்தான்! கடித்த இடத்திலிருந்து விஷம் பரவுவதற்குள் பாய்ந்து கடித்துத் தசையைக் கொத்தாகப் பிடுங்கிடவேண்டும். அதுவும் கடித்த பாம்பைக்கொண்டே ஏற்றிய நஞ்சை இறக்க வேண்டும். அதுதான் அறிவுடையவர் செயல்!"

"சொல்வது விளங்கவில்லையே"

"அதற்காகத்தானே பேசுகிறேன. விளங்கும். பொறுத்

திருங்கள். நான் சொல்கிறேன். என் கல்கத்தா அனுபவத்தின் மீது ஆணையிட்டுச் சொல்கிறேன். ஒரு படை போகவேண்டும். ஆமாம், கட்டாயம் இந்த உதவி தேவை"

"அதுதான் சரி"

பல குரல்கள்!

"வேண்டாம்"

சத்தம் கட்டைதான் — ஆனால் வாதம் வரவர வளர்ந்து கொண்டே இருந்தது.

முதலில் கப்பற் படையைப் பற்றிச் சிந்தித்தனர். நெடுநேர சிந்தனைக்குப் பின் அட்மிரல் வாட்சன் தலைமையில் கப்பற் படையை அனுப்புவதென முடிவு செய்தனர்.

தரைப் படையைப் பற்றிப் பிரச்சினை வந்தது. காலமாகி விட்டது. வாதம முடியவில்லை வியாபாரக்குழு கலைந்து கலைந்து கூட வேண்டிவந்தது. இரண்டு திங்கள் வரை அவர்களது வாய்ச் சண்டை ஓயவில்லை! ஒவ்வொரு நாளும் வாதித்தனர். தரைப்படைத் தலைவர் யார்?— ஒரு நாள் வாதம்! அவருக்குள்ள அதிகாரம்?— பிறிதொருநாள் இந்த ஆராய்ச்சி! அவர் கடமைகள் என்னென்ன, கப்பற்படைத் தலைவருக்கும் அவருக்கும் உள்ள தொடர்பு யாது, பழைய கல்கத்தா கவர்னரிடம் அவர் கொள்ள வேண்டிய முறை...... இப்படிப் பேசிக் கழித்தனர் பொன்னான காலத்தை!

பைகாட், ஆல்டர்கிராம் ஆகியோர் தலைமை வகிக்கத் தவித்தனர். தகுதியோ பூஜ்யம்! லாரன்ஸுக்குத் தலைமை வகிக்கத் தகுதி யிருந்தது. ஆனால் வயது குறுக்கிட்டது. அவர் குடு குடு கிழம்! அவரது தளர்ந்த உடல் தடையாய் நின்றது.

இந்த நேரத்தில் ஆர்ம் எழுந்தான்!

"அவையோரே! நான் அருமையான படைத்தலைவனைக் கண்டு பிடித்துள்ளேன். அவனை அனுப்பினால் வெற்றி நிச்சயம்... அவன் பெயர்கிளைவ் ... ஆற்காட்டு வெற்றிவீரன்!"

அந்த மூன்றெழுத்தை ஆர்ம் ஓத, வீரன் லாரன்ஸும் தாளம் போட்டான்! வியாபாரக் குழுவினர் கிளைவைத் தக்க அதிகாரத்துடன தலைவராக்கினர். ஆனாலும் அவன் தலைமைப் பதவிக்கு எதிர்ப்பு இல்லாமல் இல்லை. கல்கத்தாவிலிருந்து புறங்காட்டித் தப்பியோடிவந்த மானிங்ஹாம் தடுத்தான். அவனது எதிர்ப்பைக் குப்பையில் தளளினர். ஆல்டர்கிரான் பொறுமையிழந்தன் தனது படையைக் கிளைவின் தலைமையில் அனுப்பவும்மறுத்துவிட்டான். ஆகவே எதிர்ப்பிற்கிடையே கிளைவ் தரைப்படைத் தலைவனானன்! (தொடரும்)

சுருக்கு வழி!

ஒருவர் தலைவராக வேண்டுமானல் — அல்லது பிரபலமடைய வேண்டுமானல் சீக்கிரமாக அவர் பிரசங்க மேடை ஏற வேண்டும்; எல்லாத் தலைவர்களையும், பிரமுகர்களையும் வேகமாகத் தாக்கிப் பேசவேண்டும். ஆபாசமாகப் பேசத்தெரிந்தால் இன்னும் விசேஷம்— நிச்சயம் இந்த நாட்டுப் பாமர மக்கள் அவரைக் கைதட்டி வரவேற்பார்கள்!

—அனுபவஞானி

உலகப் போர் இனி உண்டா?

ரா. துணைலன்

போர் ஏன் ஏற்படுகிறது?

இந்தக் கேள்விக்குத் தெளிவான பதில் தரவேண்டும். அரசியல் வாதிகளைப்போல் காரணங்களைப்போட்டுக் குழப்பக்கூடாது. குழப்பவேண்டிய அவசியமும் இல்லை. ஏன் என்றால், ஒரு கட்சிச் சார்பில் பரிந்து மற்றொரு கட்சியை நிந்திக்கவேண்டிய நிர்ப்பந்தம் நமக்கு இல்லை.

சமுதாயத்திலே பல குடும்பங்கள் இருக்கின்றன. குடும்பங்களின் உள்நாட்டு உறுப்பினர்கள், அதாவது கணவன், மனைவி, குழந்தைகள், தாய், தந்தையர், உற்றார் உறவினர் முதலிய எல்லோருடைய அந்தஸ்தும் எல்லோருடனும் பழக வேண்டிய முறைமையும் சில சட்டங்களால், பழக்க வழக்கங்களால் பாதுகாக்கப்பட்டிருக்கின்றன. அதைப்போலவே குடும்பங்களும் ஒன்றுடன் ஒன்று பழகவேண்டிய முறைகளில் தம்மை அறியாமலே சில சட்டங்களுக்குக் கட்டுப்பட்டிருக்கின்றன! இதைப் போல் உலகத்திலும் நாடுகள் பலவும் ஒன்றுடன் ஒன்று பழகுகின்ற முறையிலும் சில சட்டங்கள், விதிகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இந்த விதிகள் முறிக்கப்பட்டால் போர் ஏற்படுகிறது. இவை ஏன் முறிக்கப்பட வேண்டும்? ஏன் பல்லாயிரக்கணக்கான உயிர்களைப் பலிபீடத்தில் சாய்க்கும் போர்கள் ஏற்படவேண்டும்?

அமைதியான, பலம் வாய்ந்த குடும்பங்களைக் கொண்ட சமுதாயம்தான் அமைதியாக ஒழுங்காக வாழ முடியும். அதற்கு எல்லாக் குடும்பத்தினுடைய பொருளாதார, கலாச்சார பழக்கங்களும் ஒரே மாதிரியானதாக இருக்கவேண்டும். குடும்பத்தின் உறுப்பினர்களும், மனித இனத்தின் குறைபாடுகளுக்கும் அதனால் ஏற்படும் சிறிய தவறுகளுக்கும் விலக்களித்துவிட்டால், சமமான பொருளாதார வசதிகளை, அனுபவிக்க வேண்டும். அண்ணன் தங்கச் சங்கிலியில் கைக்கடியாரம் அணிந்து கொண்டிருக்கும்பொழுது தம்பி ஒரு சாதாரண கடியாரம்கூட இல்லாமல் தவித்துக்கொண்டிருக்கக்கூடாது. ஒருத்தனுக்கு மாத்திரம் நல்ல சாப்பாடு; இன்னொருத்தனுக்கு மட்டமான கூழ் என்ற நிலைமையில் எந்தக் குடும்பமுமே நடைபெற முடியாது; அதைப் போலவே ஒரு கிறிஸ்தவனும் முஸல்மானும் சேர்ந்தோ, முஸ்லிமும் இந்துவுமோ ஒரு

வெற்றிகரமான குடும்பத்தை நடத்திக்காட்ட முடியவில்லை. அப்படி ஒரு குடும்பம் நடைபெற வேண்டுமானால் அந்தக் குடும்பத்தின் ஒவ்வொருவரு வரும் அளவுக்கு மீறிய மனப் பண்புபடைத்தவராக இருக்க வேண்டும்.

இதைப் போலவே, ஒரு நாடானது சக்திவாய்ந்த அரசாங்கத்தை உடையதாக இருக்கிறது என்றால் ஒழுங்கான, பெருமைபடத்தக்க உறுதியான கட்டுக்கோப்புடன் இருக்கிறதென்றால் அந்த நாடானது கண்டிப்பாகச் சம அந்தஸ்துள்ள குடிகளை உடையதாக இருந்தே ஆகவேண்டும். அதாவது எல்லாக் குடிகளுக்கும் சமமான பொருளாதார வசதிகளை அனுபவிக்க உரிமைகளும் வழிகளும் அளித்திருக்க வேண்டும். அது மாத்திரம் அல்ல, அதன் குடிமக்கள் எல்லோரும் ஒரேவிதமான கலாச்சாரம், அதாவது மதம், ஒழுங்கு, பழக்க வழக்கங்கள் முதலியவை – உடையவர்களாக இருக்கவேண்டும். அல்லது ஒவ்வொரு வகுப்பினரும் மற்றைய வகுப்பினரின் நாகரிகத்தையும் பழக்கவழக்கங்களையும் மதிக்கும் மனப் பண்புடையவர்களாக இருக்க வேண்டும்.

இந்த முறைப்படி பார்த்தால் இன்றைய உலகத்தில் பெரும்பான்மையான நாடுகள் இந்த நிலையில் இல்லை என்பது தெளிவாகத் தெரியும். இன்று ஒவ்வொரு நாடும் கடுமையான உள்நாட்டுப் பூசல்களில் மாழ்கிக் கொண்டிருக்கின்றன என்பது எல்லோரும் அறிந்ததே. இந்தியா, பர்மா, சீனு, சயாம், இந்தோனேஷியா, மலேயா ஆகிய நாடுகளில் நடைபெற்று வரும் பயங்கரமான உள்நாட்டுக் குழப்பங்கள். கிரீஸின் உள்நாட்டுப் போர் — பிரான்ஸில் மந்திரி சபைகள் 'பல்டி' அடிக்கும் விந்தை — கிழக்கு ஜெர்மனி, மேற்கு ஜெர்மனி, தென் கொரியா வட கொரியா என்று ஒரே நாடுகள் இரண்டிரண்டு அணிகளில் பிரிந்து நிற்பது — ஸ்பெயினில் கிளர்ச்சிகள் — அமெரிக்காவில் பயங்கர கம்யூனிஸ்ட் வேட்டை இவை எல்லாம் எதைக் காட்டுகின்றன? இந்தக் குடும்பங்கள் ஒழுங்காக நடைபெறவில்லை, பலவீனம் அடைந்து வருகின்றன, அண்ணன் தம்பிசண்டைகளில் ஒருத்தருக்கொருத்தர் கொடூரமான குரோதம் அடைந்து ஒருத்தரை ஒருத்தர் அழித்துவிடக் கங்கணம் கட்டிக்கொண்டு மறைமுகமான சதிகளில் ஈடுபட்டிருக்கின்றனர், என்பதைத் தான்.

பெரும்பாலான நாடுகள் உள்நாட்டுப் போர்களுக்கு இலக்கானதும், இன்னும் பெரும்பாலான நாடுகள் உள்நாட்டுப் புரட்சிகளை எதிர்நோக்கிக் கொண்டிருப்பதும் எதனால்? அந்த நாடுகள் தன்னுடைய மக்களுக்குச் சமமான அந்தஸ்து, வாழும் நிலைமை அளிக்கவில்லை என்பதனால் தான், அந்த நாடுகள் தனது குடிகளுக்குப் பொருளாதார சமத்துவம் அளிக்காததனால் தான்.

இந்தத் தேசத்தை எடுத்துக் கொண்டால் சுமார் முப்பத்திரண்டரைக்கோடி ஜனங்

களை உடைய இன்றைய இந்தியா 'சில அண்ணனமார்களால்' தங்களுக்காக மாத்திரம் ஆளப்படுகிறது. அந்த அண்ணன்மார்கள் யார்? நேருக்கள், டாடாக்கள், பிர்லாக்கள் போன்ற பணமூட்டைகளின் சில நூற்றுக் கணக்கான குடுமபங்கள், படேல், கோல்வால்கர் போன்ற மதவாதிகளின் சில பத்துக் கணக்கான குடும்பங்கள். "ஐயோ ஓட்டுப்போடும்போது நாம் எல்லாரும்தானே போட்டோம். இன்னும் பொதுஜன வாக்கெடுபபு வேறே வரப்போகுதாமே...நம்ம ஜனநாயக இந்தியா சில குடும்பங்களால் ஆளப்படுகிறதென்று சொன்ஞல் இதைவிடப் பொய்வேறே இருக்குமா...?" என்று அங்கலாய்க்கும் பாமர இந்தியனுக்குச் சில விஷயங்களைச் சுட்டிக் காட்டிஞல் போதும். ஊருக்குள்ளே நாட்டுக்குள்ளேபெரிய மனிதர்கள் என்று சொல்லிக் கொள்கிற அவர்கள் ஆட்சி செலுத்துகிருர்கள். தஙகளுடைய ஆடம்பர வேஷத்திலும புனிதத்தைப்பற்றிய பிரச்சாரத்திலும் ஊர்மக்களின் பாமரத் தனமையைப் பயன்படுத்திக்கொண்டு தங்களுக்குக் கட்சி சேர்த்துக்கொள்கின்றனர். எதிர்ப்பவர்கள் இருந்தாலும் அவர்களை 'ரௌடிஸத்திஞல்' குண்டர்களை வைத்து அடிதடியில் மடக்கித் தனிக்காட்டு ராஜாவாகிவிடுகிருர்கள். இந்த அண்ணன்மார்கள் அரசாங்க அதிகாரிகளையும சமுதாயத் தலைவர்களையும் (பார்க்கப் போஞல் அவர்களும் அண்ணன்மார்கள் கோஷ்டிதானே?) கைக்குள் போட்டுக்கொண்டு சதிகளும் தில்லுமல்லுகளும் செய்து தங்களைச் சேர்ந்தவர்களே பதவிக்கு வரும்படி ஏற்பாடுகளையும் அரசாங்கச் சட்டங்களையும் சமுதாய அமைப்பையும் வகுத்துக் கொள்கிருர்கள். சென்ற தேர்தலின்போது எதிர்க் கட்சிக்கு ஓட்டுப்போட்டால் தொழிற்சாலைகளிலிருந்து வேலையைவிட்டு நீக்கிவிடுவோம் என்று முதலாளிகளும், பண்ணைகளிலிருந்து விவசாயிகளைத் துரத்திவிடுவோம என்று மிராசுதார்களும பயமுறுத்தி வோட்டுப் பறித்த விஷயம எல்லோரும் அறிந்ததே. எனவே விளங்குவது என்னவென்ருல் பொருளாதார சமத்துவம் இல்லாத எல்லா நாடுகளும் சில குடும்பங்களால் மாத்திரமே அது ஜனநாயகம் என்று சொல்லப் பட்டாலும் சரி வேறு என்ன நாயகம் என்று சொல்லப் பட்டாலும சரி, ஆளபபடுகிறது என்பதுதான். எனவே இந்த நாடுகளுக்குக் குடும்பப் பூசல்கள் அண்ணன் தம்பிச் சண்டைகள் தாங்க முடியாத தலைவலியாக இருந்து வருகின்றன.

இன்றைய நிலைமையைப் பரிசீலனை செய்து பாருங்கள். இந்த 'அண்ணன்மார் கூட்டங்களால்' ஆளப்படும் நாடுகள் எல்லாம் ஒன்ருகச் சேர்ந்து கொண்டிருக்கின்றன. மேற்கு ஐரோப்பிய நாடுகளில் அட்லாண்டிக் ஒபபந்த அச்சு இதைச் சட்ட பூர்வமாக உருவாக்கி விட்டிருக்கிறது. இதைப் போன்றதே காமன்வெல்த் அச்சும. இந்த அண்ணன்மார்கள் 'எந்த நல்ல காரியத்துக்காக' ஒன்று சேர்ந்து கட்டி அணைத்துக்

கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்ப்போம்.

உள்நாடுகளிலே இவர்கள் தங்களுடைய கோடிக் கணக்கான சகோதரர்களைப் பொருளாதாரத் துறையில் சுரண்டிக் கொழுத்துக் கொண்டிருக்கிறார்கள். இது நிலைத்து நடைபெற்றுவரவேண்டும். கடவுள அருளால் தாங்களும் தங்கள் பரம்பரையும் கைநகத்தில் அழுக்குப்படாமல் உயர்ந்த ஆசனங்களில் கம்பீரமாக அமர்ந்து இனிய மதுவை எழில் குலுங்கும் மங்கையரின் கரங்களில் பெற்று அருந்தியவாறு ஆட்சி நடத்திக்கொண்டிருக்கவேண்டும். இவர்களுடைய மனத்துக்குப் பிடிக்காத ஜாதியார்கள், நிறம் உடையவர்கள், பழக்க வழக்கங்களை அனுஷ்டிப்பவர்கள் என்றென்றும் இவர்களுடைய அடிமைகளாக இருக்கவேண்டும். இவைதாம் இவர்களுடைய லட்சியங்கள். இது நடைபெறுமா?

ஏற்கெனவே சொன்னோம். இவர்களுடைய நாடுகளில் 'தம்பிமார்களின்' குமுறல் அதிகரித்து வருகிறது, உள்நாட்டுப் பூசல்கள் மலிகின்றன என்று. இதைச் சிறிது ஆழ்ந்து கவனிக்கவேண்டும். இந்த அண்ணன்மார் சுகபோகங்களில் கிடக்கத் தம்பிமார் பட்டினியால் செத்துக் கொண்டிருக்கின்றனர். விலைவாசி உயர்வு, வேலை இல்லாத் திண்டாட்டம் முதலிய தொல்லைகளால் அவர்கள் வாழ முடியாத நிலைமையில் உயிர்வாழ்வதற்குப் போதுமான பொருளாதார வசதி கூட இல்லாமல் தவித்துக் கொண்டிருக்கின்றனர். ஆனல் தம்பிமார் வறுமைக்குப் பழக்கப்பட்டவர்கள். இன்றைக்கு அரிசிச் சாதம் சாப்பிட்டால் நாளைக்குச்சோளமோ ராகியோ கூடச் சாப்பிட்டுக்கொள்வார்கள். இன்றைக்கு வெறும் பாயில் தலையணை இல்லாமல் படுத்தால் நாளைக்கு வெறும் தரையில்கூடப் படுத்துஉருள்வார்கள். ஆனல் ஆரஞ்சு ரஸம் சாப்பிட்டவர்களால் ஆரஞ்சு கிரஷ்ஷோடு திருப்தி அடைந்துவிட முடியுமா? முடியவே முடியாது. பழக்கம் அவர்களை அப்படிச் செய்யவிடாது. வேடிக்கையாகச் சொல்லவில்லை. எப்பொழுதுமே இந்த அண்ணன்மார் கோடிக்கணக்கான நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரம் எவ்வளவு சதவீதம் குறைந்துவிட்டாலும் சரி தங்களுடைய லாபம் ஒரு சதம்கூடக் குறையவே கூடாது என்ற திடமான கொள்கை உடையவர்களாயிருந்திருக்கிறார்கள்; இருந்து வருகிறார்கள்.

இதனல் தம்பிமார்களின்கஷ்டம அதிகரிக்க அதிகரிக்க அவர்களுடைய கோபமும் வளர்ந்து வருகிறது. பெரும்பான்மையான மக்களின் கோபம் நாட்டில் உருவாகிறது என்று கண்டவுடனே அந்த நாடுகளின் முதலாளித்துவ அரசாங்கங்கள் அதைச் சமாளிக்க முயலும் விதமே வேறு. அப்பொழுதுதான் 'வியாபாரத்தைப் பெருக்கவேண்டும். தொழிற்சாலைகளை அதிகரிக்க வேண்டும் எல்லோருக்கும். வேலை கொடுத்தாகவேண்டும்' என்ற கூச்சல்கள் நாட்டின் பெரிய தலைகளின் வாய்களிலிருந்து கிளம்புகின்றன. ஆனல் அதே சமயத்தில்

இந்த நாடுகளைப் பீடித்திருக்கும் வறுமை உற்பத்தியாகும் சாமான்கள் விலைபோகாமல் செய்துவிடுகின்றன. ஜனங்களிடம் பணம் ஏராளமாக இருந்தால்தானே அவர்கள் புதிய சாமான்களை வாங்குவார்கள். உயிர்வாழ்வதற்குப் போதுமான சம்பாத்தியம்கூட இல்லாமல் திண்டாடிக்கொண்டிருப்பவர்கள் ஆடை ஆபரணங்களையும் மற்றவற்றையும் வாங்குவது எங்கே? நமது நாட்டில்ஏராளமாக மில் துணி குவிந்துவிட்டது என்று சில மாதங்களாகக் கூச்சல்போடப் படுகிறது. ஆனால் நமது அக் கம்பக்கங்களில் எத்தனை பெண் மணிகள் மாற்றிக்கட்ட வேறு துகில் இல்லாமல் ஒற்றைச் சிலைகளுடன், கந்தல் துணிகளுடன் காலங் கழிக்கின்றனர் என்பதை யாராவது சிந்தித்துப் பார்த்ததுண்டா...? ஐந்து ரூபாய்க்கு ஒரு சிலை விற்கிறது என்றால் அதைக்கூட வாங்கக்கூடிய நிலைமையில் நாம் இல்லையே...?

இந்தநிலைமையில் உள்நாட்டில் விலைபோகாத சாமான்களை வெளிநாடுகளில் கொண்டு போய்க் கொட்ட முதலாளித்துவ நாடுகள் பறக்கின்றன. மார்க்கெட்போட்டி ஆரம்பமாகிறது. பொருளாதார ரீதியிலோ அரசியல் ரீதியாகவோ பிறநாடுகளை அடிமைப் படுத்தியாக வேண்டுமென்ற ஆத்திரத்தில் முதலாளித்வ நாடுகள் பாய்கின்றன. இரண்டு வியாபாரிகளுக்குஇடையே நடக்கும்போட்டிகள் சில சமயங்களில் கேவலமான அளவிற்குப் போய் விடும். ஆனால் இந்த நாடுகளின் வியாபாரப் போட்டிகள் உள்ளூறக் கவனிப்பவர்களுக்கு மிகமிகக் கேவலமானதாக அருவருக்கத்தக்கதாக இருக்கும்.

போர்கள் ஏற்படுவதற்கு, வெளிப்படையாகக் கூறப்படுகின்ற காரணங்களை விட இதைப்போன்ற உள் நாட்டு நிலைமைகள் தாம் உண்மையானவையாகும். தொகுத்துக் கூறினால், ஒவ்வொரு நாட்டிலும் நூற்றுக்குத் தொண்ணூறு விகிதம் இருக்கும் உழைத்துப் பிழைக்க வேண்டிய மக்கள் உயிருடன் இருக்க வேண்டுமானால் அவர்கள் எல்லோருக்கும் வேலை கொடுக்க வேண்டும். லாபம் கருதி வாழும் முதலாளித்துவ சமுதாயத்தை உடைய அரசாங்கள் முதலாளிகளின் அரசாங்கங்களாகி விடுவதால் அவர்களால் பெரும்பாலானவருக்கு வேலை கொடுக்க முடிவதில்லை. வேலை செய்பவர்களால் உற்பத்தி ஆனவற்றையே விற்பனை செய்ய முடியாத நிலையில் ஏற்படும் வியாபாரப் போட்டிகள் ஏகாதிபத்திய வேட்டைக்காரர்களாக அவர்களை மாற்றுகின்றன. எனவே ஒவ்வொரு நாடும் என்றும் போரைஎதிர் பார்த்துக் கொண்டிருக்க வேண்டியதாகவே ஆகிறது.

இனி, வேலை இல்லாத் திண்டாட்டமும் வியாபார மந்தமும் ஒரு நாட்டில் அளவுக்கு மீறினதாகிவிடும்போது அந்தநாட்டில் விபரீத சம்பவங்கள் கூத்தாடத் தொடங்கும். கொள்ளையும் கொலையும் சர்வசாதாரணமானவைகளாகும். பயங்கரக் கூட்டங்கள் முளைக்கும். வேலை நிறுத்தங்களும் போராட்டங்களும் அதிகரிக்கும். இவைகள் ஏற்படும்போது அரசாங்கத்திற்கு இவற்றைச் சமாளிக்க

உள்ள ஒரேவழி வேலை கொடுப்பதுதான். பொருளாதார நிலையை உயர்த்துவதுதான். ஆனால் முதலாளித்வ அரசாங்கங்கள் இவற்றிற்கு மாறாகப் போலீசை அதிகரித்தும் ராணுவத்தை அதிகரித்தும் இந்த அராஜகங்களைத் தடுக்க முயலும். அபபொழுது அவர்களுடைய நிர்வாகச செலவு பன மடங்கு அதிகரிக்கும். அவற்றைச்சமாளிக்கப் புதிய வரிகள கிளம்பும். எனவே பொருளாதார நிலை மேலும் வலிவிழபபதல்லால் உயராது. இபபடி ஏற்படும் பொழுது எபபடியாவது ஒரு யுத்தம் வராதா......? இந்த ஊர் சுற்றிகளுக்குச் சிப்பாய் வேலைகளாவது கொடுத்துக் கொல்ல மாட்டோமா..............'' என்று இந்த நாடுகள் ஏங்க ஆரம்பிக்கின்றன. எனவே "நாங்கள் நிரந்தரசமாதானத்தைத்தான விரும்புகிறோம்" என்று இவர்கள் எவ்வளவு கூச்சலிட்ட போதிலும் உள்ளூற "யுத்தம் என்று வரும்" என்று எதிர்பார்பபவர்களாகிறார்கள்.

இந்தச் சமயத்தில் பண முட்டைகளும வியாபாரிகளும் போர்க்காலக் கொள்ளை லாபங்களை நினைத்து நாக்கில் நீர் ஊற யுத்த கோஷத்திற்கு ஆவேசம் ஊட்டுகிறார்கள். சாதாரண மனிதன் சண்டை வந்தாலாவது வேலை சௌகரியமாய்க் கிடைக்கும், நம் பெண்டு பிள்ளைகள் பிழைக்கும் என்று எண்ண ஆரம்பிக்கிறான்.

முதலாளித்வநாடுகள், என்றைக்கும இருக்கும் தங்களுடைய உள்நாட்டுப் பூசல்கள் முற்றி ஒரு நெருக்கடியான கட்டத்தை அடையும் போது.......... என்றைக்கும் இருக்கும் தங்களுடைய வியாபார மந்தமும பொருளாதார நெருக்கடியும வளர்ச்சி அடைந்து தாங்க முடியாததாகி விடுகிறபொழுது......... அதாவது நாட்டில் வேலையில்லாத்திண்டாட்டமும் தொழிலாளர்களின் கிளர்ச்சிகளும் நல்ல முதிர்ச்சி அடைந்து அரசாங்கம் தன்னைத்தானே சமாளித்துக் கொள்ளமுடியாத நிலைமை வந்துவிடும என்று பயப்படுகிற பொழுது ஏதாவது ஒருபக்கத்தில் போர்த்தீயை மூட்டி விடுகின்றன; அதில் குதிக்கின்றன.

இன்று ஒவ்வொரு நாடும் அளவுக்கு மீறின வேகத்தில் போருக்குத் தயாராகிக்கொண்டிருக்கின்றன. எந்தநாட்டிலும் போர்ப்பிரச்சாரம் வெகுவேகமாக நடந்து கொண்டிருக்கிறது. சென்ற யுத்தத்திற்குப் பிறகாவது ஒரு இருபது வருடகாலம் சமாதானம்நிலவியது. இந்த யுத்தம் அதன் பிற்கால விளைவுகளைச் செலுத்திக் கொண்டிருக்கும் வேகம் எந்தச் சமயத்தில் தீ மூளும் என்றே

சொல்ல முடியாத நிலைமையில் இருக்கிறது.

ஏன் என்றால், இந்த நாட்டின் நிலைமையையே எடுத்துக் கொண்டால் இன்றுகோடிக்கணக்கான பேர் வேலையில்லாத் திண்டாட்டத்தில் தவிக்கிறார்கள். தொழிற்சாலைகள் வியாபாரமந்தத்தைக் காரணமாகக் காட்டி இன்னும் ஆயிரக்கணக்கான ஆட்களை வெளியே தள்ளக் காத்துக் கொண்டிருக்கின்றன. வேலை நிறுத்தம் முதலிய பொது ஜன எழுச்சிகளை மிருகத்தனமான முறையில் அடக்குவதன்மூலம்ஏற்கனவே அரசாங்கம் பொதுஜனப் பகைவனாக, முதலாளித்துவத்தின் கைப்பாவையாக மாறிவருகிறது. பொருளாதார நெருக்கடியைத் தவிர்க்க எத்தனையோ தில்லுமல்லுகள் செய்தும் கழுத்து குறுகிக் கொண்டிருக்கிறதே அல்லாமல் விடுதலையைக் காணோம். இந்த நிலைமை குபேர அமெரிக்காவையே நடுநடுங்கச் செய்து கொண்டிருக்கிறது. மற்ற நாடுகளைப் பற்றிக் கேட்க வேண்டியதில்லை.

எனவே போர் அத்யாவசியமானது என்று எல்லாநாடுகளும் தெரிந்துகொண்டிருக்கின்றன. தயாராகிக் கொண்டிருக்கின்றன. இந்தப் பெருநோயிலிருந்து மனித இனம் மீள வேண்டுமானால் ஒரேவழி முதலாளித்துவம ஒழிக்கப் படுவதுதான. இந்தப்போர் முதலாளித்துவத்தின தலைவிதியை மாத்திரம அல்ல, மனித இனத்தின் தலைவிதியை மாத்திரமேயும் அல்ல தன் விதியையும் தானே நிர்ணயம் செய்து கொள்ள வேண்டியதாக இருக்கும.

சிலப்பதிகாரக் காட்சிகள்

விசு. திருநாவுக்கரசு

20. பாடிமனையில் நிகழ்ந்த ஆடல்

சேர வேந்தர் பாடிமனையில் அமளி மீது அமர அமைச்சரும் பிறரும் அமர்ந்தனர்.

'நிலவுலகினையாளும் சேரர் பெருமான் நீடுவாழ்க' என்ற வாழ்த்தொலி ஏக காலத்தில் எதிர்முழக்கி வந்தது. வந்த வழியே கொங்கணக்கூத்தரும் கருநாடகரும் வந்து புகுந்தனர். வணங்கி நின்றனர். சேர வேந்தர் தலையசைத்து நல்வரவு கூறினர். அணியாலும் மணியாலும் அழகிய மலராலும் ஒப்பனை பூண்ட வனப்பினராய் வந்த ஆடவரைத் தொடர்ந்து ஆடல் வல்ல மகளிரும் வந்தனர். வண்டு யாழ் ஒலிக்கக் குயில் கூவ, அரும்பவிழ இளவேனில் வந்தது. வாரார் நம் காதலர் என்னும் வரிப்பாடலை அவர்கள் பாடினர். ஆடலும் தொடர்ந்தது.

இருள்படப் பொதுளிய
சுருளிருங் குஞ்சி
வடம்சுமந்(து) ஓங்கிய
வளரிள வனமுலைக்
கருங்கயல் நெடுங்கண்
காரிகை யாரோ(டு)
இருங்குயில் ஆல
இனவண்(டு) யாழ்செய்
அரும்பவிழ் வேனில்
வந்தது; வாரார்
காதலர் என்னும்
மேதகு சிறப்பின்
மாதர்ப் பாணி
வரியொடு தோன்ற

இக்காதற் கருத்தமைந்த பாட்டை ஆடவரும் ஆடல் வல்ல மகளிரும் பாடிவந்தனர். ஆடிநகர்ந்தனர்.

தமிழ் இலக்கியம் கூறும் ஐம்பததாறு நாடுகளுள் கொங்கணமும் கருநாடகமும் அடங்கும். அவ்வாறே பதினெட்டு மொழிகளிலும் இவை இரண்டும் அடங்கும். கருநாடர் என்பவர்கள் தற்காலத்தில் மைசூர் நாட்டில் வாழும் கன்னடர்களேயாவர். கொங்கணர் என்பார் மேற்கே மேற்குத் தொடர்ச்சி மலையையும், கிழக்கே அரபிக் கடலையும், தெற்கே கூர்ச்சரத்தையும், வடக்கே கோவாவையும் எல்லையாகக்கொண்ட நாட்டினராவர். இவர்கள் பாடியும் ஆடியும் வந்தவை சேரர்களுக்குக் களிப்பை நல்கிய காரணம், மகளிர்களைப் போலவே ஆடவரும் ஆடல் வல்லவராய் அணி அணியாய்க் கலந்தும், பிரிந்தும் பாடல் கருத்துக்கேற்பத் தனித்தும் ஆடல் புரிந்தமையேயாம். ஆடல் மக

ளிர்க்கு அவசியமான கட்டுட லும் கண்ணழகும் அம்மக ளிர்க்குப் பொருந்தி இருந்ததை அடைமொழிகள் தெளிவாய்க் காட்டுகின்றன.

ஆடவரும் மகளிருமாய்க் கலந்து ஆடல் நிகழ்த்தியவர் கள், தலைவியும் தோழியுமாய்ப் பேசவேண்டிய சந்தர்ப்பம் வந் ததும் ஆடவரெல்லோரும பிரிந்துபோக மகளிரெல் லோரும் தலைவியும் தோழியு மாய்த் தனித்தனியாய்க் கூடி வந்தனர். அப்போது தோழியை நோக்கிய தலைவி, 'கார்காலம் வந்தது. அதைக் குயில் கூவிக்காட்டுகிறது. வண்டு பாடி அழைக்கிறது; அரும்பு இதழ் மலர்ந்து கூறு கிறது; காதலர் கடிந்த வரு வதாய்க் கூறிய காலமும் வந் தது. அவரோவாரார். அதுவோ வந்து விட்டது' என்று சொல்லி வருந்துகிருள். இத்தகைய இளவேனிற்குரிய பாடலை இனிமையாய்ப்பாடி ஆடினர். "போர் முகம் நோக்கி அணி அணியாய்த் திரண்டு செல்லும் யானைகளைப்போல கருமுகில்கள் வானவீதியில் சென்றுகொண்டிருந்தன. சிறிது நேரத்தில் இடி இடித்து உறுமி 'சோ' என மழையும் வந்தது. காதலர் தேரும் வந் தது. ஆதலால் நீ ஒப்பனை செய்துகொள்" என்று தோழி கூறுவதாய் வரும் இன் னிசைப் பாடலுக்கு ஏற்ப அபி நயம் செய்து குடகர் மகளிர் தோன்றினர்.

இத்தகைய கார்காலக் குரவைப் பாடல்களைப் பாடி யும் ஆடியும உளமகிழ்வித்த மகளிர்ககும் மற்றவர்களுக்கும ஆபரணங்களையும் அரிய பரிசு களையும் ஆடலாசிரியன் கூறிய வண்ணம் சேரன் நல்கினன்.

அதே சமயத்தில் வந்து வணங்கிய வாயில் காப்போன் "வேந்தே! தூதுவர் தலைவன்' சஞ்சயன் வந்துள்ளான். அவ னேடு நூற்றிரண்டு நாடகமக ளிர்கள் இன்னிசை இயக்கும இருநூற்று எட்டுக் குயிலுவர். தொண்ணூற்ருறு வகையினை யுடைய சமய சாத்திரக்கலை வல்ல நகைவேழம்பர் (சிரிப்பூட் டுபவர்) நூறுபேர். சட்டையிட்ட தலைவர் ஆயிரவர் — இவர்கள் எல்லோரும் வந்துள்ளனர். நூறு தேர்; ஐநூறு யானைகள்; பதினுயிரம் புரவிகள்; இன்ன இன்ன பொருள்கள் என எழுதி ஒட்டப்பட்ட வடநாட்டு வளங்கள், இவை நிறைந்த இருபதினுயிரம்சகடங்கள் வாயி லருகே வந்து நிற்கின்றன" என்று அறிவித்தான்.

வடநாட்டின் எல்லைக்கு வரு முன்பே வடவர் வணங்கி அனுப்பிய திறைப் பொருள் வாயிலிலே வந்து நின்றது. சேரனது கொற்றம நிற்கச் செய்தது. வாயில் காப்போன் கூறியது கேட்ட மன்னவன்:

> நாடக மகளிரும்
> நலத்தகு மாக்களும்
> கூடிசைக் குயிலுவக்
> கருவி யாளரும்
> சஞ்சயன் தன்னெடு
> வருக ......

என்று பணித்தான். வாயில் காப்போன் வழிகாட்டச்சஞ்ச யன் வந்து புகுந்து வணக்கங் கூறினன். இச் சஞ்சயன் கன்னரர் நூற்றுவரால் விடப் பட்ட வடநாட்டுத் தூதர் தலை வனவான். எனவே அவன் வருகையும வாய்மொழியும் அறியத் தக்க ஆர்வத்தையும் ஆவலையும் அங்கிருந்த எல்

லோருடைய உள்ளத்திலும் எழச்செய்தது இயல்பேயாகும்.

இவ்வாறு வந்த சஞ்சயன்:

வேற்றுமை யின்றி
  நின்னொடு கலந்த
நூற்றுவர் கன்னரும்
  கோற்றொழில் வேந்தே!
வடதிசை மருங்கின்
  வானவன் பெயர்வது
கடவுள் எழுதவோர்
  கற்கே யாயின்
ஓங்கிய இமையத்துக்
  கற்கால் கொண்டு
வீங்குநீர்க் கங்கை
  நீர்ப்படை செய்து
ஆங்கு யாம்தரும்
  ஆற்றலம் என்றனர்

"செங்கோல் வேந்தே! உன்னோடு மாறுபாடு இல்லாது நட்புரிமை பாராட்டிவரும் மன்னவராகிய கன்னரர் நூறு பேரும் சேரவேந்தர் வடக்கு நோக்கி வருவது கண்ணகியார்க்குக் கற்கொண்டு வரத் தக்க ஒரு காரணம் பற்றிய தேயானால் தாங்களே இமயத்தில் கல்லெடுத்து அதைக் கங்கையில் நீராட்டிக் கொண்டு தரும ஆற்றலுடையோம் என்றனர்" என்று கூறினான்.

பேராற்றங்கரையில் சேரவேந்தர் கொண்ட ஒரு நோக்கம கண்ணகியார்க்குக் கல்லெடுத்துக் கங்கையில் நீர்ப்படை செய்து கொண்டுவருவது என்பதாயிருந்தது. இமயமிருந்து குமரிவரும முனிவர்கள் கூறிய செய்திக்குப் பிறகு கண்ணகியாரின் நீராட்டிய கல்லைக் கனகவிஜயர் தலைமீது சுமத்தி வருவது என மறு நோக்கமும் உருக்கொண்டது. இவ்விரு நோக்கங்களில் முதல் நோக்க மொன்றே முரசு முழக்கி அறிவிக்கப்பட்டது. எனவே கன்னரர்க்கு இது தெரியக் காரணமில்லை. இதை மற்றவர்க்குவெளிப்படையாய்ப் புலப்படுத்திக் கூறவேண்டிய சந்தர்ப்பம் இயல்பாகவே இப்பொழுது ஏற்பட்டு விட்டது. சேரன பேசுகிறான்:

பால குமரன்
  மக்கள் மற்றவர்
காவா நாவில்
  கனகனும் விசயனும்
விருந்தின் மன்னர்
  தம்மொடுங் கூடி
அருந்தமிழ் ஆற்றல்
  அறிந்திலர் ஆகெனக்
கூற்றம் கொண்(டு) இச்
  சேனை செல்வது
நூற்றுவர் கன்னரர்க்குச்
  சாற்றி யாங்குக்
கங்கைப் பேர்யாறு
  கடத்தற்கு ஆவன
வங்கப் பெருநிரை
  செய்க —......—

"பாலகுமரன் மக்களாகிய நாவடக்கமில்லாத கனகனும் விசயனும் தமிழரசர் வலிமையறியாத சில புதிய அரசர்களுடன் கூடி இகழ்ந்தனர் என்பதால் எமனை யழைத்துக் கொண்டு இப்படை வடநாடு நோக்கி வருகிறது, கன்னரர் நூற்றுவர்களும் இதனைக் கூறிக் கங்கை நதியைக் கடத்தற்கு வேண்டிய ஓடங்களை மிகுதியாக ஏற்பாடு செய்க" என்று பணித்தான். பணியேந்தி, சஞ்சயன் சென்றான்.

இங்கு சேரவேந்தர் பேசிய சொற்கள் சொற்செட்டிலும், ஆழ்ந்த பொருளிலும் அடங்கிய சினத்திலும பிறந்தவை. சொற்களிலே சூடு ஆறிவிடவில்லை, அதற்கான சமயமும் வந்துவிடவில்லை. சினம் நீறு பூத்த நெருப்பாய் இருக்கிறது, அது பகையரசர் முன்னே அனலாய், அது எழுப்பும் அலையாய்

புகைப்படங்கள்

பொங்கல் மலரில் வெளியிடத் தக்க புகைப்படங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்; வெளிவராத படங்களைத் திரும்ப அனுப்பி வைத்துவிடலாம். ஆர்வமுள்ளவர்கள் புகைப்படங்களை அனுப்பி வைக்க வேண்டுகிறோம்

ஆசிரியர்

அவர்களைச் சுட்டெரிக்கும் என்பதற்கான அறிகுறிகள் நிரம்ப இருக்கின்றன. வள்ளுவர் கூறிய நாவடக்கத்தை வடவர் அறியவில்லை. அதன் விளைவைக் காட்டி, வரத்தக்க பயனை அநுபவிக்குமாறு சேரன் தன் ஆற்றலைக் காட்டி வர முடிவு கொண்டதைச் சொற்கள் தெளிவாய்க் காட்டுகின்றன. 'இப்படை எமனையும் உடனழைத்து வருகிறது' என்ற சொற்களிலேதான் எவ்வளவு அழுத்தமாய் வெற்றியிலே ஐயமற விழுந்த நம்பிக்கை வெளிப்பட்டு வருகிறது! இகழ்ந்த வடவர் இருவரை அடக்க வரும் படைகளுக்கு ஓடமனுபப, வடவருக்கே ஆணை இடப்படுவதும், அதை முடிமேல் ஏற்று அவர்கள் நடப்பதும் சேரனின் பேராற்றலுக்குப் பெரியதொரு எடுத்துக் காட்டாய் நிற்கக் காணுகிறோம.

காட்டிலேவிளைந்த சந்தனம், கடலிலே பிறந்த முத்து இவைகளைத் தம் நெஞ்சிலே மலர்ந்த அன்பிற்கு அடையாளமாக சட்டை அணிந்த ஆயிரம் தூதர்கள் மூலம் பாண்டியன் அனுப்பி இருந்தான். கண்ட சேரன் கடிதத்தின் மூலம் தன் மகிழ்ச்சியைப் பாண்டியனுக்கு அறிவித்தான்.

சஞ்சயன் போனபின்
  கஞ்சுக மாக்கள்
எஞ்சா நாவினர்
  ஈரைஞ் ஞூற்றுவர்
சந்தின் குப்பையும
  தாழ்நீர் முத்தும்
தென்னர் இட்ட
  திரையொடு கொணர்ந்து
கண்ணெழுத் தாளர்
  காவல் வேந்தன்
மண்ணுடை முடங்கலம்
  மன்னவர்க் களித்தாய்(கு)
ஆங்கவர் ஏகிய
  பின்னர் ....

சஞ்சயன் வருகையாலும், பாண்டியன் அனுப்பிய பரிசாலும் சேரனுக்கு உள்நாட்டிலும் வட நாட்டிலும் இருந்து வரும் உயர்வை இளங்கோ நமக்குக் காட்டுகிறார். சேரன் தன் மகிழ்ச்சியைத் தெரிவிக்கிறான கடிதத்தின் மூலம. கடிதமெழுதுவோர் கணணெழுத்தாளர் எனக் குறிக்கப்படுகின்றனர். அரசனுடைய அடையாள முத்திரையிட்டுக் கொடுத்த கடிதத்தைப் பாண்டியர் பெற்றுக் கொண்டனர். தற்கால அரசர்களிடம் காரிய தரிசிகளும், அடையாள இலச்சினைகளும் இருப்பது அவர் பெருமைக்கு இலககாகிறது. இவை சேரர் ஆட்சியில் இயல்பாய் இருந்ததை நாம் அறிகின்றபோது ஆட்சி அமைப்புக்கும் அரசர் பெருமைக்கும் அவசியமான எல்லாமிருந்தன என்பதை உணருகிறோம்.

நீலகிரியிலமைந்த பாடிமனையை விட்டு வடநாடு நோக்கிக் கடலெனப் படைகள் புறப்பட்டன. அக் கடலிடை மிதந்து வரும அலை எனக் கொடிகள் காட்சி நல்கின.

PRINTED BY AR. PERIYANNAN AT THE SENTHAMIZH PATHIPPAKAM
EAST MAIN STREET, PUDUKKOTTAI.
EDITOR & PUBLISHER: MURUGU SUBRAMANIAN